வாழ்க்கை வெற்றிக்கு

# வள்ளுவம்




## தமிழண்ணல்

# வாழ்க்கை வெற்றிக்கு வள்ளுவம்

Valluwam for a successful life

தமிழண்ணல்

**மீனாட்சி புத்தக நிலையம்**

மயூரா வளாகம், 48, தானப்ப முதலி தெரு, மதுரை - 625 001.

தொலைபேசி: அலுவலகம் : 2345971 வீடு : 4524500517

ஈமெயில்: meenakshiputhakam@hotmail.com

முதற் பதிப்பு : திருவள்ளுவர் ஆண்டு 2046, ஆவணி, செப்டம்பர் 2015.
**விலை.ரூ.75/-**

<u>நூல் விவரப்பட்டியல்</u>

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | வாழ்க்கை வெற்றிக்கு வள்ளுவம் |
| ஆசிரியர் | : | தமிழண்ணல் |
| நூலின் தன்மை | : | தன்முன்னேற்றச் சிந்தனை |
| விலை | : | ரூ. 75.00 |
| பக்கங்கள் | : | 128 |
| எழுத்து | : | 11 புள்ளிகள் |
| நூல் அளவு | : | 14 X 22 செ.மீ. டெம்மி |
| பைண்டிங் | : | அட்டைக் கட்டு |
| தாள் | : | வெள்ளைத்தாள் |
| ஒளி அச்சு | : | ஆதவன் பிரிண்டர்ஸ், மதுரை. |
| அச்சிட்டோர் | : | கணபதி எண்டர்பிரைசஸ், சென்னை-5 |

**MEENAKSHI PUTHAKA NILAYAM**
**Mayura Complex, 48, Dhanappa Mudali Street, Madurai-625 001.**
**☎ Off : 0452-2345971 Resi : 4524500517**
E-Mail: meenakshiputhakam@hotmail.com

**உலகில் முதன் முதலாகத்**

**தன்னம்பிக்கை நூல் எழுதிய சான்றோர்**

**திருவள்ளுவர்.**

திருக்குறள் இவ்வுலக வாழ்வு சிறப்புற
வழிகாட்டும் நூல்.

தனி மனிதனை முன்னிறுத்தி, அறங்கூறிச்
சமுதாயம் மேம்பட வழிகாட்டுவது இது.

இதில் கற்பனை கடந்த உலகம் பற்றியோ
கவைக்குதவாத புராணங்கள் பற்றியோ
விரித்துரைக்கவில்லை .

குறள்கள் அனைத்தும் மக்களை, படிப்பவரை, அதன்படி நடப்பவரை முன்னேற்றவழி நோக்கி அழைத்துச் செல்லும் ஆற்றலுடையவை.

**இவை தமிழ் மந்திரங்கள்!**

நிறைமொழி மாந்தராம் திருவள்ளுவர் அருளிய
மறைமொழியாகிய மந்திரங்கள்.
இவற்றைப் படிக்கப் படிக்கப் பயனுண்டாகும்.
இவற்றில் வரும் ஒவ்வொரு சொல்லும்
பலிக்கும் ஆற்றலுடையவை. வாழ்க்கையில் மனஉரம் பெற, உடல் நலமுற, கல்வி வளம் சேர, வேலை வாய்க்க, திருமணம் ஆக, மக்கட் பேறு பெற, தொழில் வளர, செல்வம் செழிக்க, துன்பம் விலக, தோசங்கள் நீங்க திருக்குறளை ஓதுங்கள்! திரும்பத் திரும்ப ஓதுங்கள்!
இளைஞர்க்கு இத்தமிழ் மந்திரங்களை பாராமல் ஒப்பிக்க, பாராமல் எழுதப் போட்டிகள் வைத்துப் பரிசுகள் தாருங்கள். நல்லன எல்லாம் தரும் நம் தமிழ் மந்திரங்கள் இவை.

# திருவள்ளுவரின்
# வாழ்க்கை முன்னேற்றச் சிந்தனைகள்


| | | |
|---|---|---|
| 1. | அறநெறி வாழ்வு (Virtual life with eternal values) | 7 |
| 2. | ஆளுமை மேம்பாடு (Personality developement) | 33 |
| 3. | தன்னம்பிக்கை (Self Confidense) | 56 |
| 4. | துன்பத்தைத் துன்புறுத்துதல் (Making worry to worry) | 81 |
| 5. | தன்முயற்சித்தவம். (Penance of Perseverance) | 109 |

## தமிழ் மறை தந்த தன்னிகரற்ற சிந்தனைகள்

என்பிலதனை வெயில் போலக் காயுமே
அன்பில தனை **அறம்**

மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
**அறம்**சூழும் சூழ்ந்தவன் கேடு

பிறர்நாணத் தக்கதுதான் நாணான் ஆயின்
**அறம்**நாணத் தக்கது உடைத்து

கதங்காத்துக் கற்றடங்கல் ஆற்றுவான் செவ்வி
**அறம்**பார்க்கும் ஆற்றின் நுழைந்து

அஞ்சுவ தோரும் **அறனே** ஒருவனை
வஞ்சிப்ப தோரும் அவா.

**அறம்** என்பதை ஒரு பேராற்றல் – இறையாற்றல் – ஆக்கவும் அழிக்கவும், வல்ல ஒரு கருத்து நுண்பொருள் எனக் கூறி, அதற்கு அஞ்சி நடக்க வேண்டும் என்பது முற்றிலும் புதிய சிந்தனை.

தன்னைத்தான் காதலன் ஆயின் – தீயதை எண்ணாதே.
தன்னைத்தான் காக்க முயல்க – சினம் தன்னையே பாதிக்கும்
தன்னைத்தான் கொண்டொழுகுதல் – பெருமை.

தன்னை மையமிட்டு விரிவது உலகம். தான் உளனாயிருந்து, உழைத்துச் செல்வவளம் சேர்த்து வாழ வேண்டும். பிறர் சொல்லியோ, கட்டுப்படுத்தியோ நல்வழி ஒழுகுதல் பெருமையாகாது. தானே உணர்ந்து தன்னைக் கட்டுப்படுத்தி நல்வழி ஒழுகுவது பெருமை.

**இடும்பைக்கு இடும்பை படுப்பர் இடும்பைக்கு
இடும்பை படாஅ தவர்**

**மடுத்த வாய் எல்லாம் பகடன்னான் உற்ற
இடுக்கண் இடுக்கட் படும்.**

உலக வாழ்வில் துன்பம் ஒரு தொடர்கதை. முயற்சித்துன்பம் ஒரு காரிய வெற்றிக்கு உழைத்துப்படும் துன்பம். எத்துன்பம் வரினும், இவை எல்லாம் இயல்பே எனச் சற்றும் சலியாதிருந்தால், அத்துன்பம் தோல்வியுற்றுத் துன்பப்படும். இது உலகியலறிந்து சொன்ன புதிய சிந்தனை.

எத்தனை தன் முன்னேற்றச் சிந்தனைகள் வந்தாலும் அவை இச்சிந்தனைகளுக்கு ஈடாகாது.

## அறநெறி வாழ்வு - அடிப்படைக் குறள்கள்

1. என்பிலதனை வெயில்போலக் காயுமே
அன்பிலதனை அறம்

2. மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறம் சூழும் சூழ்ந்தவன் கேடு.

3. கதங் காத்துக் கற்றடங்கல் ஆற்றுவான் செவ்வி
அறம்பார்க்கும் ஆற்றின் நுழைந்து (130)

4. பிறர்நாணத் தக்கது தான் நாணான் ஆயின்
அறம் நாணத்தக்க துடைத்து (1068)

5. அஞ்சுவ தோரும் அறனே ஒருவனை
வஞ்சிப்ப தோரும் அவா (366)

6. அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்
புறத்த புகழும் இல (39)

7. ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வாய் எல்லாம் செயல் (673)

8. செயற்பால தோரும் அறனே, ஒருவற்கு
உயற்பால தோரும் பழி

9. சிறப்பீனும் செல்வமும் ஈனும் அறத்தினூங்கு
ஆக்கம் எவனோ உயிர்க்கு (31)

10. மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற (34)

# 1. அறநெறி வாழ்வு

## கடவுள் நம்பிக்கை

கடவுள் தூணிலும் இருக்கிறார், துரும்பிலும் இருக்கிறார் என்பது பழமொழி. அவர் இல்லாத இடமே இல்லை. இவ்வாறு பேசும் உலகம் கொலை செய்து மறைக்க முயல்கிறது. சாதுரியமாகக் கொள்ளை அடிக்கிறது. கடவுளை உண்மையாக நம்பினால் உலகில் கொலை, களவு, கற்பழிப்பு நடக்குமா?

சிலர் அப்படியே கடவுளுக்கு நம் களவுகள் தெரிந்தாலும், ஏதாவது பரிகாரம் செய்து, பணம் செலவழித்துப் பழியினின்றும் தப்பித்து விடலாம் என எண்ணுகின்றனர். பணம் செலவழிக்கிற அளவு, கடவுள் மன்னித்து அருள் புரிவார் என்று நம்புகின்றனர். பக்தி என்பது இன்று புண்ணிய வியாபாரம் ஆகிவிட்டது.

ஒரு மொகலாய மன்னன், அவன் தன் அரண்மனைப் பணிப் பெண்ணை விரும்பினான். ஒரு நாள் அவளைத் தவிர, மற்ற எல்லோரையும் திருவிழாவுக்கு என்று வெளியூருக்கு அனுப்பிவிட்டான்.

பணிப் பெண்ணைத் தன் அறைக்கு அழைத்தான். அவள் வந்ததும் அறையைச் சாத்தினான். சன்னல்களை அடைத்தான்.

“இப்போது பணிப்பெண்ணே அருகில் வா! நம்மை யாரும் பார்க்க முடியாது. யாருமே இல்லை. வா, அருகில் வா!” என்று கூறியபடி அவளை நெருங்கினான். அவள், “இல்லை மன்னா! அதோ இரண்டு கண்கள் நம்மைப் பார்த்தபடி உள்ளன?” என்றாள். ‘அட! யாரது? என் அரண்மனையில், என்னை மீறி உள்ளே நுழைந்தது?’ என்று வாளை

உருவினான். அவள், "மன்னா, அதோ அவர்! அல்லா!" என்றாள். அரசன் ஆடிப் போனான். கதவைத் திறந்தான். 'கள்ளி ஓடிப்போ!' என்று அவளை போகச் செய்து விட்டான்.

இதை முரு.பழ இரத்தினம் செட்டியார் சொல்லக் கேட்டதுண்டு.

மன்னன் உண்மையான கடவுள் நம்பிக்கை உடையவனாதலின், 'அல்லா' என்ற பெயரைக் கேட்டதும் தீங்கு செய்வதைக் கைவிட்டான்.

ஆனால் உலகில் பெரும்பான்மையர் கடவுள் நம்பிக்கை என்று சொல்லிக் கொண்டு அனைத்துத் தீமைகளையும் செய்கிறார்கள். பிறகு தப்பிக்க வழி தேடுகிறார்கள். கடவுளுக்குக் காணிக்கை செலுத்தித் தப்பிக்க வழி இருக்கிறதென்று நம்புகிறார்கள். இதனால் மேலும் மேலும் தீமை செய்வோர் தொகையே கூடுகிறது.

திருவள்ளுவர் அவர்களுக்குப் புத்தியில் படும் படியாக ஓர் உண்மையைச் சொல்கிறார்.

உலகில் காற்றைப் போல், ஒளியைப் போல் ஓர் இயற்கை ஆற்றல், பார்க்குமிடாமெல்லாம் நீக்கமற நிறைந்து காணப்படுகிறது.

அது நன்மைக்கு நன்மை தருகிறது
தீமைக்குத் தீமை தருகிறது.

பழி பாவம் செய்பவன் இன்புற்று வாழ்வதாக நினைப்பதெல்லாம் தவறு. சேற்றிலே கிடந்து உழல்வது பன்றிக்குச் சுகம், கலங்கிய குட்டையில் நீந்திப் புரள்வது, எருமைக்கு இன்பம்.

தீயவனின் சுகபோக வாழ்வென்பதும் இது போன்றதுதான். திருவள்ளுவர் சொன்னார், தம்பி! உலகை நான் நடத்துவது, அறம் என்ற எனது இறையாண்மையை வைத்துத்தான் அந்த அறம் வேறு, நான் வேறு அல்ல.

அறம் எப்போதும் நல்லதைக் காக்கும், அல்லதைப் புறந்தள்ளும்.

அறச் செயல்கள் அமைதியான வாழ்வு தருவதைப் பார்! அது தரும் இன்பம் களங்கமற்றது. அறவாழ்வு வாழ்பவனே உண்மையில் வாழ்கிறான்.

அறத்தைக் கைவிட்டவன் மனத்தில் - மன
ஆழத்தில் எரு குற்றவுணர்வு குத்திக் கொண்டே
இருக்கிறது. புறத்தே சுகவாழ்வு போல் தோன்றும் அது
உள்ளுக்குள்ளே குழைகிறது.

செடி வைத்து, பாத்தியில் தண்ணீர் ஊற்றினால் அது தழைக்கிறது, வெந்நீர் ஊற்றினால் அது பட்டுப் போகிறது. இதுவே அறநெறி என்ற ஆற்றலை உணர்த்தும்.

உலகில் தீமை தொற்று நோய் போல் பரவுகிறது.

தீமையைக் குறைத்து, அழித்து நன்மையை வளர்க்க அறம் எனும் இயற்கைப் பேராற்றலை நினைவூட்ட வேண்டும். இதனால் மக்களின் அறியாமை இருள் விலகி, உண்மையான நல்வாழ்வு என்ற ஒளி பரவும் என எடுத்தியம்பியுள்ளார்.

திருவள்ளுவரின் மனித நேய வெளிப்பாட்டின் உருவகமே அறம்!

உலகில் பிறந்த உயிர்கள் எல்லாமே இன்பமாக வாழவே முந்துகின்றன. திருவள்ளுவர் மனிதனை வாழும் உயிர் என்பார். மற்றவை உயிருடையன அவ்வளவே. வாழும் உயிராகிய மக்களும் தாம்தாம் இன்பமாய் வாழவே முந்துகின்றன.

இன்பமாய் வாழ்வதென்பது என்ன? வசதி வாய்ப்பைப் பெருக்கி, சுகமாக அமைதியாக எவ்விதக் கவலையுமின்றி வாழ்வது எனலாம். பிள்ளைகளை வளர்க்க அரும்பாடு படும் தாய், இவற்றினும் அதில்தான் இன்பம் காணுகிறாள். எனவே 'இன்பம்' என்பது, சூழலுக்கேற்ப

வேறுபடுவதென்பது போதரும். 'இதுதான் இன்பம்' என்று சுட்டிக்சொல்வது கடினம்.

களவு செய்து இன்பம் துய்ப்பவன், கையூட்டு வாங்கிக் கோடி கோடியாகத் தொகுப்பவன், கற்பழிப்பவன், ஏமாற்றி வாழ்பவன் எல்லோரும் 'இன்பமாக' வாழ்வதாகவே கருதுகின்றனர். நல்லவரினும் தீயோரே உலகில் இன்பம் துய்ப்பதாகத் தோற்றுகிறது. இதற்கு விடை என்ன?

**ஒழுக்கம் என்பது என்ன?**

'ஒழுகுதல்' என்பது 'சீராக நடத்தல்' என்றே பொருள்படும். எதிலும் ஓர் ஒழுங்கு தேவை. ஒழுங்காகவுள்ள எதுவும் அழகாக, நேர்த்தியாக இருக்கும்.

இசையில் தாள அறுதிக்குக் கட்டுப்பட்ட ஓர் ஒழுங்கு 'ஒழுக்கம்' இருப்பதால் அது இனிமை பயக்கிறது.

மூக்கு கண் காது அனைய உறுப்புக்களெல்லாம் அது அது அமைய வேண்டிய அளவு சீராக இருந்தால் – அதாவது ஓர் ஒழுங்குபட இருந்தால் அதற்கு 'எழில்' என்று பெயர். சிற்பங்களைப் பாருங்கள். அழகுடைய சிற்பங்களில் இவ்உறுப்பழகு சீராக அமைந்திருக்கும்.

வழியில் போகும்போது இடப்புறமே போவதென்பது ஓர் ஒழுங்கு. ஒருவரை ஒருவர் மோதி விடாமல், ஒரு வாகனம் வரும் வாகனத்தோடு மோதி அழிவு நேராமல் இது காப்பாற்றும்.

சாரை வரிசையில் (கியூவில்) ஒருவர் பின் ஒருவராய்ச் செல்வது ஓர் ஒழுங்கு. ஒருவரை ஒருவர் முந்தலாம்; எல்லோரும் ஒரே சமயத்தில் முண்டிமோதலாம் என்றும் சிலர் எண்ணுகின்றனர். அதனால் காலத்தாழ்வாகலாம். அழிவு நேரலாம்; குழப்பமுண்டாகலாம்; பயனற்றுப் போகலாம். அதைத் தடுக்கவே, 'இடப்புறம் போ', சாரை வரிசையில் செல் என்பன ஓர் ஒழுங்கு என்று பின்பற்றப்படுகின்றன. இதுதான் ஒழுக்கம் – இதுதான் அறமும் ஆகும்.

ஒழுங்கு உள்ளனவெல்லாம் நேர்த்தியாக இருக்கும்; அழகாக இருக்கும்; வலிமையுடையதாயிருக்கும். அதனால் அமைதியுண்டாகிறது; காலம்வீணாவதில்லை; குழப்பம் நேர்வதில்லை; அழிவேற்படுவதில்லை. அதனால் ஒழுங்கு நிலையான – நல்ல – பயனுள்ள இன்பத்தைத் தருகிறது.

நம் வாழ்க்கை நடைமுறையிலும் இவ்வாறு இயல்பான ஒழுங்கு ஒன்றைப் பேண வேண்டும்.

இசை பிசிரின்றி அமைவது அதன் ஒழுக்கம். உறுப்புக்கள் ஓர் ஒழுங்கில் சீர்பட அமைவது சிற்பத்தின் ஒழுக்கம். சாரிசாரியாய்ப் போகும் போது, முந்தாமல் வரிசை மாறாமல் போவது அதன் ஒழுக்கம்.

.அறநூல்கள் பல்வேறு அறங்களைக்கூறி, 'இங்ஙனம் நடக்க' என்பது, அடிப்படையான சில ஒழுங்குகளை முன்னுதாரணமாகக் கூறுவதேயாம். இயல்பாக நடக்க வேண்டிய முறைப்படியெல்லாம் நடப்பதே மனிதனின் ஒழுக்கமாகும். அது நாள்தோறும், ஒவ்வொரு சூழலிலும் கருதிக்கருதி வாழவேண்டியது. அறநூல்கள் இங்ஙனம் இயல்பாக நடக்கக் கூடியனவற்றில், அடிப்படையான சிலவற்றை முன்மாதிரியாக எடுத்துக் கூறுகின்றன. அவ்வளவே! நாம் சிந்தித்து அன்றாடம் செயற்பட வேண்டியன ஆயிரம் உண்டு!

அவை அனைத்தையும் உள்ளடக்கி ஒரே சொல்லில் சொன்னதுதான் 'அறம்' என்பது. 'இடப் புறமே போ' என்பது போல் 'அற வழியிலேயே நட' என்பதும் இயல்பான எளிய ஒன்றேயாகும். முன்னது சாலைவிதி; பின்னது வாழ்வு விதி.

ஏன்? ஒருவரை ஒருவர் முந்தக்கூடாதா? கண்டபடி விரைந்து நடக்கக் கூடாதா? ஒருவரைக் கீழே தள்ளிவிட்டு, அவர் மேலேயே நடக்கக்கூடாதா? அவர் மேல் ஊர்தியை ஏற்றிவிட்டு, ஓடிப்போகக் கூடாதா? கொலை செய்து செய்து பழக்கப்பட்டவன் கொலை செய்வதில் இன்பம் காண்கின்றானே? கற்பழிப்பவன் அதில் இன்பம் காண்பதாக எண்ணித்தானே, அவ்வெறியில் மேன்மேலும், ஈடுபடுகின்றான்?

இவை இரண்டையும் ஒப்பிட்டு, நன்கு சிந்தித்து உண்மை அறிய வேண்டும்.

'கொலை செய்வது' பலருக்கும் பழக்கப்பட்டுவிட்ட இன்று 'பயங்கரவாதம்' என நடப்பன யாவும் 'இன்பம்' தரும் செயல்களா? கற்பழிப்பது நாள் நடைமுறையாகி விட்டால், அங்ஙனம் ஈடுபடுபவன் தாயும் தங்கையும் கூட மானமுடன் வாழமுடியுமா? இன்று கையூட்டு வாங்கும் அரசுகளால், நாடு நலிவதை யாரும் கண்ணெதிரே காணவில்லையா?

எது இன்பம்?

மேன்மேலும் சிந்திக்க வேண்டும்; உண்மை புலனாகும் வரை எண்ணிப் பார்க்க வேண்டும். திருவள்ளுவர்,

**அறத்தான் வருவதே இன்பம்; மற்றெல்லாம்**
**புறத்த புகழும் இல** (39)

என்று கூறுகிறார். உண்மையான நிலையான பயனுள்ள இன்பம் அறவழி வருவதேயாம். பிறவாறு வருவனவெல்லாம் இன்பம் போல் தோற்றலாம்; ஆனால் அவை இன்பத்திற்குப் புறம்பானவை. மேலும் அவற்றால் பழிதான் உண்டாகும். இன்ப வாழ்வுக்குரிய இனிய வழி அறவழியே என்பது உறுதி; அதற்கு ஐயமில்லை.

## மானுட மதிப்பு :

மானுட மதிப்பு என்று பலவற்றைக் கூறுவர். அன்பு, இன்சொல், பொறுமை, இரக்கம் என அடுக்கலாம். இம்மானுட மதிப்புகளில் (Human Values) பல, நிலைபேறுடைய அடிப்படை மதிப்புக்களுமாகும். (Eternal Values) மேலை நாட்டார் பலவாறு விரித்து ஓதியவற்றைத் தமிழர்கள் மூன்றில் அடக்கிக் கொண்டனர். அவையே அறம் பொருள் இன்பம் என்பன. இவை மூன்றும் ஒன்றோடு ஒன்று இயைபுடையன; காரணகாரியத் தொடர்ச்சியுடையன. இன்பத்தை எய்தப் 'பொருள்' பயன்படும். பொருள்

என்பது செல்வம் மட்டுமன்று. உலகியல் நடைமுறை வாழ்வெல்லாம் 'பொருள் வாழ்வு' (Material life) என்றே கூறப்படும். பொருளில் அரசியலும் பண்பாட்டியலும் நாகரிகக் கூறுகளும் அனைத்தும் அடங்கும். அதனால் அது நடுநாயகமான மதிப்பாகிறது. இன்பம் என்பதும் ஓர் உயிர்ப்பண்பு. கறையற்ற இன்பம், வாழும் உயிர்களாம் மாந்தர்க்குப் 'பயன்' தரும் நல்ல மதிப்பாகும். பொருள் – கல்வி. இன்பம் – பயன். அறம் – வழி. அறமின்றேல் பொருள் பொருளாகாது; இன்பமும் இன்பமாகாது. 'சிறப்புடை மரபிற் பொருளும் இன்பமும் அறத்து வழிப் படூஉம்' (31) என்ற புறநானூற்றுத் தமிழ்ச் சிந்தனையை நோக்குக. எனவே அறம் என்பது மற்ற இரண்டு மதிப்புக்களுக்கும் மூலமதிப்புமாகும்.

ஒருவரை நமக்காக ஒரு தொழிலில் அமர்த்தும்போது அல்லது ஒரு செயலில் ஈடுபடுத்தும்போது அவரைத் தேர்ந்தெடுக்கும் சூழலில், அறம் பொருள் இன்பம் உயிரச்சம் என்ற நான்கு உறுதிப் பொருள்களை அளவுகோல்களாகக் கொள்ள வேண்டும் என்று திருவள்ளுவர் கூறுகிறார்.

மனிதர்களின் உயர்வு தாழ்வு, நன்மை தீமைகளை மதிப்பிட உதவும் மானுடமதிப்புக்கள் (Human Values) இவை என்பது பெறப்படுதல் காண்க. மேலைநாட்டார் மானுடமதிப்பு. நிலைபெறுமதிப்பு என்று கூறுவன அனைத்தையும் உள்ளடக்கியே நம் முன்னோர் உறுதிப் பொருள் எனக் கூறினர்.

ஒருவனது பொருள்வழி வாழ்வு -உலக வாழ்வு நடைமுறையும் அவன் இன்பம் துய்க்கும் நெறி முறைகளும் அவன் பேணும் அறம் அல்லது அறமல்லாத செயல்களும் அவனை இன்னானெனக் காட்டிக் கொடுக்குமாம். உயிர் மீது கொண்ட பற்றுதலால் வரும் அச்சமும் மனிதப்பண்பு மாற்றங்களுக்கு அடிப்படைக் காரணமாதலால் உயிரச்சமும் சேர்க்கப்பட்டுள்ளது.

**அறம்பொருள் இன்பம் உயிரச்சம் நான்கின்**
**திறம்தெரிந்து தேறப் படும். (501)**

தீதற்ற வழியில் வந்த செல்வம் அறத்தையும் தரும்; இன்பத்தையும் கொடுக்கும் என்பார் வள்ளுவப் பெருமான். இவை காரண காரிய இயைபுடையனவாதலை இதனால் அறியலாம்.

**அறன்ஈனும் இன்பமும் ஈனும் திறனறிந்து**
**தீதின்றி வந்த பொருள். (754)**

ஈட்டும் வழியறிந்து ஈட்ட வேண்டும்; அதையும் தீதற்ற வழியில் ஈட்ட வேண்டும். ஈனும் என்றால் 'கருவிருந்து ஈனுவதை'க்குறிக்கும். பொருளால் அறமும் இன்பமும் இங்ஙனம் உருவாகி வளர்ந்து பெறப்படும் என்பதாம்.

**பிறன்பொருளாள் பெட்டொழுகும் பேதைமை ஞாலத்து**
**அறம்பொருள் கண்டார்கண் இல் (141)**

பிறன்மனையாளை நயப்பது - தன் மனைவி அல்லாதவளை நேசிப்பது இன்பம் என நினைப்பாரை நோக்கி இது கூறப்படுகிறது. அது அறத்தையும் பொருளையும் அறிந்து நடப்பவரிடத்தே காணப்படாது என்பதாம். அஃதாவது அவ்விரு உறுதிப்பொருள்களுக்கும் முரணாவதால். இது 'இன்பம்' ஆகாதென்பது கருத்து. இதிலிருந்து இவை மூன்றும் இயைபுடையன; ஒன்றின் வழி ஒன்று அடையத்தக்கன; ஒன்று இன்றேல் மற்றுதும் பயனின்றி ஒழிவன என அறியலாம்.

**இருமை வகைதெரிந்து ஈண்டு அறம் பூண்டார்**
**பெருமை பிறங்கிற்று உலகு (23)**

யாருடைய பெருமை உலகில் விளங்கித் தோன்றும்? 'இடப்புறம் போ' என்ற படியும் போகலாம்; அதை மாற்றிக் கண்டபடியும் போகலாம். எது நல்லதென்று ஒருவர் சிந்தித்துத் தேர்ந்தெடுத்துக் கொள்வதே நல்லது.

பெருந்தன்மை பெருந்தன்மையைத் தூண்டுகிறது என்பார்கள். (Nobleness enkindleth Nobleness) அது போலத் தீமை தீமையைத் தூண்டுகிறது. ஒழுங்குக்குறை ஒழுங்குக்குறைக்கே வழிகாட்டுகிறது.

அதனால்தான் இரண்டினது வகையை ஆய்ந்தறிந்து, அறமே நல்லவழி என்று மேற்கொண்டவர்தம் பெருமை உலகில் விளங்கித் தோன்றும் எனக் குறிப்பிடுகிறார்.

ஒரு நாட்டின் புகழ்மிக்க பெரும்பதவியிலிருப்பவரே யாயினும், அவர் செய்யும் கேடுகள் – தீங்குகள் –ஒழுக்கக் குற்றங்கள் அறியப்படும் போது, அவர்தம் 'சிறுமை'தானே வெளிப்படுகிறது. யாரும் உள்ளூற அவரை மதிப்ப தில்லையே. இழிவைச் சம்பாதித்துச் சேகரிக்கும் இவர்களைப் பார்த்துத்தான், 'அறத்தைத் தேர்ந்து கைக்கொண்டவரின் பெருமையே உலகில் விளங்கித் தோன்றும்' என்று வள்ளுவர் கூறுகிறார்.

**இயல்பாக வாழ்தல்**

உலகில் தாம் படைக்கப் பெற்றுள்ள முறைக்கு ஏற்ப இயல்பாக வாழ்ந்தால் போதும். இயற்கைக்கு ஒத்த வாழ்வே இன்ப வாழ்வு; அதற்குத்தக நடப்பதே இனிய வழி. 'மருந்தென வேண்டாவாம்' என்று இயற்கை மருத்துவத்துக்கு வழி சொல்பவர் திருவள்ளுவர்.

'இயல்பாக வாழ்தல்' என்பது பெரும்பகுதி உலக இயற்கையைப் பார்த்தும், நம் அறிவு இயல்பாக இவ்வாறு வாழ்வது நல்லது என உணர்வதைப் பார்த்தும் கடைப்பிடிக்கப்படுவதாகும். 'எது ஒழுக்கம், எது ஒழுக்கமன்று' என்பது பல சமயம் சூழலை வைத்தும் காலப்போக்கை ஒட்டியும் முடிவு செய்யப்படுகிறது.

சில நாடுகளில் 'இடப்புறம் போ' என்பதற்கு மாறாக 'வலப்புறம் போ' என்பது நடைமுறையாகிறது. முன்பு குழந்தைகளைப் பெறுவதே சீரிய ஒழுக்கம்; இன்று ஒன்றிரண்டு பெற்றவுடன் குடும்பக்கட்டுப்பாடு பேணுவதே நல்லொழுக்கம்.

இயல்பான நல்ல சீரான சிறந்த எதனையும் நாம் அவ்வாறே பின்பற்றிக் கொண்டு போகலாம். உலகில் இவ்வாறு இயல்பாக நடக்கும் நல்லவைகள் மிகப்பலவுள. அவற்றை நாம் கெடுக்காமல் இருந்தால்

அதுவே உத்தமம். இந்த இயல்பான வாழ்வை, திருவள்ளுவர் பல இடங்களில் நம் மனங்கொள்ளுமாறு மிக எளிதாகச் சொல்லிப் போயுள்ளார்.

**இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்**
**முயல்வாருள் எல்லாம் தலை** (47)

வாழ்வில் உய்திபெற, இன்புற, முன்னேற, வீடு பேறடைய என இவ்வாறு முயல்பவர்கள் பல முயற்சிகளை மேற்கொள்கின்றனர்.

பிரமச்சரியம், துறவு, தவம், யோகம் எனப் பலவாறு கூறப்படுவன உளவெனினும், இல்வாழ்வே இயல்பான அறமாகும். அங்ஙனம் வாழ்வதே தலைமை வாய்ந்த முறையுமாகும்.

**அறன்எனப் பட்டதே இல்வாழ்க்கை; அஃதும்**
**பிறன்பழிப்பது இல்லாயின் நன்று** (49)

துறவு கோடியில் ஒருவருக்குப் பொருந்தலாம். அது செயற்கையானதேயாம். 'மக்களொடு மகிழ்ந்து மனையறங்காத்து, மிக்க காம வேட்கை தீர்ந்துழி'க் கொள்ளும் துறவு இயற்கைக்கு ஒத்தது. எனவேதான் 'அஃதும்' (அந்தத் துறவும்) பிறரால் பழிக்கப்படாமல் கைக்கொள்ளப்படின் நன்று என்றார். பெரிதும் தவறு நேர்ந்து பழிக்கப்படுதலே, அச்செயற்கைத் துறவில் மிகுதி என்பது கருத்து. 'பழிப்பிற்கிடமின்றிச் செய்யப்படுமானால் அதுவும் நல்லதுதான்' என்ற வள்ளுவ மனப்போக்கு ஆழச் சிந்திக்கத்தக்கதாகும்.

### அறச் செயல்கள்

நீதி நூல்கள் அனைத்தும் விரித்து விளக்கும் அறச் செயல்கள் மிகப் பலவாகும். பிறன் மனை நோக்காதே, கள்ளுண்ணாதே, சூதாடாதே, பொறாமைப்படாதே, திருடாதே, என்றும் அன்பாய் இரு, இன்சொல்கூறு, பொறுமை கடைப்பிடி, புகழ்பெறவாழ் என்றும் அறநூல்கள் நூற்றுக் கணக்கில் கூறும்.

**ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே**
**செல்லும்வாய் எல்லாம் செயல் (673)**

அறச்செயல்களை இயைந்த இடத்தெல்லாம், இயைந்த வழியிலெல்லாம் செய்; இடையறவு படாமல் செய்; அதனை நிறைவேற்ற வாய்ப்புக் கிடைக்குமிடத்தெல்லாம் செய் என இவ்வாறு தொகுத்தும் திருவள்ளுவர் சொல்லிக் காட்டுகிறார்.

**செயற்பால தோரும் அறனே ஒருவற்கு**
**உயற்பால தோரும் பழி (40)**

அன்றாட வாழ்வில், அவ்வப்போது, கணத்துக்குக் கணம் அறமே செய்யப்பட வேண்டும்; அறமல்லாதது கைவிடப்பட வேண்டும்.

வீட்டைக் கூட்டி வெளியில் - பலர் போகும் தெருவில் குப்பை கொட்டுவது பாவம்; குறித்த இடத்தில் கொட்டித் தூய்மை காப்பது அறம். தெருவில் நடக்கும் போதே, பிறர் மீது தெறிக்கும்படி எச்சில் துப்பாமலிருப்பது கூட ஓர் அறமேயாகும். ஓரலுவலகத்தில் வேலை பார்ப்பவர் குறிப்பிட்ட நேரமனைத்திலும் கடமையே கண்ணாக வேலை பார்ப்பதும் அறமேயாகும். இவ்வாறே எண்ணிப் பார்த்தால் அறவழி வாழ்வென்பது, நாளெல்லாம் நடப்பது; காலமெல்லாம் கடைப்பிடிக்க வேண்டியது.

**அன்றறிவாம் என்னாது அறஞ்செய்க; மற்றது**
**பொன்றுங்கால் பொன்றாத் துணை (36)**

என்ற வள்ளுவர் வாக்கும் 'ஓவாதே செல்லும் வாயெல்லாம் செய்க' என அவர் குறித்திருப்பதும் இவ்வாறு நினைவூட்டுகின்றன. 'தருமம் போகிற வழிக்குப் புண்ணியம்' என்று யாரோ சொல்லி வைத்துவிட்டார்கள். அதனால் பலர் சாகப்போகிற காலத்தில் பார்த்துக் கொள்ளலாம் என்று, முன்னதாகச் செய்யக்கூடிய - அறமல்லாத காரியங்கள் அனைத்தையும் செய்து தீர்க்கிறார்கள். கோயிலில் பூசைகள் அனைத்துக்கும் பணம் கொடுத்து விட்டால், புண்ணியம் வசூலாகி விடுமென்று, 'சமயவணிகர்கள்' சிலர் நடைமுறைப்படுத்தி விட்டார்கள்.

'பொனறாத்துணை' என்றால், மறுபிறவியிலும் உதவுமென்பது மட்டுமன்று; அவர் இறந்த பிறகும் அவர் தேடிவைத்த 'நற்பெயர்' அவர்தம் குடிவழியைக காப்பாற்றும் துணையாகும். "இவன் கடமையுணர்ச்சி யுடையவனின் பிள்ளை. ஆகவே இவனுக்கு வேலை கொடுப்போம்; உதவுவோம்; துணை செய்வோம்" என்று யாரேனும் முன்வர, அந்நற்பெயர் உதவுமன்றோ?

**அடிப்படை அறம்**

பலர் 'நான் கோயில் கட்டினேன்; குடமுழுக்குச் செய்தேன்; விருந்து படைத்தேன்; சாப்பாடு போட்டேன்; ஏழைக்கு உதவினேன்' என்றெல்லாம் கூறி, 'எனக்கு ஏன் இத்துன்பம் வந்தது' என வருந்தப் பார்க்கிறோம்.

கையூட்டு வாங்கும் பழக்கம் மிக்க ஒருவர் ஆயிரம் பேருக்குச் 'சமபந்தி போசனம்' நடத்திப் புகழ்பெற முயல்கிறார். ஏழை மக்கள் 'இவரன்றோ மகராசர்' என்று வாயைப் பிளக்கிறார்கள். பல கோடித் திட்டத்தில், சில கோடிப் பணத்தைச் சுருட்டிய ஒரு பெருமகன், இலவச உடை, உணவுகளை வாரி வழங்கக் கண்ட மக்கள் அவரை "கருணனே! பாரி வள்ளலே! வாழ்க!" என ஆரவாரித்து வாழ்த்துகிறார்கள். மதுக்கடைகள் வழி கோடி பல தொகுத்த கோமான் ஒருவர், ஐம்பது இலட்சத்தில் வயிரக்கிரீடம் செய்து ஆண்டவனுக்குச் சூட்டுகிறார். பக்த கோடிகள் இதைப் பார்த்துப் பரவசப்படுகிறார்கள்.

உலகம் ஏமாறும்; 'அறம்' ஏமாறுமா? உண்மை எது பொய் எது என்பன அவரவர் மனத்துக்குத் தெரியும் அடுத்து ஆண்டவனுக்குத் தெரியும். 'அறத்துக்கும்' அது தெரியும்! எனவேதான்.

> **.மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்**
> **ஆகுல நீர பிற (34)**

என்றார் திருவள்ளுவர். அறத்துக்கெல்லாம் அடிப்படையான அறம் மனத்தில் சிறு மாசும் இல்லாதிருத்தலேயாகும். அம் மாசு இல்லாத வழி,

செய்யும் அறங்களெல்லாம் போற்றுதற்குரியனவே. மனமாசுடன் செய்யும் அறங்கள் மறைமுகமாகத் தீமையே பயக்கும். 'மாசில்லாத அதுவே போதும்' என்பார் போல 'அனைத்தே அறன்' என்றார் நம் வள்ளுவப் பெருமான்.

உலகில் வெளிப்படச் செய்யப்படும் பல அறச்செயல்கள் இவ் அளவுகோலை வைத்து நோக்கினால், ஒன்றுமற்றன ஆகிவிடக் கூடும். எனவேதான் அவை பெயர் நோக்கியும், பாவத்தை மூடி மறைத்தல் நோக்கியும் செய்த பாவத்துக்குக் கழுவாய் வேண்டியும் செய்யப்படுவனவாகவும், இருத்தலால் 'ஆரவாரத் தன்மையுடையன' என அடித்துச் சொல்லப்பட்டுள்ளது. வேறு நல்லறங்கள் செய்ய இயலா நிலையிலிருந்தாலும் தவறில்லை. மனமாசின்றி இருப்பதென்பதே இன்றியமையாதது. அது மிகமிக எளிய அறம்; காசில்லாதே செய்யக்கூடியது. ஆயினும் அதுதான் மிகவும் கடினம். உலகில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் நெஞ்சைத் தொட்டுப் பார்த்தால் மனமாசு துள்ளி வெளிப்படும். இவ்வகையில் மனத்துக்கண் மாசிலனாகும் அறமே, அறங்களிற் பெரிய அறமென்பதும் பெறப்படும்.

இத்தகைய அறநெறியே இன்பவாழ்வுக்கு இனிய வழியாகும். உலகமும் தனிமனிதனும் அமைதியாகவும் நேர்மையுடனும் கவலையின்றியும் இன்ப நுகர்ச்சியில் ஈடுபட்டு '**வாழ்வதற்கு**' இவ்வழியே உதவுமென்பது உறுதி.

## 'அறம்' ஓர் இயற்கைப் பேராற்றல்

### அறம் : கருத்து நுண்பொருள்

கருத்து நுண்பொருள்களும் கண்ணுக்குப் புலப்படும் பருப்பொருள்கள் போல் சிற்சில தனிப்பண்புடையன. அவையும் இயங்குகின்றன; இடையறாது பணியாற்றுகின்றன. உளவியலார் கட்புலனாகாத அந்நுண்பொருட்சேர்க்கைப் பரிமாற்றங்களால் விளைவனவற்றை இயன்றவரை தேடவும் கண்டு கூறவும் முயன்றுள்ளனர்.

நம் எண்ணங்களெல்லாம் நுண்பொருள்களாகவே வேலை செய்கின்றன. பருப்பொருள் விளைவுகளைக் கண்ணாற் காணும் நாம், நுண்பொருள் விளைவுகளை உணர்ந்துதான் பார்க்க முடியும். அதற்காக அவை செயற்படவில்லை என்று கூறமுடியாது. காற்றின் செயற்பாடுகளை, உலகப் பொருள்களின் அசைவுகள், ஊற்றுணர்வுகளை வைத்து உணர்வது போல் நுண்பொருள்களின் செயற்பாடுகளையும் கண்ணாற்காணும் உலக நிகழ்வுகளின் மூலமே உய்த்துணர வியலும்.

### அறம் ஓர் இயற்கையாற்றல்

இங்ஙனம் நோக்குங்கால் அறம் என்ற நுண்பொருளை ஓர் இயற்கையாற்றலாகத் திருவள்ளுவரின் உள்ளுணர்வு காண்கின்றது. இதை அவர் கூற்றுக்களின் வழி நம்மால் உணரமுடிகிறது. இது முற்றிலும் வள்ளுவரின் புதிய சிந்தனை. மின்னாற்றல் போலும் அது (அறம்), தூண்டப்படும் போதெல்லாம் வெளிப்படுகிறது. அதாவது அது இருந்து கொண்டேயிருக்கிறது; ஒரு தூண்டுதல் பெற்றதும் வெளிப்படுகிறது. அதனை ஒரு பேராற்றல் என்று, அதன் பல பரிமாணங்களை வைத்து விளங்கிக் கொள்ளலாம்.

ஐம்பூதங்களின் ஆற்றல்கள் நாம் அறிந்தன. நீர், காற்று, நெருப்பு இவற்றின் ஆற்றல் சொல்லாமலே விளங்கும். அறம், அறமல்லாதவை யாவும் இங்ஙனம் செயற்படுவனவே. திரு.வி.க. அவர்கள், தம் 'உள்ளொளி' நூலில், இத்தகைய மன எண்ணங்கள், உளப்பாங்குகள் உலகைப் பாதிப்பதை நன்கு விளக்கியுள்ளார்.

நீரை ஆவியாக்கினால் அது உந்துசக்தியாகப் பயன்படுகிறது. அறத்தையும் இங்ஙனம் நீராவி போல் மனித வாழ்வின் உந்து சக்தியாகப் பயன்படுத்தவே அறநூல்கள் வழிகாட்டுகின்றன.

அறநெறி நல்லதை ஏற்கும்; அல்லதைப் புறந்தள்ளும். மரம் செடி கொடிகள் கார்வளியை உள்வாங்கிக் கொண்டு, உயிர்வளியை வெளியிடுவது போல், அது தீமையைத் தாங்கிக் கொண்டு – சீரணித்துக் கொண்டு நன்மையையே புறத்தே வெளிப்படுத்தும். அதன் இயல்பு அது.

சிவபெருமான் நஞ்சையுண்டு அமிழ்தத்தை வெளிப்படுத்திய கதை அதற்குப் பொருந்தும்.

அது நல்லதை வளர்க்கும்; அல்லதை மறுக்கும் – அறுக்கும் – அறுத்தொழிக்கும். இந்த இயற்கையாற்றலுக்குப் பெயர்தான் 'அறம்' என்பது.

## அறம் ஒரு தடுப்பாற்றல்

இன்னும் எண்ணிப் பார்த்தால் அறம் என்பது ஒரு தடுப்பாற்றல். நம் உடம்பில் தடுப்பாற்றல் என்பது இயல்பாக இருக்கிறது. நம் குருதியில் உள்ள வெள்ளை அணுக்கள், நோய்களைத் தடுக்கும் போர் வீரர்கள் என்பார்கள். நம் உடம்பில் ஏற்படும் சிறுகாயம் தானே ஆறிக் கொள்வதில்லையா? சிறு காய்ச்சல், உடல் தன்னைத் தூய்மைப்படுத்திக் கொள்ளும் முயற்சி என்பார்கள். கண்ணில் ஒரு சிறுதுரும்பு விழுந்து விட்டால், கண்ணே கண்ணீரைப் பெருக்கி, அத்துரும்பை வெளியேற்றவே முயல்கிறது. அதுபோல நம்முள்ளிருக்கும் உயிர்ப் பண்பாகிய அறம், நம்மைத்

தீங்குகளினின்றும் தடுத்துக் காப்பாற்றவே முந்துகிறது. அது அதன் இயல்பாகும். கொலையாளிக்கும் திருடனுக்கும் வஞ்சகனுக்கும் வெறி ஏற்படும்முன் அல்லது தணிந்தபின் மனத்துள் ஏதோ ஒன்று குத்துகிறது, முள்போல. அதை மனச்சான்று என்போம். இத்தடுப்பாற்றலின் விளைவுதான் அது.

வெள்ளை அணுக்கள் குறையும் போது அல்லது செயலிழக்கும் போது நோய்த்தடுப்பாற்றல் குறைகிறது. மருந்துகள் தேவைப்படுகின்றன. நம் அறநூல்கள் கூறும் அறங்கள் எல்லாம், இத் தடுப்பாற்றலாகிய அறம் எனும் உயிர்ப்பண்பு குறையும் போது 'அறம்' மங்கும் போது அதனை மங்காமல் காக்க உதவும் மருந்துகள் போல்வனவேயாம்.

**அறம் : தமிழ்ச் சொல்லின் ஆழம்**

அறம் என்ற சொல் அறச்செயல்களையும் அறத்திற்குத் துணையாவனவற்றையும் அறத்தின் பயன்களையும் அறநூல்களையும் குறிக்குமாறு பொருள் வளர்ச்சி கண்டுள்ளது.

திருவள்ளுவர் கருத்துப்படி கொல்லாமைதான் அறமா? வாய்மை தான் அறமா? இன்சொல்தான் அறமா? என்று ஆராய்வது ஒருதிறம். இங்கு அவை அறத்தின் வெளிப்பாடுகளாகக் கொள்ளப்பட்டு, இவை அனைத்திற்கும் மூலமான '**அறம்**' என்ற இயற்கை நுண்பொருட் பேராற்றல் தொட்டுக்காட்டப்படுகிறது.

அறம் - அறு - நீக்கு. வேண்டாதவற்றை நீக்குகிற, ஓட்டுகிற தடுப்பாற்றலே அறம். முன்பு ஒருவனைச் சாகப்பாடுதலை 'அறம்' பாடியதாகக் கூறுவர்.

அறம் ஓர் இயற்கையாற்றல் என்றால், அதுதானாக எவ்வாறு நன்மை தீமைகளைத் தீர்மானிக்கிறது? எவ்வாறு நல்லதென்பதையும் அல்லதென்பதையும் கண்டு கொள்கிறது?

நோயைத் தடுக்கும் உடம்பினதாற்றல் நோய் இதுவென விரிவுரைக்கக் கேட்டா, நோயைத் தடுக்க முந்துகிறது? புவிசர்ப்பால் மேலே எறிந்த பந்து, கீழே வருவது அதன் இயற்கையன்றோ? அறத்தினதாற்றலும் அது போன்றதே. அது இயல்பாகவே நல்லதைத்தான் ஏற்கும்; அல்லதைப் புறந்தள்ளும். அது இயற்கையின் படைப்பு, இறைவனது படைப்பு. திருவள்ளுவர் கண்ட சிந்தனை ஊற்றுத்தான் நம்மை இந்த அளவும் இதற்கு மேலும் சிந்திக்கவைக்கிறது.

**அறம் ஒரு தனிப் பேராற்றல்**

திருவள்ளுவரின் அறத்தைப் பற்றிய சிந்தனை தனித்தன்மை யுடையதாகும். 'அறம்' - பற்றிய திருவள்ளுவரின் இப்புதிய சிந்தனை உளவியல் மூலம் ஆராய்ந்து, ஒரு பெருநூலாகும் தகுதியடையது.

அறத்தை உருவகமாக்கி அறம் காக்கும்; அறம் அழிக்கும் என்று பலரும் கூறுவது போல் தாமும் கூறி வள்ளுவர் நின்றுவிடவில்லை. அதற்கு மேலே போய் அறம் ஓர் ஆற்றல்; அது உயிருக்கு ஆக்கம் தரும் செல்வம்; உயிருக்கு வலுச் சேர்க்கும் ஊட்டச்சத்து; வாழ்க்கை வெற்றிக்கு வழி வகுக்கும் உந்துசக்தி என இவ்வாறு எண்ணவைக்கிறார். திருக்குறள் மூலத்தைப் பலமுறை ஓதிஓதி உண்மை உணர்தல் வேண்டும்.

ஓருண்மை அறியத்தக்கது. மனிதன் தற்சார்புடன் தான் அறம் பற்றிச் சிந்திக்கின்றான்; பேசுகின்றான்; நடந்து கொள்கின்றான். அவனுக்குத் தனக்கு உகந்தனவெல்லாம் அறமாகவும் பிறவெல்லாம் தீங்காகவும் தோற்றுகிறன.

அறம் நடுநிலையானது; விருப்பு வெறுப்பற்றது. எது நல்லது எது தீதென்பதை அது இயல்பாகவே சற்றும் பிசகாமல் பகுத்தறிந்து செயற்படும் ஆற்றலுடையது.

வெயில் காய்ந்து கொண்டே இருக்கிறது. அது அதன் இயல்பு; இயற்கை. அது சிலருக்குக் குளிர்காய உதவலாம்; சிலரை வாட்டி

வதைக்கலாம்; சில உயிரினங்களைக் காய்ந்து அழிக்கலாம். அப் பயன்பாடுகள் நுகர்வோர் வழிப்பட்டவை. அறம் ஒருதன்மைத்தேயாகும். அவையவை தத்தம் இயல்பால் ஆக, அழிய நேர்கின்றன. அவை அவற்றின் செயற்பாடுகளின் விளைவு. அறம் அழிக்கிறது என்றால், அழிபடும் நிலையை அது அடைந்ததென்பது பொருள். நல்லது தானே வளருமாறு செய்வதும் அல்லது தானே அழியுமாறு செய்வதும் அதன் தனிப்பேராற்றலாகும். வெயிலை ஏற்றுக் கொண்டு செடி வளர்கிறது என்றால் அதன் பக்குவம் அது; புழு அழிகிறதென்றால் அதன் தன்மை அது.

அறம் தோற்பது போல் தோற்றுவது உண்மையன்று. தீமைதான் நல்லது போல் நடித்தும் பாசாங்கு செய்தும் நீடிக்கமுயல்வதால் அறத்தின் வெற்றி தாமதப்படுகிறதே தவிர, அறமே வெல்லும். இஃது இயற்கையின் நியதி.

உலகில் உண்மையான அறம் அருகிக் கிடக்கிறது. எல்லோரும் தாம் செய்வதே அறமெனக் கூறுகின்றனர்; நம்புகின்றனர். இங்ஙனம் போலியாகத் தத்தம் சார்பையே அறமென்பதால் அவை யாவும் அறமாகிவிடா. உண்மையான அறத்தைத் தேடித்தான் கண்டுகொள்ள வேண்டும்.

அறமல்லாததையே செய்தும் அதையே அறமெனப் பேசியும் தாம் அறத்திற்குப் புறம்பே போவதை மறைக்க அறநெறியாளர் போல் நடித்தும் மனித சமுதாயம் நாளும் அழிவுப் பாதையில் சருக்கி விழுகிறது.

இன்று உலகில் அறச் சூழலற்ற சுற்றுப்புறக்கேடு, கருத்தின்மை போன்றவற்றால் அறத்தினது ஆக்கம் மிகமிகக் குறைந்து போகிறது.

**சிறப்புஈனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்கு**
**ஆக்கம் எவனோ உயிர்க்கு** (31)

அறம் உயிருக்கு ஆக்கமாம். உடம்புக்கு ஊட்டச் சத்துப் போல, உயிருக்கு வலுச்சேர்க்கும் ஊட்டச்சத்து அறம். ஆக்கம் – மேன்மேல்

ஆவதைக்குறிக்கும். எல்லாவகையாலும் மேன்மேலாவதற்கு ஆக்கம் என ஒரு சொல்லாற் கூறப்படுகிறது. வாழ்வுக்குச் சிறப்பும் செல்வமும் தருமென்பதால், அறவழியே வாழ்க்கையில் வெற்றிதரும் என்பது பெறப்படுகிறதல்லவா?

**அறத்தினூஉங்கு ஆக்கமும் இல்லை; அதனை**
**மறத்தலி னூங்கில்லை கேடு.** (32)

அறமே ஆக்கம்; அதை மறப்பதே அழிவு. அறமாகிய செல்வத்தைச் சேர்த்துக் கொண்டால் துன்பமாகிய பகையை வெல்லலாம். அறமென்னும் ஆக்கத்தைத் தேடிக் கொண்ட குடியும் நாடும் எளிதிற் சரிவதில்லை.

**அறம்ஆக்கம் வேண்டாதான் என்பான் பிறன்ஆக்கம்**
**பேணாது அழுக்கறுப பான்** (163)

பொறாமைப் படாதிருத்தல் ஓர் அறம். அதைக் கடைப்பிடித்தால். அறத்தானாகும் ஆக்கம் கூடும். அது போல் எந்த அறவழியைக் கைக்கொண்டாலும் அறத்தாலாகும் பக்கபலம் கூடும்.

அறம் மனவலிமையைப் பெருக்குகிறது. மனச்சான்றை இயக்கி, அறமல்லாததை வெல்கிறது. உயிர் வலிமை பெறுவதும் மனம் வலுப்பெறுவதும் அறத்தினால் ஆகும். அவ்வலிமையே வாழ்வில் வெற்றி தரும். எனவே இன்பமான வாழ்வுக்கு - அவ்வாழ்வின் வெற்றிக்கு அறநெறியே இனிய வழியென்பது உறுதி.

**அறம் - சாரமற்ற பேச்சன்று**

சிலர் அறம் என்பதெல்லாம் சாரமற்ற பேச்சு; கையாலாகாதவர்கள் பேசித்திரிவது என உள்ளூற எண்ணுகின்றனர். சிலர் அது ஏதோ சலுகை கருதிச் செய்யப்படுவது; தருமம் என்று செய்கிற உபகாரம் எனக் கருதுகின்றனர். இவை தவறான கருத்துக்கள்.

அறப் பண்பை உயிர்வாழும் நாம் வளர்த்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம். அல்லாக்கால் நாமே நமக்கு அழிவு தேடிக் கொள்பவர்களாக ஆகிறோம். அறம் என்பது, கடமை. அது மூச்சு விடுவதுபோல இன்றியமையாத ஒன்று. ஊட்டச்சத்து இல்லாது வளர்க்கப்படும் குழந்தை, நலிந்து உயிர் ஊசலாடுவது போல், அறப்பண்பு குறைவார்தம் நிலை ஆகிவிடும். பெரும் பெரும் தவறுசெய்பவர்கள் நல்லவர்போல், சிற்சில நன்மைகள் செய்து, நடிக்க முயல்வதிலிருந்தே இதை அறியலாம். இவ்வுண்மையை உணராதார் அறம் என்பது நம் தேவையினின்றும் கூடுதலாக, ஏதோ உலகிற்கு உபகாரமாக - நாம் செய்வதென்றும், அறம் செய்யாவிட்டாலும் அழிவொன்று மில்லையென்றும் அகவை முதிர்ந்தாரும் ஏழ்மைவயப்பட்டாரும் எளியவருமே அறம் பற்றிப் பேசித்திரிவரென்றும் அறநூல்களும் பெரியவர்களும் அறத்தைப் போதிக்கும் கட்டாயத்திற்காக அறநெறி பின்பற்றப்படுகிறதென்றும் வெளிப்படச் சொல்லாவிட்டாலும், நினைக்கின்றனர். இது முட்டாள்தனத்தின் எதிரொலியாகும்.

போதிய அளவு அறத்தைப் பற்றிய உண்மைகள் உலகிற்கு உணர்த்தப்படவில்லை. திருவள்ளுவர் அறத்தை உயிருக்கும் வாழ்வுக்கும் ஆக்கம் எனவும் வாழ்க்கை வெற்றிக்கும் இன்பத்திற்கும் வழி என்றும் கூறிய அளவு வேறு யாரும் எடுத்துரைக்கவும் இல்லை. திருவள்ளுவர் இவ்உயிரினது ஆற்றலை, அதன் உயிர்ப்பண்பு விளங்குமாறு எடுத்துக்கூறியும் அவற்றை முழுமையாக நாம் விளங்கிக் கொள்ளவில்லை.

அறத்தை ஒரு கொள்கையாக - கோட்பாடாக - அறிவியற் கோட்பாட்டு விளக்கம் போலத் தனித்து விளக்க வேண்டும்.

தீ சுடும், நீர் குளிரும், ஒளி வழி காட்டும், இருள் கண்ணை மறைக்கும். அறம் நன்மைதரும், தீமை அழிவு தரும். இவை எல்லாம் இயற்கை உணர்த்தும் பட்டறிவு முடிபுகள். அறமல்லாதது செல்வம் தருவது போலவும் நன்மை செய்வது போலவும் தோற்றுவன மாயை. இன்றைக்கு ஒருவன் கையூட்டு வாங்கியே கோடீசுவரனாகின்றான். அனைத்தையும்

அறத்திற்குப் புறம்பாகச் செய்து ஓகோ என வாழ்கின்றான். இவ்வாறு தோற்றுவதால் பலருக்கும் 'இப்படி வாழ்ந்தால்தான் வாழமுடியும். நேர்மை, நீதி பார்த்தால் வாழமுடியாது' என்ற துணிச்சல் வருகிறது. இத் தவறு அவன் சுற்றம், ஊர், சமுதாயம் எங்கும் பரவுகிறது. தொற்று நோய் போல் பரவுவதால் எங்கும் இலஞ்சம், கையூட்டு, அன்பளிப்பு. யாருக்கும் நிம்மதியற்ற, அமைதியற்ற வாழ்க்கை. சமுதாயமே அழிகிறது. தீமை செய்பவன் உற்பத்தி செய்யும் தீமை அவன் பிறந்த சமுதாயத்தை, நாட்டை, குலத்தை அழிப்பதுடன் அவனையும் அழிக்கிறது. இவ்வாறு அறக்கேடு எவ்வாறு பயனை விளைவிக்கிறதென்பது, நுட்பமாய் ஆராய்ந்தறியப்பட வேண்டிய ஒன்று. நுண்பொருள் விளைவாகிய அது கண்ணிற்குப் புலப்படாமற் போகலாம். மண்ணில் போட்ட விதை, முளைவிட்டு வெளிப்பட நாளாவது போல், அவ்விளைவு பயன்தரக் காலம் செல்லலாம். எனினும் பயன் விளையாமற் போகாது; மாறியும் விளையாது.

## அறம் பெருகவே, அல்லவை தேயும்

நாம் சீரோடும் சிறப்போடும் வாழவேண்டுமேல், நாம் பிறந்த நாடும் சமுதாயமும் செழிக்க வேண்டுமேல் அறம் எனும் ஆற்றலை வளர்க்க வேண்டும். அஃதோர் இயற்கைப் பண்பு; உயிரினது பண்பு; உயிரினது ஆற்றல். அது வளரவளரவே, பெருகப்பெருகவே இன்பம் உண்டாகும். அதனால்தான் தனிமனித வாழ்வின் வெற்றியும், ஒரு நாடு சமுதாயம் குலம் குடியினது வெற்றிகளும் கைகூடும்.

'அறனியலான் இல்வாழ்வான்' (147) என்பார் திருவள்ளுவர். 'அறமாகிய இயல்போடு கூடி வாழ்பவன்' என்பதால், வாழ்பவனுக்கு அறம் ஓர் இயல்பாக வேண்டுமென்பது குறிப்பு. 'அறம் ஆக்கம்' வேண்டுமென்பது, அறத்தினாலாகும் உயிரினது ஆக்கத்தை - சமுதாய ஆக்கத்தைப் பெருக்கிக் கொள்ள வேண்டும் என்பதையே குறிக்கிறது.

## நல்லவையும் அல்லவையும்

அல்லவற்றை எவ்வாறு வெல்வது? நல்லவற்றை வளர்த்தால் அல்லவை தாமே தேய்ந்து அழியும். ஒளி கூடக் கூட இருள் போய் ஒழியும். அறம் வளரவளர அல்லாதவை தாமே தேயும். அறத்தினது ஒளிபரவினால், பாவஇருள் இருந்த இடம் தெரியாமல் மறையும் என்பதாம்.

**அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை**
**நாடி இனிய சொலின்** (96)

இதனைஒரு வரையறை வாய்பாடாகக் (formula) கொள்ளலாம். இன்சொல் கூடக்கூட வன்சொல் மறையும்; அறிவு பெருகப் பெருக அறியாமை மறையும்; செல்வம் வளரவளர வறுமை நீங்கும்; அன்புக்கு மேன்மேலும் இடந்தந்தால் வன்பு – வம்பு தானே ஒழியும். 'தேய' – தேயுமாறு. அல்லாதவை தேயுமாறு அறம் வளரும் என்பதால், அறத்தினது வளர்ச்சி மற்றதன் தேய்வுக்கும் காரணமாகிறது.

தீயவற்றைத் தீயவை கொண்டு அழிப்பதைவிட, நன்மையை வளர்ப்பதே தீமையின் அழிவைச் செய்யும் என்ற இவ்வாய்பாடு நீள நினைதற்குரிய ஒன்று. நம் மனத்தில் நல்ல நினைவுகளை வளர்த்தோமானால், தீய நினைவுகள் சிறிதுசிறிதாக மறைந்தொழியும். 'தேய' என்றது அவ்வாறு மங்கிமறைவதையே சுட்டுகிறது. இன்சொல்லை இக்குறளில் சொல்லியிருந்தாலும், கொல்லாமை வாய்மை முதலிய எவ்அறத்தை மேற்கொண்டாலும் அவ்வத்துறைகளில் ஈடுபட, ஈடுபட அவற்றுக்குப் புறம்பானவை போயொழியும்.

தனிமனிதனும் சமுதாயமும் நாடும் நல்லதிசை நோக்கி நடைபோடப் பழகுதலே சாலச் சிறந்தவழியாகும்.

## அறப்பேராற்றலின் ஆட்சி

'எங்கு தருமம் சீர் குலைகிறதோ, அங்கு நான் தோன்றி, தருமத்தை

நிலைநாட்டுவேன்' எனப் பகவான் கீதையில் பகர்கின்றார் என்பர். அறமும் அவ்வாறே தோன்றி, அறக்குறைபாட்டை அகற்றி, அறத்தை நிலை நாட்டும் எனத் திருவள்ளுவர் கூறுகின்றார்.

**என்பி லதனை வெயில்போலக் காயுமே**
**அன்பி லதனை அறம் (77)**

'என்பு இலது' அவ்வுடலூற்றம் இல்லாததால் வெயிலைத்தாங்க முடியாது அழிகிறது. எலும்புக்கு வெயிலைத்தாங்கும் ஆற்றலுண்டு. அன்பும் உயிருக்கு ஆற்றலைத் தருகிறது. அன்பில்லாத உயிர், அறத்தைத் தாங்க முடியாது அழியுமென்பதால், அறம் எனும் பேராற்றலின் ஆட்சி புலனாகிறது. இக்குறள்களில் அறம் இறைவனுடன் ஒப்புமை உடையதாகிறது. வேறுவிதமாகச் சொன்னால் இறைவன் அறத்தை உலகில் நிலைநாட்டி, தன் ஆட்சியை நடத்துகிறான்.

**மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்**
**அறம்சூழும் சூழ்ந்தவன் கேடு. (204)**

'பிறனுக்குக் கேடு எண்ணுபவனை, அறம் கெடுக்க முந்தும் என்ற இது அறத்தின் செயற்பாட்டை நன்கு விளக்குகிறது. தீ சுடும் எனக் கூறவேண்டாம். அது வெளிப்பட அறியப்படுகிறது. அறம் சுடும், அறம் தண்டிக்கும், அறம் வெல்லும் என்று போதிக்க வேண்டியுளது. மனிதன் இது நுண்பொருளாய்ச் செயற்படுதலை, நன்கு கூர்த்த அறிவும் தேர்ந்த பட்டறிவும் பெற்ற பிறகே தெளிவாய் அறிகின்றான். உலகமாந்தர்கள் இதில் அதிகக் கருத்துச் செலுத்தாது போதலும் காரணமாகும். திருவள்ளுவரனைய அறவோர் இதனையே திரும்பத் திரும்ப நினைவுபடுத்துகின்றனர். கேடுநினைப்பவன் கேடு சூழ்கின்ற பொழுதே (அறம்) தானும் சூழ்தலின், இவன் பிற்படினும் அறக்கடவுள் முற்படும் என்பது பெறப்பட்டது எனப் பரிமேலழகர் விளக்குகிறார். அறத்தின் விரைவு அறியத்தக்கது. இத்தகைய இடங்களிலெல்லாம் முன்பு 'அறக்கடவுள்' எனவே எழுதினர். இன்றைய

மனநிலைக்கு ஏற்ப, உலகிடை நிலவுவதாகிய இதனை ஓர் 'அறப்பேராற்றல்' என்பதே பொருந்தும். வள்ளுவரும் உயிர்கட்கு ஆக்கம் தரும் ஆற்றலாகவே இதனைக்கண்டு கூறுவது, அவர் தம் சொல்லாட்சியாலும் நடைப் போக்காலும் மேன்மேலும் உறுதிப்படுகிறது.

**பிறர்நாணத் தக்கது தான்நாணான் ஆயின்**
**அறம்நாணத் தக்கது உடைத்து** (1018)

பிறர் பார்த்து வெட்கப்படும்படி நடக்க நேர்ந்தால், ஒருவன் அவ்வாறு நடந்ததற்காகத் தான் வெட்கப்பட வேண்டும். கட்குடித்து முதல்நாள் தெருவில் புரண்டவன், மறுநாள் அதே தெருவில் நடக்கும்போது வெட்கப்பட்டுக் கூனிக்குறுகி நடந்தால், அவனிடம் இன்னும் பண்பாட்டு உணர்வு இருப்பதையே அதுகாட்டும். அல்லாமல் உதிர்த்துவிட்டு இராச நடை நடந்தானேல், அவனைக் கண்டு அறம் நாணித் தலைகவிழுமாம்.

**அஞ்சுவ தோரும் அறனே ஒருவனை**
**வஞ்சிப்ப தோரும் அவா** (366)

ஆசை ஒருவனை வஞ்சித்து அழித்துவிடும். ஆசை நம்மை அறத்திற்கு மாறாக நடக்கத்தூண்டும். ஆதலால் ஒருவன் 'அறத்தைக் கைவிட நேருமோ' என எண்ணி எண்ணி அவ்அறத்திற்கு அஞ்சி வாழ வேண்டும். நோய் வருமோ என அஞ்சி வாழ்வதை போல், ஆசை பற்றிக் கொள்ளுமோ என்று அஞ்சியஞ்சி, அதனின் நீங்கி வாழ்வது தான் அறத்திற்கு அஞ்சி வாழ்வதாகும்.

அறம் நன்மை செய்ய முந்துமென்று உணரவைக்கின்றார். தீமை கண்டவிடத்து, அதைக் கண்டித்து ஒழிக்கும் நல்லதை ஊக்கப்படுத்தி ஆக்கம் தந்து துணை நிற்கவும். அதே அறம் செயற்படுகிறது.

**கதங்காத்துக் கற்றடங்கல் ஆற்றுவான் செவ்வி**
**அறம்பார்க்கும் ஆற்றின் நுழைந்து** (130)

அறம் இத்தகைய அடக்கமுடையான் வரும் வழிமேல் விழிவைத்துப் பார்த்திருக்குமாம். நன்மை எத்தடங்கலையும் தாண்டி வந்துசேருமென்பதே கருத்தாகும்.

'அஞ்சுவ தோரும் அறனே' என்ற வாசகம், அறமெனும் இயற்கையாற்றலுக்கு இயங்காற்றலுக்கு பேராற்றலுக்கு மனிதனைத் தீங்கினின்றும் காப்பாற்றும் தடுப்பாற்றலுக்கு, மனிதன் அஞ்சியஞ்சி, நேரிய வழியையே நாடி வாழவேண்டுமென்ற உண்மையை மிக அழகாக வலியுறுத்துகிறது.

'மேலுலகம் இல்லெனினும் ஈதலே நன்று' என்ற வள்ளுவம் நன்மையை நன்மைக்காகச் செய்ய வேண்டுமென வலியுறுத்துகிறது. மாந்தன் அறப்பண்பை வளர்த்துக் கொள்ள, அறத்தைத் தற்காப்புக் கவசமாக ஆக்கிக் கொள்ள அறச்செயல்கள் பயன்படுகின்றனவே தவிர, வேறு பயனை எதிர்பார்த்தன்று என்பதாம். அறத்தால் புண்ணியம் என்ற ஒரு பொருளை வாங்கிக் கொள்ளலாம் என்று கூறப்படுவதால், அதை மெதுவாக வாங்கிக் கொள்ளலாம்; வேறு வழியிலும் வாங்கலாம் எனப்பல தவறான நினைவுகள் உண்டாகின்றன. மருத்துவர் உடம்புக்கு உணவு, ஊட்டச் சத்து, மருந்து என எழுதித் தருவனவற்றை வாங்கி உட்கொண்டால் நலிந்த உடம்பு தேறும்; நோய் நீங்கும்; உடம்புக்கு வலுச்சேர்க்கும். இவைபோல அறச்செயல்கள் உயிருக்கு வலுச்சேர்க்கும் என்ற வள்ளுவக்கோட்பாட்டால், இவை தவிர்க்க ஒண்ணாதவை என்பது புலனாகிறது.

மற்றைய சான்றோர்கள் அறம் செய்க; அறவழி நடக்க என்றே போதித்தார்கள். திருவள்ளுவரும் அவற்றை விரித்து உரைத்தார். ஆனால், அவர்களைவிட ஒருபடி மேலே சென்றும், பல உண்மைகளைக் கூறியுள்ளார்.

உயிர்களை அளந்தறிந்தவர்கள், அவற்றின் பண்பை அறிந்தவர்கள் அறத்தைக் கைவிட மாட்டார்கள். ஏனெனில் அறமற்ற உயிர் பாதுகாப்பற்றதாகும். அறம் உயிருக்கு ஆக்கம்; அறம் வாழ்க்கைக்கு ஆக்கம். அதனைப் போல வாழும் உயிர்களை முன்னேற்றும் ஆக்கம் பிறிதொன்றில்லை. அறத்திற்குறைவுபட்டால் தீமை மேலோங்கும். அறம் பெருகப்பெருகத் தீமைதானே தேய்ந்து மாய்ந்தொழியும் எனவே மாந்தன் தன் அறப்பண்பாம் ஆக்கம் குறைந்துவிடாமல், 'எங்கே குறைந்துவிடுமோ' என்று அச்சத்தோடு, அதைக் காத்து வாழ வேண்டும். இனிய நல்ல அறச்செயல்களைச் செய்யச்செய்ய, அறம் பெருகும். பரிமேலழகர் கருத்துப்படி, "வெறுப்பின்றி எங்கும் ஒருதன்மைத்தாகிய சூரியன்முன், எலும்பற்றது தன்னியல் பால் கெட்டழிவதுபோல, அத்தன்மையுடையதாகிய அறத்தின்முன் அன்பு. இன்சொல் முதலிய அறப்பண்புகளற்ற உயிர் தன் இயல்பாற் கெடும்." அல்லாதவற்றைச் செய்பவனை அறம் விடாது பின்தொடர்ந்து தண்டிக்கும். நன்மை செய்பவனை அறம் தேடி, செவ்விபார்த்துச் சென்று சேரும். ஒருவன் பிறர்க்குக் கேடுநினைத்துத் தந்திரம் செய்தால், அறம் அவனுக்குக் கேடு செய்ய நினைத்து, அதே சூழ்ச்சித் தந்திரத்தை அவனுக்கும் முற்பட்டுக் கையாளும். அறத்தால் வருவதே வெற்றியும் அமைதியான இன்பவாழ்வுமாகும்.

அறக்கோட்பாட்டுச் சிந்தனை இவ்வாறு உருப்பெற்றிருப்பதை, வள்ளுவத்தைக் கற்றுத் தெளிந்து, உணர்வதே வாழ்க்கை வெற்றிக்கு வழிவகுக்கும்.

# உ. ஆளுமை மேம்பாடு

நீங்கள் இருக்குமிடம் கலகலப்பாக இருக்கிறதா? உங்களிடம் பேசுபவர்கள் கனிவோடு பேசுகிறார்களா? உங்களைச் சுற்றிலும், ஊதுபத்தியின் மணம் போல, ஓர் இனிமை தவழ்கிறதா? உங்கள் தோற்றப் பொலிவில் ஒரு ஒளிவட்டம் தென்படுகிறதா? உங்களைப் பார்ப்பவர்கள் மகிழ்ச்சியடைகிறார்களா?

ஐயமே இல்லை; நீங்கள் ஆளுமையுடையவர்தான்!

உங்களைப் பார்க்க வந்தவர் கடுகடுவென வந்தாலும், அவர் உங்களைப் பார்த்ததும், அந்தக் கடுப்பு – குறைகிறதா?

சுருங்கச் சொன்னால், உங்களைப் பார்ப்பவர் முகம் மலர வேண்டும். அதனை மலர்விக்கும் ஆற்றல் உங்களிடம் இருந்து அவருக்கு ஒளியாக ஊடுருவிச் செல்கிறது. உங்களிடம் பேசுபவர் இன்சொல் பேசுமாறு செய்யும் ஆற்றல்கூட, உங்கள் மூலமே வெளிப்படுகிறது.

நீங்கள் பிறருக்கு உதவுபவர்; உள்ளன்போடு யாரையும் நேசிப்பவர்; பிறருக்காகவும் வாழும் பெருந்தகைமை உடையவர் என்று, உங்களைச் சுற்றிலும் உள்ளவர்களை உங்களால் உணரவைக்க முடியுமானால், உங்களுக்கான உதவிகள் உங்களைத் தேடிவரும்.

உங்களுடைய பெருமிதமான தோற்றம்; அழகிய இனிய கவர்ச்சியான எழில் தவழும் உருவம்; நடையுடை பாவனை – எல்லாம் கூடியதுதான் ஆளுமை. ஆம். இவையும் புற ஆளுமையே; ஆனால் இவையே முழு ஆளுமை ஆகிவிடா.

## ஆளுமை என்பதுதான் என்ன?

அழகிய தோற்றம், நல்ல உயரம், சிவந்த மேனி, அதற்கேற்ற பருமன், அகன்ற நெற்றி, தாள்தொடு தடக்கை...

கிளி மூக்கு, மயிலின் சாயல், கருமுகிற் கூந்தல், செம்பவள இதழ்கள், தாமரை முகம், எலுமிச்சம் பழ நிறம், எடுத்த தோற்றம், கெண்டை விழிகள், மலரினும் மெல்லிய பொலிவு.....

இவைதான் ஒருவரின் ஆளுமைக்கு அடையாளங்களா? ஆம். இவையும்தாம்! ஆனால் இவை மட்டுமல்ல. இவையும் கூடியவரை அமைவது நல்லது. அழகு, தோற்றம் என்பன அவரவர் மனநிலைக்கு ஏற்ப அமைவன.

ஆளைப் பார்த்து மயங்காதே - ஒரு பழமொழி

பொம்மைகளை இதைவிட அழகாகச் செய்கிறார்கள். பொய்ம்மைதான் - பொம்மையானது - தெரியுமா? அதற்கு எல்லா அழகும் கூடுதலாகவே இருக்கிறது; முன்னே சொன்னவற்றை விட அழகழகாக இருக்கிறது. அது கண்களை இமைக்கிறது; பேசவும் செய்கிறது. இவை இக்காலத்துப் பொ(ய்)ம்மைகள்! ஆனாலும் உயிரில்லையே!

அகத்தின் அழகு முகத்தில் தெரியும்

- இதுவும் ஒரு பழமொழி.

ஒருவரைப் பார்த்து, இது (பொ(ய்)ம்மை அன்று; சவுளிக்கடை முன்னே நிற்கும் அந்தப் பொ(ய்)ம்மை அன்று) உண்மையானது, இவர் ஓர் உயிருள்ளவர் என்பதைத் தெரிந்து கொள்வது எப்படி என்று

திருவள்ளுவரிடம் கேட்டார்கள். குருதி, உடம்பு, ஊன், எலும்பு எல்லாமிருந்து நடந்து திரியும் ஒன்றை -ஆளுமைமிக்க மாந்தர் என அறிவிப்பது 'அன்பு' என்று அடையாளம், சொன்னார் திருவள்ளுவர்.

**அன்போடு இயைந்த வழக்கு என்பஆர்உயிர்க்கு**
**என்போடு இயைந்த தொடர்பு**

எலும்பு முதலாயவற்றோடு கூடிய இந்த உடம்புக்குள் உயிர் இருக்கிறது என நம்பவைப்பது எதுவென்றால், அது அன்போடு இயங்குகிறதே, அதுதான்! அன்புதான் கண்ணை மலர்விக்கிறது; கனிவைக் காட்டுகிறது; கண்ணையும் முகத்தையும் பேச வைக்கிறது. இயங்குவதால் உள்ளே இயங்க வைப்பதொன்று தெரிகிறது.

'**அகத்தின் அழகு முகத்தில் தெரியும்**' என்பார்களே; அந்த மன ஆளுமைதான் உண்மையான ஆளுமை.

'**வையத் தலைமைகொள்**' - என்றார் பாரதியார். அதனை நோக்கியதாக உங்கள் உள்ளம் பக்குவப்படட்டும்.

உங்கள் மனம் இளமையுடையதாகவே இருக்கட்டும். அது அன்றன்று பூத்த, பனித்துளி படர்ந்த புத்தம் புது பூக்களைப் போல, மின்னட்டும். அதில் அழுக்குப் படிய விடாதீர்கள். மலர்கள் காலையில் மலர்ந்தவை, மாலையில் உதிரக்கூடும். ஆனால் மனம் அப்பொழுதுதான் மலர்ந்த செந்தாமரை -போல உயிருள்ள மலராகவே எப்பொழுதும் துலங்கட்டும்.

கல்வி வேண்டும்; திறமையை வளர்த்துக் கொள்ள வேண்டும்; சாதுரியம் வேண்டும்; உடல் வலிமை வேண்டும். இவை எல்லாம் இருந்தாலும், அந்த மன ஆளுமை இல்லையென்றால், இவை எதுவும் அத்துணைப் பயன்படா. அதைத்தான் திருவள்ளுவர் வலியுறுத்துகிறார்.

ஒன்றை நாம் மறந்து விடுகிறோம். உடலில் உள்ளிருந்து வரும் வியர்வையாலும் வெளியிலிருந்து வரும் தூசிகளாலும் அழுக்குப் படிகிறது. நம் உடல் தன்னைத் தானே தூய்மைப்படுத்திக் கொள்ள முயல்கிறது. நன்கு வியர்க்க நடப்பதும் உழைப்பதும் உடலைத் தூய்மைப்படுத்துகின்றன. உள்ளிருந்து சிறு காய்ச்சல் ஏன் வருகிறது? உடல் தனக்கு ஏற்பட்ட துன்பத்தை, குறையை அகற்ற முயல்வதின் அறிகுறியே அது. நம்மை எச்சரிக்க வருவது அது.

மாதவி பத்துத் துவரினும் ஐந்து விரையினும் முப்பத்திருவகை ஓமாலிகையினும் ஊறின நல்ல நீரில், குளித்தனளாம். புற அழுக்கைப் போக்க நாள்தோறும் குளிக்கிறோம். அது மட்டுமா? மாதவி போல் இன்று மணம் கமகமக்க, சோப்புப் போடுகிறோம். ஒப்பனை வகைகள் பல, ஏன்? உடலை நாள்தோறும் தூயதாக வைத்துக் கொள்ள விரும்புகிறோம். இந்த எண்ணம் மனத்தைப் பொறுத்தும் தோன்ற வேண்டாமா? மனம் தூயதாக, அழுக்கின்றி இருக்க வேண்டாமா? அதை அடிக்கடி சுத்தப்படுத்தி, மணம் ஊட்டி, அணிகலன் பூட்டி அழகு பார்க்க வேண்டாமா?

நம் வீட்டைக் காலையிலும் மாலையிலும் கூட்டித் துப்புரவு செய்கிறோம். ஏன்? உடலில் அழுக்குப் படிவது எவ்வளவு உண்மையோ, அவ்வளவு உண்மை வீட்டில் குப்பை கூளம் சேர்வதும். அதுமட்டுமா? சில வீடுகளில், மாளிகைகளில் நுழைந்தால், பளிச்சென்றிருக்கிறது. ஒரு தும்புதூசு பார்க்க வேண்டுமே! உள்ளே நுழைந்ததுமே நறுமணம் கமழ்கிறது.

இறைவனுக்குப் ‘பூசனை’ என்றால், பொருள் தெரியுமா உங்களுக்கு? பூசுதல் - சுத்தம் செய்தல், அலங்கரித்தல், ‘கருவறை’ இறைவன் இருக்குமிடம், நம் உள்ளம் போன்றது. அதை நன்கு தூய்மைப் படுத்துவதும் நறுமணம் கமழச் செய்வதுமே பூசனையாகும். மற்றையன எல்லாம் ஏமாற்று வேலைகளே.

இந்த உடலும், வாழும் வீடும் போன்றதே நம் உள்ளமும். உள்ளத்தில் அழுக்குப் படியும்; படிகிறது. ஐம்பொறிகளாகிய கண், செவி, வாய், மூக்கு, உடல் என்பன உள்வாங்கும் கருவிகள். எலிப்பொறி போல, இவை

எதனையும் உள்வாங்கும் இயல்புடையன. வழியில் போகும் போது, நீங்கள் வேறு நினைவில் போனாலும், நீங்கள் காண்பன, கேட்பன யாவும் படப்பிடிப்புக் கருவியும் ஒலி வாங்கும் கருவியும் போல, அவற்றை உள்வாங்கிப் பதிவிக்கின்றன என ஓர் உளவியலறிஞர் மெய்ப்பித்துள்ளார். அவ்வாறு பதிவன காலங்கடந்து வெளிப்படும் எனவும் ஆராய்ந்துள்ளார்.

அப்படியானால் மனத்தைத் தூயதாக வைத்துக் கொள்ள வேண்டாமா? மனத்தை உடனுக்குடன் தூய்மைப்படுத்திக் கொள்ள வேண்டாமா? மன அழுக்கை நீக்க வேண்டாமா?

திருக்குறளில் 'அழுக்காறாமை' என்பது ஓர் அதிகாரம். அழுக்குச் சேராமை என்பது பொருள். 'அழுக்காறு' என்பதே, வள்ளுவர் ஆளும் புதுச்சொல். உலகில் பிறரொடு பழகுவதால் வரும் அதை, 'பொறாமை' என்பர். பொறாமை – என்ற சொல் இருக்கவும், திருவள்ளுவர் அழுக்காறு என்ற சொல்லையே, பல இடங்களிலும் திரும்பத் திரும்ப ஆள்கிறார். நாம் மனிதக் குழுக்களாகவே பழகுகிறோம். அதனால் ஏற்படும் மனக்கசப்பு, பொறாமை, கடுப்பு, செருக்கு என எல்லாம் அடங்கவே அவர் இதனை ஆள்கிறார். மனத்தில் அழுக்குச் சேரும்; உடலின் இயல்பு அழுக்குச் சேர்வது போல, மனத்தின் இயல்பும் அழுக்குச் சேரும் இயல்பினதே. முனிவரும் துறவியரும் கூட இதிலிருந்து விடுபட முயன்றபடி இருக்க வேண்டுமே தவிர, அவர்களிடம் மன அழுக்குச சேர்வதில்லை என்று கூற முடியாது.

அதனால்தான் திருவள்ளுவர் 'மனத்துக்கண் மாசு இலனாதல்' – ஒன்றே அடிப்படை அறம் என்றார். மன அழுக்கைத் துடைத்தெறியுங்கள் என்றார். மனத்தில் மாசும் தூசும் படிவதென்பது கட்புலனாகாதது. அதனால் மாந்தர்கள் அதை மறந்து விடுகின்றனர்; மறைக்க முயல்கின்றனர்.

புறந்தூய்மை மட்டுமே நீரால் அமையும்; அகம் தூய்மைக்கு 'வாய்மை' என்ற, அழுக்ககற்றும் கருவி கொண்டு, உடனுக்குடன் தூய்மைப்படுத்திக் கொள்க என்றார். மனத்தைச் சுத்தப்படுத்தும் கருவி வாய்மை (உண்மையுடையராதல்) என்றார். ஏனைய வஞ்சகம், சூது எல்லாம்

உள்ளத்தைப் பொய்ப்பதால், உட்புகுவனவே. மனத்தைத் தூய்மைப்படுத்தும் கருவியையும் கலையையும் வள்ளுவம் நமக்குக் கற்றுத் தருகிறது.

மனத்தது மாசாக மாண்டார் நீராடுவதால் பயனில்லை என்றார் அவர். மாண்டார் நீர் - புனித நீர், தீர்த்தமாடல். எத்தனை புனித நீராடினாலும், புறம் தூய்மையாகலாம்; அகம் அதனால் தூய்மைப்படாது என்றார். புற நீராடலால் பாவம் போய்விடும் என்பது ஏமாற்று வேலை என்றார் அவர். அவர்களை 'மறைந்தொழுகும் மாந்தர்கள்' - சுருக்கமாக, 'களவு செய்வோர்', 'முகமூடிகள்' என்றார் அவர். தண்ணீரால், அது எத்தனைப் புனிதநீர் என்றாலும் வெளியே உள்ள அழுக்கைத்தான் போக்கும். நல்ல, தூய தீர்த்தமாடுதல் - நல்லதே. அதாவது அது புற அழுக்கைப் போக்க உதவுமென்பதால். அதே சமயம் அந்த நீர் அக அழுக்கை நீக்குமா? அதனால் பாவம் தோசம் நீங்குமா?

எனவே மனத்தைத் தூய்மையாக வைத்துக் கொள்வதே, 'ஆளுமை' எனலாம். அந்த மனம் 'திறந்த புத்தக'மாக இருக்கும்; அது கசங்காத - புலராத - வாடாத மனமாக இருக்கும். மனத்தைத் தூய்மைப்படுத்தும் கருவி வாய்மை - மெய்ம்மை - உண்மை என்பது அறிய வேண்டிய ஓர் அறம்.

'மனம் தூயார்க்கு எச்சம் நன்றாகும்' என்றார் திருவள்ளுவர். அன்றே திருவள்ளுவர்க்கு உயிர் மரபணுக்கள் (Gene-மரபை உறுதிப்படுத்தும் நுட்ப அணு) பற்றிய, அறிவியல் நுட்பம் தெரிந்திருந்தது. மனத்தினுள் இருப்பதை யார் அறிவார்? நல்லவர் போல் நடிப்பவரிடமெல்லாம் நல்ல மனம் இருக்குமென நம்புகிறீர்களா? அல்லது, நல்ல மனமுடையவர் போல் நடித்து, நல்லவர்களாகிவிட முடியுமா?

வெளியே நல்லவர் போல் காட்டிக் கொண்டு, நாடகமாடி, பிறரை நம்பவைத்துவிடலாம் என எண்ணாதே.

'உனக்குப் பிறப்பவன்; பிறனுக்குப் பிறப்பவன்' என அந்த மரபணு, உள்ளுக்குள்ளேயே, அவனவன் வழிவழிக் குடிக்கு - பரம்பரைக்குச் சென்று

வெளிப்படும். தீய மரபணு வளரின் உன் குடி அழியும். நீ உன் பிள்ளைகளுக்குச் சொத்துச் சேர்த்து வைத்துவிட்டதாக வீணே மகிழாதே! உன் உள்ளுக்குள் நீ சேர்த்துச் சேமித்து வைக்கும் அந்த அழுக்கு – மரபணு போகவே போகாது; அதுதான் தொடரும். குருதியொடு குருதியாய்த் தொடர்வது அது. அதுதான் நீ உன் மக்களுக்கு நீங்காது சேர்த்து வைக்கும் சொத்து; பிற செல்வம், சொத்து எல்லாம் நீங்கிவிடும்; மாறிவிடும். ஆனால் இந்த மரபணுவில் தோய்ந்த ஒன்று, மாறாது; போகாது; தொடரும்.

மனம் தூயார்க்கு எச்சம் நன்றாகும் – அது உன் மகனை நல்லவனாக்கும்; உன் பேரனைத் திறமைசாலியாக்கும்; உன் பிரதிபலிப்பு – வழிவழி வாரிசுகளிடம் தென்படும்; வெளிப்படும். இது எவ்வளவு அடிப்படை உண்மை. எனவேதான் ஆளுமை என்பது, தோற்றத்தில் மட்டுமில்லை; மனத்திலேதான் இருக்கிறது என்று வள்ளுவம் விளக்குகிறது.

**குஞ்சி அழகும் கொடுந்தானைக் கோட்டழகும்**
**மஞ்சள் அழகும் அழகல்ல – நெஞ்சத்து**
**நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால்**
**கல்வி அழகே அழகு** (நாலடியார்)

குஞ்சி – தலைமுடி. தானை – வளைத்துக் கட்டிய உடை. கல்வியே அழகு – என்று மட்டும் கூறாததைக் கவனிக்க வேண்டும். நெஞ்சத்து நல்லம் யாம் – என்று தனக்குத் தானே எண்ணும்படியான கல்வி வேண்டுமாம். உன் மனமே சொல்லுமே, நீ நல்லதை எண்ணுகிறாயா, தீங்கை நினைக்கிறாயா என்று. நீ பிறருக்கு உன்னை மறைக்கலாம். உன்னை நீயே மறைத்துக் கொள்ள முடியாது. உன்னுக்குள் இருப்பதே, உன்குருதி அணுவில் படிகிறது.

நூறு முறை சொல்லிப் பாருங்கள்; நினைத்துப் பாருங்கள். 'நல்லவன் நான்', 'நான் நல்லவன்' – என மன ஓர்மை போல எண்ணுங்கள். நல்லவனாகிவிடும் உந்துதல் தரும் அது – அதுதான் மன ஓர்மை; தியானம்.

உண்மையில் இம் 'மன ஆளுமையே' கண்ணில், முகத்தில், தோற்றத்தில் நடை உடை பாவனையில் எல்லாம் வெளிப்படும். உண்மையான ஆளுமை இங்கேதான் தொடங்குகிறது.

## உங்களைச் சுற்றிலும் ஒளி பரவட்டும்

சூரியன், முழுமதி, விளக்குச் சுடர் – என எதனைச் சுற்றிலும் ஓர் ஒளிவட்டம் புலப்படும்.

பெரியவர்களை ஓவியத்தில் வரையும் போது, அவர்களின் முகம் – தலையைச் சுற்றி, ஓர் ஒளிவட்டமும் வரைவதுண்டு.

உங்களைச் சுற்றிலும் ஓர் 'ஒளி' வட்டம் இருக்க வேண்டும். அதுதான் உங்களின் ஆளுமையைப் பிறருக்குப் படம்பிடித்துக் காட்டவல்லது.

'ஒளி' – என்பது என்ன? தமிழில் ஒளி, புகழ் என இரண்டு சொற்கள் உள. புகழ் – என்றும் நிலைத்து நிற்பது. பாரியை, இன்று பாராட்டுவது புகழ்; காந்தியடிகளை, சவர்கலால் நேருவை, இலால்பகதூர் சாத்திரியை, தந்தை பெரியாரை, அறிஞர் அண்ணாவை நாளைக்கும் சிறப்பித்துப் பேசுவர். அது புகழ்.

ஒளி – தான் உளனாய காலத்து மிக்குத் தோன்றுதலுடைமை. ஆங்கிலத்தில் Personality என்ற சொல்லுக்கு, நிகரான பொருளுடைய தமிழ்ச் சொல், இவ் 'ஒளியுடைமை' தான். பரிமேலழகர் உரை இது.

உங்களைப் பார்த்ததும் ஒரு பெருமிதமான உணர்வு வரவேண்டும். அதனைத்தான் பரிமேலழகர் 'மிக்குத் தோன்றுதலுடைமை' என்றார். இது ஒவ்வொருவரிடத்திலும் ஒவ்வொரு வகையில் காணப்படும்.

சிலர் 'குரலே' ஆளுமையுடையதாக இருக்கும். அந்தக் குரல் பலரைச் சொல்வதைக் கேட்க வைக்கும். குரல் ஆளுமையால், ஒரு படையையே அடக்கி ஆள முடியும். சிலரது குரல் ஒலி – ஒரு சிறு கலகத்தை அடக்கப் போதுமானதாக இருக்கும்.

மேலை நாடுகளில் இன்று, தொலைபேசி வழி, நேர் காணல் நிகழ்த்தி, குரல் ஆளுமையை வைத்தே வேலைக்கு அமர்த்தி விடுகின்றனர்.

'தான் உளனாய காலத்து மிக்குத் தோன்றுதலுடைமை' என்ற, பரிமேலழகர் வாக்கை மீண்டும் நினைத்துப் பார்க்க வேண்டும்.

**ஒளிஒருவற்கு உள்ள வெறுக்கை இளிஒருவற்கு**
**அஃதிறந்து வாழ்தும் எனல். (971)**

**பரிமேலழகர் உரை :**

ஒருவனுக்கு ஒளியாவது, பிறரால் செயற்கரிய செய்வேம் என்று கருதும் ஊக்க மிகுதி.

ஒருவனுக்கு மாசாவது, அச்செயலை ஒழிந்து, உயிர் வாழக் கடவோம் என்று கருதுதல் என்றவாறு.

வாழும் போது பெறும் பெருமிதமான பாராட்டு, ஒளிதான்.

'ஒளி நிறான் ஓங்கு புகழ் செய்யான்' – (நாலடியார்)

என்றார் பிறரும். ஒளி நிறுத்தல் – வாழும் போது; புகழ் – காலமான பிறகும் தொடர்தல்.

இவ்வாறு பரிமேலழகர் எழுதும் விளக்கமே சிறந்தது. 'உளனாய காலத்து' – உயிர் வாழும் காலத்தில் என்றது இருக்கும்போதே ஒளி திகழ வாழ்தல்; ஆளுமையுடன் திகழ்தல்.

பெர்னாட்சா, மனித வாழ்வை மெழுகுவத்திக்கு ஒப்பிட்டார். அது ஒளிதரும் போதே, கரைந்து கொண்டிருக்கிறது. 'கரைந்து முடிவதற்குள், முடிந்தவரை ஒளி வீசட்டும்!' என்றார் அவர்.

வெறுக்கை – என்பதற்கு முன்பு மிகுதி என்பது பொருள். பலர் இருக்குமிடத்தில், ஒருவன் தனிப்படச் சிறப்புற்றுத் தோன்றப் பார்த்திருக்கலாம். ஒரு தொழிலகத்தில், எப்பொழுதும் பத்துப்பேரிடையே, ஒருவரது பணி மிக்குத் தோன்றும்; பிறரினும் சிறப்பாக, பயனுடையதாக இருக்கும். இசைக் கலைஞர்களிடையே, ஒருவரது இசை பற்றியே பலரும் வியந்து பேசுவர்.

அதனால் திருவள்ளுவர் கருத்து, ‘நீ பிறரினும் சிறப்புற்றுத் தோன்றுபவனாக, செயற்கரிய முயற்சிகளில், ஈடுபட்டு அவற்றில் வெற்றி பெற்று, வாழும்போதே பலரினும் மேம்பட்டு விளங்குக! அதுவே உன் ஆளுமை’ எனக் கூறுவதாகவுளது.

ஆடம்பரம், புறத்தோற்றத்தில் மட்டும் பிறரினும் மேம்பட்டுக் காட்டுதல் எல்லாம் வள்ளுவர்க்கு ஏற்புடையன அல்ல.

திருவள்ளுவர் ‘ஒளி’ எனும் சொல்லுக்கு எதிராக ‘இளி’ என்னும் ஒரு சொல்லை ஆள்கிறார். ஆடம்பரம் செய்து விட்டு, செய்யத் தகுவனவற்றைச் செய்யாமல் பகட்டுவதை அவர் இளி அதாவது ‘அவமானம்’ என்று கூறுகிறார். அதனை எல்லாம் விட்டுவிட்டு, ‘வெள்ளுடை வேந்தர்களாகப்’ பவனி வந்தும் வாழ்ந்து விடலாம் என்பவர்களை அவர் ‘காறி உமிழ்கிறார்’ என்றே கூறலாம். அவர் சொல்லாட்சிகள் அவ்வாறுள்ளன.

## மானம் உடையவனே ஒளியுடையவனாவான்

ஒளியுடைமை உள்ளத்தின் பெருமிதம். எதனையும் ‘எதிர்கொள்ள வல்லவர்’ எனும் தோற்றப்பொலிவு. தூக்குமரத்தின் எதிரே நிற்கும்பொழுதும் சிரித்த முகம் வாய்க்குமாமே உள்ளத்தின் ஒளி முகத்தில் தெரிகிறது. ‘உள்ளத்தில் ஒளியுண்டாகில், வாக்கினிலே ஒளி உண்டாகும்’ – என்றார் பாரதியார். அதனை நாம் கண்களிலும் முகத்திலும் பார்க்கலாம்.

இப்படிப்பட்ட ‘உள்ளம்’ – வேண்டுமேல், மான உணர்ச்சி வேண்டும். மானம் என்பது உயிரினும் மேலானது. மானம் உடையவன் பொய் பேசக் கூசுவான்; களவாட வெட்கப்படுவான்; கையூட்டுப் பெற அஞ்சுவான்.

இன்று இம்மூன்றும் செய்பவர்களே, 'கார்'களில் நகர்வலம் வருகிறார்கள்; யானை மீது ஏறி பவனி வருகிறார்கள். அவர்களையே மக்கள் தொழுகிறார்கள்! நாணமும் மானமும் உடையவர்கள் ஒதுங்கிப் போகிறார்கள்.. அவர்களை மக்கள் புறக்கணிக்கிறார்கள்.

**இளிவரின் வாழாத மானம் உடையார்**
**ஒளிதொழுது ஏத்தும் உலகு** (970)

அரியலூரில் இரயில் தடம்புரண்டதற்கு, அன்றைய அத்துறை அமைச்சர் இலால் பகதூர் சாத்திரி பதவி துறந்தார். இன்று இது நம்ப முடியாத கனவாகி விட்டது. வாழாத – என்றால் அப்பதவியில் நீடிக்காத என்றும் பொருள்படும்.

'குடி'ப்பவன் தலைகுனிந்து நடந்த காலங்கள் உண்டு. பொற்கைப் பாண்டியன் கதை தெரியுமல்லவா? வழக்கம் போல் நள்ளிரவில் நகர்காவல் வந்தான் மன்னன். மாற்றுடையில் வந்த அவன், கணவன் ஊர் போயிருந்த ஒரு வீட்டில், தனிமையிலிருக்கும் பெண்ணைக் காப்பதையும் கருத்திற் கொண்டான். ஒருநாள் இரவு, பேச்சுக் குரல் கேட்கவே, ஐயப்பட்ட மன்னன் கதவைத் தட்டிவிட்டான். உள்ளேயிருப்பது கணவனே என அறிந்ததும் போய்விட்டான். ஆனால் அக்கணவனுக்கோ, மனைவி மீது ஐயப்பாடு. வழக்கு அரசன் முன் வந்தது. 'அவ்வாறு நடந்தவனுக்கு என்ன தண்டனை தரலாம்?' என்று பாண்டியன் கேட்க, 'தனியே இருக்கிறாள் எனக் கெட்ட எண்ணத்தோடு ஒருவன் கதவைத் தட்டியிருந்தால், அக்கையை வெட்டிவிடலாம்' என்றனர் அவையோர். 'நல்ல எண்ணத்தோடு, நான்தான் தட்டினேன' என அரசன் வழக்காட விரும்பவில்லை. அது ஐயத்தை முழுமையாக நீக்கிவிடாது. அதனால் வாள் ஒன்றைக் கொணரச் செய்து தன் கையையே வெட்டிக் கொண்டான் மன்னன். பிறகுதான் உலகு உண்மையை ஒப்பியது. அவன் பிறகு பொய்க்கை செயற்கையுறுப்புப் பொருத்திக் கொண்டிருக்கலாம். ஆயினும் அவனுக்குப் பொற்கை வளர்ந்ததென உலகம் புகழ்ந்தது. இதை ஒரு படிமக் கதையாக எடுத்துக் கொள்ளுங்கள். நாம் பிறருடைய மானத்தையும் காக்க வேண்டும்; நாமும் மானம் உடையவர்களாக வாழ வேண்டும்.

இன்று சிலரை வெளிச்சம் போடுகிறார்கள் என்று பேசக் கேள்விப்படுகிறோம். உண்மையான ஒளியுடைமை அல்ல என்பது அதன் கருத்து. தன் கணவனைக் 'கள்வன்' என்றதனாலேதான், கண்ணகி பொங்கி எழுந்தாள். ஊரே நெருப்பில் பொங்கியது. மன்னன் எதிரே அவள் வந்தபொழுது, அந்த வாயில் காவலனுக்கு, அவள் காளியாகவே தோற்றமளித்தாள். 'தெய்வ ஆவேசம்' – ஏதோ அச்சம் தரும்படியான தோற்றம் கண்ணிற்பட்டது.

**மெய்யில் பொடியும், விரித்த கருங்குழலும்**
**கையில் தனிச்சிலம்பும் கண்ணீரும் – வையைக்கோன்**
**கண்டளவே தோற்றான், அக்காரிகைதன் சொல்செவியில்**
**உண்டளவே தோற்றான் உயிர்.**

இந்தத் தனி வெண்பாவில், கண்ணகி நம் கண் முன்னே நிறுத்தப்படுகிறாள்; மெய்(உடம்பு முழுவதும் புழுதி கணவனைத் தரை மீது தழுவிக் கரைந்து புலம்பி வந்தவள் அல்லவா? கரிய கூந்தல் விரிந்து காற்றில் பறக்கிறது;

கையில் ஒற்றைச் சிலம்பு இருக்கிறது; கண்ணீரோ கொட்டுகிறது. இது ஒரு மான உணர்ச்சியால், உந்தப்பட்ட ஒரு பெண்ணின் வீரமிகு தோற்றம். இதுவும் ஒரு 'மிக்குத் தோன்றுதல்' தான்! மான உணர்வால் எழுந்தது இது. இந்தத் தோற்றத்தைக் கண்டதுமே, பாண்டியன் தோல்வியை உணர்ந்தானாம்; அவள் பேச்சைச் செவியில் (உண்டதும்) கேட்டதும் உயிரையும் இழந்தானாம்!

இங்கு யாருடைய மானவுணர்ச்சி பெரிதென்று எண்ணமுடியாத சூழல், படமாகியுளது.

இது 'ஆளுமை' பற்றிய மேனாட்டார் கருத்தினின்றும் சற்றே வேறுபடுகிறது.

உயரமான தோற்றம், தாள் தொடு தடக்கை, உயர்ந்த உடை – பார்க்க ஒரு பெருமையான காட்சி – இவை உடைமையை அவர்கள் பெரிதுபடுத்துவர்.

திருவள்ளுவர்க்கு அது உடன்பாடன்று. ஒளி பற்றிப் பேசும் பல இடங்களில், அவர் புதுமையாகவே கூறுகிறார்.

எனக்குத் தெரிந்த ஒருவர்; அறிவியல் கற்றவர். உயரமான தோற்றத்தாலேயே மூன்று முறை துணை வேந்தராகி விட்டார். பிறரினும் அவர் சாதித்தது என்று எதுவுமில்லை. இவ்வாறு, சுகமாக அரசுச் செலவில் காலத்தை ஓட்டுபவர் பலர்.

அவர் ஓர் அமைச்சர்; சூழ வருவார். ஒரே பரபரப்பாக இருக்கும். அதுவும் ஒளியுடைமை அன்று. ஒரு கட்சித் தலைவர்; தாமே எடுத்த விழாவிற்கு ஐந்து மணிக்கு வரவேண்டியவர்; ஏழரை மணிக்கு வந்தார். ஒரே ஆரவாரம். ஆயிரம் பேர் 2 1/2 மணி நேரம் காத்திருந்தனர். வரும் போதே பளபளப்பாக வந்தார். இதுவும் ஒளியுடைமை அன்று. 'மக்களே போல்வர் கயவர்' என்ற குறளே நினைவுக்கு வரும்.

சிங்கப்பூரில் ஒரு நிகழ்ச்சி. நான்கு மொழி சார்ந்த, படைப்பாளிகளில் சிறந்த நால்வருக்கு, ஆளுக்கு நம்மூர்ப் பணம் ஏறத்தாழ மூன்று இலட்சம் பரிசு தரும் நிகழ்ச்சி. அதற்கு அமைச்சர் வருதற்குமுன் இரவு 8.15 வரை சிறு விருந்து. அவர் 8.15-க்கு வருவார் என்று அழைப்பிதழில் போட்டிருந்தது. அமைச்சர் 8.14-க்கு உள்ளே நுழைகிறார்; கால் மணி நேரமே பேசுகிறார். தன்னந்தனியே, தாமே காரை ஓட்டி வந்த அவருக்கு, ஒரு சிறு நினைவுப் பரிசு தந்ததை, எடுத்துப் போகக்கூட, ஒருவர் துணைக்கு வரவில்லை.

முன்னைய கட்சித் தலைவரை 'ஒளி'யுடையவர் என்றும் பின்னையவரை ஒளியற்றவர் என்றும் கருதக் குறள் இடம் தரவில்லை.

'உள்ள வெறுக்கை' - உள்ள மிகுதி; பெருமிதமான எண்ணம்; எதனையும் சாதிக்க முடியும் எனும் பெருமிதத் தோற்றம்; செயற்கரிய செய்யும் திறமை; பிறரினும் மேம்பட்டுக் காட்டவல்ல முயற்சியுடைமை - இவையே திருவள்ளுவர் ஒளியுடைமைக்கு (Personality) வகுத்த இலக்கணம்.

எது 'இளி'; எது 'ஒளி' என்பதை, முடிவில்தான் அறிய முடியும். உடற் குறையுடையவனிடமும் 'ஒளி'யிருக்கக்கூடும். அதனால் 'ஆளுமை' என்பதற்கு, நாம் மேனாட்டார் தந்த விளக்கங்களைவிட, குறள்வழி விளக்கங்களையே ஏற்றுப் போற்ற வேண்டும்.

ஒரு தொழிலை நடத்துபவன்; ஒரு விளையாட்டு வீரன்; ஒரு கலைஞன்; ஏன்? - ஒரு சமையல் வந்லுநன்கூட, வாழுங் காலத்தே 'ஒளி'யுடன் திகழவேண்டும்; திகழ முடியும்.

அங்கே ஒரு நூற்பாலை; அதில் பலர் வேலை செய்கிறார்கள். மேலாண்மையாளர்களாகப் பலர் வேலை செய்கிற இடம், அது. ஆனாலும் அங்கு வருகிற பலர், குறிப்பிட்ட ஒருவர் பெயரை - 'மெய்யப்பன் இருக்கிறாரா?' - என்று கேட்டுக் கொண்டுதான் உள்ளே வருகிறார்கள். இது எதைக் காட்டுகிறது?

காரியங்களை எளிதில் முடித்துத் தருபவர்; எதனையும் குழப்பிவிடாதவர்; வஞ்சனை அற்றவர்; ஏதேனும் ஒருவகையில் உதவக் கூடியவர்; நம் சிக்கல் அவராலேயே முழுவதும் தீரும் - இப்படிப் பலரது மனத்தில் இடம் பிடித்தவரை, அத்தொழிற் கூடத்தில் 'ஒளியுடைய ஒருவர்' எனலாம் அல்லவா?

எனவேதான் திருவள்ளுவர் 'ஆளுமை மேம்பாடு' என்பதில் மிகப் பல செய்திகள் அடங்கியுள்ளன என்றார். அதற்கு ஒளியைப் படிமமாக்கினார்.

ஹிட்லரிடம் ஆளுமை இல்லாமலா போய்விட்டது? அதுவும் ஒரு தனி ஆளுமை Personality தானே? ஆனால் உலகெலாம் ஒப்பினாலும் வள்ளுவம் அதை ஒப்பவில்லை. 'மனநலம்' இல்லாதது, ஆளுமை ஆகாது என்பதே வள்ளுவர் கருத்து.

# வாழும் ஒளி

அவரிடம் படித்த மாணவன் மாவட்ட ஆட்சியராகி விட்டான். அவர் இருக்கும் மாவட்டத்திற்குத் தலைவராக மாணவரை அரசும் நியமித்துவிட்டது. அன்று மாணவருக்குப் பாராட்டு விழா. மாவட்ட வணிக வளாகத்தில் விழா. பெரியவர்கள் கூட்டம். முதல் வரிசையில் ஆசிரியர் அமர்ந்திருந்தார்.

ஒரு காலத்தில் அவர் ஆசிரியர்; இன்று மாவட்ட ஆட்சியராக வந்திருப்பவருக்கும் ஆசிரியராய்ப் பாடம் நடத்தியவர். இன்று அகவை முதிர்ந்தவரென்பதால், முதல் வரிசையில் உட்கார வைத்தனர். குறித்த நேரத்தில் ஆட்சியர் மண்டபத்திற்குள் நுழைந்தார். எல்லோரும் எழுந்து நின்றனர். பெரிய தொழிலதிபர்கள். செல்வர்கள் எல்லோரும் எழுந்து நின்றபோது, ஆசிரியரும் எழுந்து நின்றார். ஏன்? அதுதான் பண்பாடு.

**இளையர் இனமுறையர் என்றிகழார் நின்ற**
**ஒளியோடு ஒழுகப் படும்** (698)

இதற்குப் பரிமேலழகர் உரையைவிடப் பிறர் உரைகள் சிறப்பாக உள்ளன. நின்ற ஒளி என்பது என்ன? ஒருவர் இப்போது நிற்கின்ற அல்லது இருக்கின்ற சிறப்புடைமை. உணவு விடுதியில் மேசை துடைத்தவன் முதலாளி ஆகி இருக்கலாம். காற்செருப்புத் தைத்தவன் மகன் அமெரிக்க அதிபராகியிருக்கலாம், ஆப்பிரகாம் லிங்கனைப் போல. நாளிதழை வீடு விடாகப் போட்டவன், கனவிலும் கற்பனை செய்ய முடியாத விஞ்ஞானியாகியிருக்கலாம், தாமசு ஆல்வா எடிசன் போல. அல்லது, நம் அப்துல் கலாம் போல.

வாழ்க்கை என்பது மேடு பள்ளங்கள் நிறைந்ததே. ‘ஆறிடு மடுவும் (பள்ளமும்) மேடும் போலாம்’ என்பர். ஆறு தன் ஓட்டத்தில் மேட்டைப் பள்ளமாக்கிவிடலாம்; பள்ளத்தை மேடாக்கி விடலாம். அதனால்தான் திருவள்ளுவர் நின்ற ஒளி என்றார். அதாவது இப்பொழுதிருக்கிற நிலை. நாமும் அதற்கேற்ப நடப்பதே நாகரிகம்.

நான் ஆசிரியனாக இருந்தபோது இவன் சின்னப் பையன்; என்னிடம் அடி உதை வாங்கிப் படித்தவன். இப்போது கலெக்டராகி

விட்டானாம்! அதற்காக நானும் ஏன் எழுந்திருக்க வேண்டும்? நான் ஒவ்வொரு முறை வகுப்பிற்குள் நுழையும்போதும், எழுந்து நின்ற சிறுவன் தானே இந்தப் பயல்!

இவ்வாறெல்லாம் எண்ணவே கூடாது. இளையர் என்னைவிட அகவையில் (வயதில்) இளையவன் தானே என்று எண்ணாதே! இன முறையர் – இன்ன வகையில் உறவுடையவன் – தொடர்புடையவன் என்றெல்லாம் எண்ணிப் பாராதே! என்னிடம் வேலை பார்த்தவன் தானே – எனக்குக் கீழே எழுத்தனாக இருந்தவன் தானே – என்னிடம் கடன் வாங்கி, முன்னுக்கு வந்தவன் தானே என இவ்வாறெல்லாம் எண்ணாதே! பிறகு....

'நின்ற ஒளியோடு ஒழுகப்படும்' – அவன் இப்பொழுது பெற்றிருக்கிற சிறப்புக்கேற்ப நடந்து கொள். இதுதான் நல்ல உலகியல்!

அதற்காகப் போலி வேடம் போடும் சாமியார்கள், ஊரை ஏமாற்றும் தலைவர்கள், வீணே மிரட்டும் அதிகாரிகள் – ஆகிய இவர்களுக்குப் பணிவு காட்டுக என்று கூறவில்லை.

'நின்ற ஒளியோடு' – என்கிறார் திருவள்ளுவர்.

நல்ல நிலையில் முன்னுக்கு வருவதே 'நின்ற ஒளி'. இன்றேல் அது இளி. அவர்களுக்கு எழுந்திருப்பதோ, காலில் விழுவதோ சரி என்று வள்ளுவர் கூறியதாக எடுத்துக் கொள்ளக் கூடாது.

இதற்கு வேறுவிதமாகவும் எண்ணிப் பார்க்க வேண்டும். அதற்கும் இடம் தருவதே குறளின் சிறப்பு. உன்னை வளர்த்தவர்களே பணிவன்புடன் பாராட்டும்படி, நீ உழைத்து முயன்று முன்னேறி ஒளியுடன் திகழ்தல் வேண்டுமென்று கூறிய அறிவுரையாகவும் இஃது அமைகிறது.

மேதகு குடியரசுத் தலைவர் ஆ.ப.ஜெ. அப்துல் கலாம் இராமனாதபுரம் சுவார்ட்சுப் பள்ளியில் பயின்றவர்; உச்சநிலைக்கு வந்த போதும், அவர் தாம் படித்த பள்ளியைப் பார்வையிடச் சென்றார். இவர் படித்த காலத்தில், இவரைக் கண்டித்து, 'நன்கு படிக்காவிட்டால் உருப்பட மாட்டாய்' என்றெல்லாம் அன்று திட்டிய ஆசிரியர், கலாம் அவர்களை வரவேற்றவர்கள் இடையே காணப்படவில்லை. தயக்கம் காரணமாக, ஒதுங்கி இருந்த

அவரைத் தேடிப் போய், 'உங்களால் தான் நான் உருப்பட்டேன். நீங்கள் அன்று என்னைக் கண்டித்தது, கடிந்து பேசியன எல்லாம் என் நன்மைக்கே' என்று அன்புடன் கூறி, அவரது வாழ்த்தினையும் பெற்றதை இதழ்களில் படித்தோம். இங்கும் 'நின்ற ஒளியோடும் ஒழுகப்படும்' என்பது இருவருக்கும் பொருந்தும். ஆசிரியரும் நிலைத்த அகல்விளக்காக ஒளி வீசியதாலேதான், அது மற்றுமொரு அகல்விளக்கை ஏற்றி, அதைக் குன்றின்மேலிட்ட விளக்காக உயர்த்தியது.

ஈசுவரச் சந்திர வித்தியாசாகரைப் பற்றியும் ஒரு நிகழ்ச்சி இங்கு நினைவு கூரத்தக்கது. ஒருமுறை கல்கத்தாவில் ஒரு பெரிய மாநாடு. அதற்கு அவரை அழைத்திருந்தார்கள். தொடர்வண்டி நிலையத்திற்கு முன்னே, மாநாட்டு ஏற்பாட்டாளர்கள் மாலை முதலியவற்றுடன் அவரை வரவேற்கக் கூட்டமாக நின்றிருந்தனர்.

கல்கத்தா நிலையத்தில் தொடர்வண்டி வந்து நின்றது. இரயில் நின்றதும், பெரியவர் இறங்கினார்.0 பக்கத்து முதல் வகுப்புப் பெட்டியிலிருந்தும் சூட்டும் கோட்டுமாக ஓர் இந்தியர் இறங்கினார். அவர் கையில் சிறிய கைப்பெட்டி ஒன்று இருந்தது. அவர் அதைத் தம்முடன் தூக்கிவர 'போர்ட்டர், போர்ட்டர்' எனக் கூறினார். வித்தியாசாகர், இவ்வளவு சிறிய பெட்டிக்கா போர்ட்டர்? என நினைத்து, அவரை அணுகி 'நான் தூக்கி வரட்டுமா?' என்றார். வித்தியாசாகர், காந்தியடிகளைப் போல, மிக எளிய உடையிலிருந்ததால், மற்றவர் அவரைக் கூலியாள் போலும் என நினைத்து, பெட்டியைத் தந்து, தூக்கிவரச் செய்து முன்னே நடந்தார்.

இரயில் நிலைய முன்பகுதிக்கு வந்ததும், பெட்டியைப் பெற்றுக் கொண்டு கூலி கொடுக்க முனையுமுன் எல்லோரும் 'வித்தியாசாகரை' வாழ்த்தி மாலை அணிவித்து, அழைத்துப் போவதைப் பார்த்துக் கூனிக் குறுகிப் போனாராம், அச்சின்னப் பெட்டிப் பெரிய மனிதர்.

இந்தியர்கள் சோம்பேறிகளாக இருக்கக் கூடாது; வீண் 'டம்பம்' செய்யக் கூடாது என்பதைக் கற்பிக்கவே, வித்தியாசாகர் அவ்வாறு நடந்து கொண்டார்.

இதிலிருந்து, மீண்டும் நாம் திருவள்ளுவர் சொல்லும் ஆளுமைக்கே திரும்புகிறோம். வித்தியாசாகரிடம் இருந்தது அக ஆளுமை; பெட்டி வைத்திருந்தவரிடம் இருந்தது புற ஆளுமை. புற ஆளுமை நல்லதுதான். எப்போது? அக ஆளுமையும் சேரும் போது. அக ஆளுமை இல்லாத, புறப்பகட்டு ஆளுமை ஆகாது. அது அகல்விளக்கு அன்று; மத்தாப்பூ! பொல பொலவென்று உதிர்ந்துவிடும்.

இரண்டு வகை ஆளுமைகளும் தேவையே என்பதும் இரண்டையும் ஒப்பிடும் போது அக ஆளுமைக்கே சிறப்பு மிகுதி என்பதும், அஃது இருந்தால் புறத்தே தோன்றும் பொலிவும் ஒளியும் பெருமிதமுமே ஆளுமை தந்துவிடுமென்பதும் பெறப்படுகின்றன.

## கல்வி உளவியலும் ஆளுமை மேம்பாடும்

'கல்வி உளவியல்' - பற்றி நன்கு அறிதல் வேண்டும். உலகில் அறிவே இல்லாதவன் என எவனும் இல்லை; மரம் செடி கொடிகளும் 'தொடுதலாகிய' ஓரறிவுடையன என்றார் தொல்காப்பியர். ஒரு கொடி தன் பக்கத்தேயுள்ள எதைப் பிடித்தாவது பற்றிப் படரவேண்டும் என்று யார் சொல்லிக் கொடுத்தார்கள்? மரம் ஏதேனும் ஒன்று இடையே தடையாயிருந்தால் அதற்கு வளைந்து கொடுத்து வளர்வதைக் காணலாம். தொட்டால் சுருங்கிக்குத் தொடுவது தெரிகிறதே! பருவ நிலைகளை அறியும் அறிவை, இப்பயிரினத்திற்கு யார் தந்தனர்? 'மோப்பக் குழையும் அனிச்சம்' என்றாரே திருவள்ளுவர். மோந்ததும் - காற்றுப்பட்டதும் வாடுவதேன்? சில பூக்கள் விடியும் போது மலர்கின்றன மற்றும் சில மாலைப் பொழுது தெரிந்து மலர்கின்றன. இவை 'பட்டறிவு' போலும்!

அது போலவே, ஆறறிவுடையவராகவே மாந்தர்கள் படைக்கப் படுகின்றனர். அந்த அறிவு வெளியிலிருந்து பெறப்படுவதன்று; ஒவ்வொருவர் உள்ளுள்ளும் இறைமை, அவ்அறிவை அமைத்தே படைக்கிறது. அதை வெளிக்கொணரும் தூண்டுகோல்தான் கற்றல் என்பது. உள்ளிருக்கும் மணம், ஒரு மலர் பூத்ததும், மொக்குள் விரிந்ததும் உள்ளிருந்து தானே, வெளிப்பட்டுப் பரவுகிறது. அது போல, உள்ளிருக்கும் அறிவை, மாந்தர் வெளிப்படுத்த முயலவேண்டும். இல்லாத ஒன்றை

வரவழைப்பதன்று கல்வி; இருப்பதைத் தோண்டித் துருவி, தங்கச் சுரங்கம் போல, வெளியே கொண்டு வருவதுதான் கல்வி.

'கல்லுதல்' என்றாலே தோண்டுதல் – என்றுதான் பொருள். அதிலிருந்தே 'கல்வி' எனும் சொல் வந்தது. தமிழ்ச் சொல் இன்றைய கல்வி உளவியலார் கூற்றுப்படி, அமைந்திருப்பதும் ஒரு வியப்பன்றோ?

ஆளுமையும் அத்தகையதே. ஒவ்வொருவரும் தத்தமது உள்ளிருக்கும் திறமை, ஆற்றல், கல்வி, பேச்சுவன்மை, செயல்திறன், ஆட்சித்திறமை, அன்புடைமை, பெருமை, சான்றாண்மை, குடிமைச்சிறப்பு என அனைத்தையும் வெளிப்படுத்துவதே ஆளுமை.

நாமே பலரைப் பணம் கொடுத்துக் கூட்டி, நம்மைப் புகழச் செய்வது; நாமே பொன்னாடை, மாலை வாங்கிக் கொடுத்து அவற்றை நமக்கே ஆள் வைத்துப் போடச் செய்வது; பல ஆயிரம் சுவரொட்டி நாமே அச்சுச் செலவு தந்து, அடித்து ஒட்டி விளம்பரப்படுத்துவது எல்லாம் 'ஒளி'யுடைமைகள் அல்ல.

ஒளியுடைமை அவரவர் தம் உள்ளிருந்து வெளிப்பட வேண்டும்; அதை உலகம் ஒப்ப வேண்டும்.

**ஒளியுடைமையே உலகைக் காக்கும்**

ஒருவரது ஒளியுடைமை அவரது குடிவழிக்குப் போய்ச் சேரும். அவரது ஒளியுடைமையால் அவரைச் சார்ந்த இனமே பெருமை பெறும். ஓர் அரசியல் தலைவர் உண்மையான ஒளியுடையவரானால், அவரைப் போன்ற மற்ற தலைவர்கள் எல்லோர் மீதும் மதிப்பு ஏற்படும். தம் இனத்தையும் மதிக்க வைக்கின்றார் அவர்.

ஒரு 'காவலர்' தவறு செய்தால், அப்பழி எல்லாக் காவலர் மீதும் ஐயத்தை ஏற்படுத்தும்.

வெளியே வெளிச்சம் போடும் பலர் இந்த உண்மையை அறிவதில்லை. வெளியே தெரியாத அருவமாக இருப்பதால், இதைப் பலர் உணர்வதே இல்லை. 'ஓ, தீய எண்ணம், உடையவனே! சுயகாரியப் புலியே!

உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசி உலகை ஏமாற்றுபவனே! எந்த நேரமும் உள்ளுள் தந்திரமே நினைத்து, சூழ்ச்சிகளையே எண்ணி, உலகை ஏமாற்றுபவனே! வஞ்சகமே வடிவமாகத் தன் மனத்தை உருவாக்கிக் கொள்பவனே! நீயே உன் தலையில் மண்ணை வாரிப் போட்டுக் கொள்கின்றாய்! இதனால் உன் குருதியிலுள்ள மரபு அணு ஒவ்வொன்றும் வஞ்சக உருவெடுத்துப் பரம்பரைக்குச் செல்கிறது. இதனால் உன் குடி கெடுகிறது!' இவ்வாறு விளக்கும் வள்ளுவம் அறிவியல் வழிப்பட்ட நிலைத்த உண்மையாகும். இதனால்தான் தீயவனைத் திருத்த நினைக்கும் பொழுதெல்லாம் திருவள்ளுவர், '**குலம் சுடும் கொள்கை பிழைப்பின்**' (1019) என்றும் அவனேயன்றி அவனது சுற்றமும் '**உண்பதூஉம் உடுப்பதூஉம் இன்றிக் கெடும்**' என்றும் (166) திரும்பத் திரும்பக் கூறுகிறார்.

நல்லாட்சி செய்யும் அரசனே 'வேந்தர்க்கு ஒளி' (390) ஆவான். 'சாதி முழுதும் விளக்கலின் ஒளி' என்றார் என்பது பரிமேலழகர் உரை. அதாவது அவனால் வேந்தரினமே மதிப்புப் பெறுகிறது என்பதாம்.

கல்வியும் பண்பாடும் இல்லாதவனை நாம் வெல்ல வேண்டும். இன்றேல் அத்தகைய ஆற்றலற்றவனை 'ஒல்லானை' – 'ஒல்லாது ஒளி' (870) ஒளி பொருந்தாது. **சிறியாரை வெல்லவல்ல பெருமையும் பெருமிதமும் ஆற்றலுமே 'ஆளுமை' என்று திருவள்ளுவர் கூறுவதும் மிக இன்றியமையாத வாழ்வியலாகும்.** எளிமை எளிமை என்று தீயவனை வாழ விடுவதன்று; சின்னப் புத்திப் பகைவனுக்குப் பணிவதன்று ஆளுமை.

பெரும் குடிகாரன் தெருவில் நின்று, பித்துப்பிடித்தவன் போலக் கத்துவதைப் பார்த்திருக்கலாம். வாயில் வந்ததைப் பேசுவான். இதனாலேயே, 'கள்ளுக்கு' முன்காலத்தில் சொல் விளம்பி என்றே ஒரு குறிப்புச் சொல் வைத்திருந்தார்கள். கள் குடிப்பவர்கள் 'ஒளி இழப்பர்' என்பார் வள்ளுவப் பெருமகன் (921). அது போலவே, 'சூதாட்டத்தில்' ஈடுபடுபவர்களையும் 'ஒளி' சேராது (939) என்பார் அவர்.

உயிர்கள் அனைத்திற்கும் வாழ வேண்டுமென்ற 'அறிவு' உள்ளுள் உளது. மாந்தரினம் 'தான்' வாழ எண்ணுவதே இயல்பு. அது தவறன்று. தன்னை இழந்து வாழ்வது ஒரு வாழ்வாகாது. 'நான்' என்னும் செருக்கு அறுதல் வேண்டும் எனச் சமயங்கள் கூறுவது, வேறு ஒரு நிலை பற்றியது.

நான் – நாம் ஆக வேண்டும்; நாம் உலகம் ஆக வேண்டும். உலகம் ஒரு மானிடப் பெருங்கடல்; அதில் நாம் ஒரு துளி.

உயிரோடு இருப்பது வேறு; வாழ்வது வேறு. பிற உயிரினங்களைவிட, மாந்தன் மேம்படுவது, ஆறாவது மன அறிவாலேதான். அதனால் திருவள்ளுவர் மக்களை,

'வாழும் உயிர்'

என்று சிறப்பித்துக் குறிப்பிடுவார். அதிலும் சிறப்பாக வாழ்வதே – பிறரினும் மேம்பட வாழ்வதே நல்ல வாழ்வு.

'செய்யும் தொழிலே தெய்வம்'

– என்பார், பட்டுக்கோட்டை கலியாண சுந்தரம்.

உன்னை அறிந்தால் – நீ உன்னை அறிந்தால்
உலகத்தில் போராடலாம்.
உயர்ந்தாலும் தாழ்ந்தாலும் – தலை
வணங்காமல் நீ வாழலாம்
மாபெரும் சபையில் நீ நடந்தால் – உனக்கு
மாலைகள் விழவேண்டும்! ஒரு
மாற்றுக் குறையாத மன்னவன் இவன் என்று
போற்றிப் புகழ வேண்டும்!

– என்பார் கண்ணதாசன்.

## வினைத்திட்பம் என்பது மனத்திட்பம்

ஒருவரது 'ஆளுமை' வெளிப்படுமிடம் இது. 'நான் ஆளுமை உடையவன்' எனச் சொல்லிக் கொண்டிருப்பதிலே, என்ன பெருமை இருக்கிறது?

ஒருவர் தலைமையாசிரியராக இருந்து, ஒரு பள்ளியை நடத்துகிறார். அதை மாநிலத்திலேயே முதன்மையுடையதாக ஆக்கும்போது, அவரது ஆளுமையை உலகம் அறியும். ஒரு நாட்டை ஆள்பவனுக்கும் இது வேண்டும். ஒரு கடை நடத்தி வணிகம் செய்பவனுக்கும் ஒரு தொழில் தொடங்குபவனுக்கும் கூட இம்மனத்திட்பமும் அதனாலாம் வினைத்திட்பமும் வேண்டும். ஆகவே இது அவரவர் மனத்திலிருந்து வெளிப்படும் என்பது வள்ளுவம். மனம் – ஒரு கணினி போன்றது. அது ஒரு காரியம் என்றால், முன்கூட்டித் திட்டமிட்டு விடுகிறது. மிக இயல்பாக – இயல்பூக்கமாக அது வெளிப்படுகிறது.

நெரிசில் மிக்க நகரில், சிற்றுந்து, மகிழ்வுந்து அல்லது இரு சக்கர வாகனம் ஓட்டும் போது. நினைத்துச் செய்வதைவிட, கையும் கண்ணும் மிக இயல்பாகத் தாமே இயங்குகின்றன. கணப்பொழுது மாறினாலும் மோதிவிட நேரும். எனவே அதுவும் ஒரு மனத்திட்பமே.

**வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்**
**மற்றைய எல்லாம் பிற (661)**

மனத்திட்பம் – மனம் பழக்கப்படுவது; பண்படுவது. 'அடடே இப்படிச் செய்திருக்கலாமே என்று பின்னர் வருந்தாதபடி, ஒரே முடிவாக மனத்திண்மையோடு செயற்படுவது. அந்த மனத்திட்பம் எல்லோர்க்கும் அமைவதில்லை. திருமணச் சந்தடியில் மாலையை எங்கே வைத்தோம் என்று தேடுவார்கள். ஒரு காரியத்தைக் குழப்பமின்றி முடிக்க, முன் கூட்டி அமையும் மனத்திட்பம்தான் அடிப்படை.

நம் மகளிருக்கு இவ்வினைத்திட்பம் இயல்பாக உண்டு. ஒரு திருமணம், திருவிழா வருகிறதென்றால், அவர்கள் குடும்ப நிகழ்வுக்காகத் திட்டமிடுவதில் வல்லவர்கள்.

மகளிரின் ஆளுமை மிகச் சிறந்தது அது சுடர்விட்டு ஒளிவீச நாம் தூண்டுதல் தர வேண்டும்.

உலகம் உய்ய இருவரது ஆளுமையும்
இன்றியமை யாதன எனலாம்.

# 3. தன்னம்பிக்கை

## தன்னம்பிக்கைக் குறள்கள்

தேர்ந்தெடுத்த பதினொரு குறள்கள் இங்கு உள. இவற்றை வாய்விட்டு உச்சரித்துப் பலமுறை படித்திடுக. இயலுமேல் நன்கு மனப்பாடம் செய்க!

இவற்றை நூற்றுக்கணக்கான முறை உச்சரித்தும் எழுதிப் பார்த்தும் திரும்பத் திரும்ப நினைப்பார்க்குத் தன்னம்பிக்கை பிறந்து, தன் முயற்சியாகி, தன் முன்னேற்றம் வாய்ப்பது உறுதி.

1. தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான் என்றாங்கு
   ஐம்புலத்தாறு ஓம்பல் தலை (இல்வாழ்க்கை 43)

2. தன்னைத்தான் காதலன் ஆயின் எனைத்தொன்றும்
   துன்னற்க தீவினைப் பால் (தீவினையச்சம் 209)

3. தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்
   தன்னையே கொல்லும் சினம் (வெகுளாமை 305)

4. ஒருமை மகளிரே போலப் பெருமையும்
   தன்னைத்தான் கொண்டொழுகின் உண்டு. (பெருமை 974)

5. வகையறிந்து தற்செய்து தற்காப்ப மாயும்
   பகைவர்கண் பட்ட செருக்கு (பகைத்திறம் தெரிதல் 878)

6. தெண்ணீர் அடுபுற்கை யாயினும் தாள்தந்தது
   உண்ணலின் ஊங்கினியது இல் (இரவச்சம் 1065)

7. தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும் (ஆள்வினையுடைமை619)

8. ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்கம் உடையா னுழை (ஊக்கமுடைமை 594)

9. ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழாதுஉஞற்று பவர். (ஆள்வினையுடைமை 620)

10. குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான் முந்துறும் (குடிசெயல்வகை 1023)

குறள் நூல் தன்னம்பிக்கை, தன் முயற்சி, தன் முன்னேற்றம் கூறித் தனி மனித முன்னேற்றத்தின் மூலம் மன்பதையுலகம் உயர வழிகாட்ட வந்ததேயாகும்.

## தன்னம்பிக்கைக் குறள் விளக்கம்

இப்பதினொரு குறள்களையும் மேலும் சற்று விளங்கும்படி விளக்கத்துடன் ஒரு முறை. இருமுறை படிக்க வேண்டும். விளக்கங்கள் எல்லாம் திருக்குறளை நினைவுகூர்வதற்கே. திருக்குறள் நம் மனத்தில் படிவதற்கே என்பதை மறவாமல் குறள் மூலத்தில் கருத்தைச் செலுத்துவோம்.

தன்னை மையமிட்டதே உலகம்
'தான்' இன்றேல், தன்னைவைத்தறியும், உலகமும் தனக்கில்லை.

தென்புலத்தார் தெய்வம்
விருந்து ஒக்கல் தான் என்றாங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை

ஒருவன் வருமானத்தில் ஆறிலொன்று அரசுக்கு என்பது பழந்தமிழ்ச் சமுதாய மரபு. ஏனைய ஐந்தையும், திருவள்ளுவர் இவ்வாறு பகுக்கின்றார். இறந்துபோன முன்னோர்களே தென்புலத்தார். தெய்வம் –

வழிபடு தெய்வங்கள், புதிதாய் வருவார், மற்றையோர் எனப் பலரையும் உபசரிப்பது விருந்து, ஒக்கல் – சுற்றத்தாரைப் பேணுதல். இவை தவிரத் தனக்கு எனவும் ஒரு கூறு வைத்துக் கொள்ள வேண்டுமாம். தான் உட்பட இவற்றைப் பேணுவது இல்லறத்தான் கடமையாகும்.

தன்னைத்தான் காதலிக்க வேண்டுமாம், வள்ளுவர் சொல்கிறார்.
முதலில் உங்களை நீங்களே காதலித்துப் பாருங்கள்!

**தன்னைத்தான் காதலன்**
**ஆயின் எனைத்தொன்றும்**
**துன்னற்க தீவினைப் பால்**

ஒருவன் தன்னைத்தான் காதலிப்பது உண்மையாயின், பிறர்க்குத் தீயனவற்றைச் செய்ய எள்ளளவும் நினைத்தல் கூடாது. ஏன்? தீவினை எறிந்த பந்துபோல் தன்னிடமே திரும்பிவரும். 'தன்னைத்தான் நட்புக் கொள்வது, காதலிப்பது' என்ற வள்ளுவரின் சிந்தனையோட்டம் நினைந்து நினைந்து மகிழ்தற்குரியது.

நீங்கள் உலகைக் காப்பது இருக்கட்டும்;
முதலில் உங்களை நீங்களே காக்க நினைப்பதுண்டா?

தன்னைத்தான் காக்கின்
சினங்காக்க; காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்

ஒருவன் தன்னைத் துன்பங்கள் தாக்காமல் காத்துக் கொள்ள வேண்டின், சினம் வராமல் காக்க வேண்டும். காவாது போவானாயின் அச்சினம் அவனையே கொல்லுவது போலும் கடுந்துன்பங்களை விளைவித்து விடும்.

**நீங்கள் பிறர்க்கு அடங்கி நடந்தே பழக்கப்பட்டவர்களா?**
**உங்களுக்கு நீங்களே அடங்கிக்கட்டுப்பட்டு நடந்து பழகியதில்லையா?**

**ஒருமை மகளிரே**
**போலப் பெருமையும்**
**தன்னைத்தான் கொண்டொழுகின் உண்டு**

கவர்வுபடாத ஒரே உறுதிப்பாட்டில் நிற்கின்ற மகளிர் தம்மைத் தாம் காத்துக் கொண்டு ஒழுகுவர். அது போல மாந்தர்தம் பெருமையும் அவரவர் தாம் தாம் தம்மைத் தீயனவற்றினின்றும் காத்துக் கொண்டு ஒழுகுவதனாலேயே உண்டாகும். 'தன்னைத்தான் கொண்டாழுகுதல்' ஒரு சிறந்த பண்பட்ட நாகரிகக் கோட்பாடு.

**பகைவருடன் மோதமோதப் பகை வளரும்! பகைவரை விட நாம் உயர உயரப் பகைவரின் செருக்குச் சரியும்!**

**வகை அறிந்து தற்செய்து**
**தற்காப்ப மாயும்**
**பகைவர்கண் பட்ட செருக்கு**

பகைவரை வெல்லும் வழிவகையை அறிந்து, அதற்கேற்பத் தன்னை வளர்த்துக் கொண்டு, தன்னிடம் பிழை, குறை நேராமல் காத்துக் கொண்டால் பகைவரிடம் தோன்றிய ஆணவச் செருக்குச் சரிந்து தூள்தூளாகி அழியும்.

**தானே முயன்று தேடியதை அனுபவிப்பதில் இன்பம் கூடுதலா? மற்றவர் உழைப்பில் பெற்றதை அனுபவிப்பதில் இன்பம் கூடுதலா?**

**தெண்ணீர் அடுபுற்கை**
**ஆயினும் தாள்தந்தது**
**உண்ணலி னூங்கு இனியது இல்**

நீராகாரம் போன்ற சோற்றுக் கஞ்சித் தண்ணீரேயாயினும் தன் முயற்சியால் பெற்றதை உண்பதைவிட இனிமையானது பிறிதொன்றில்லை. (மான உணர்வுடையார் தம் மனவெளிப்பாடு இது.)

'உழைக்கும் அளவு ஊதியமுண்டு' என்பது இயற்கை விதி.
அதிலும் விதிவந்து தலையிட 'விதி' உண்டா?

**தெய்வத்தான் ஆகாது**
**எனினும் முயற்சிதன்**
**மெய்வருத்தக் கூலி தரும்.**

ஒருவன் முயன்ற செயல், தெய்வத்தால் தான் கருதிய அளவு பயனைத் தாராது போயினும், அம் முயற்சியால், உடம்பை வருத்திய உழைப்பினளவு பயனைத் தந்தே தீரும். உழைப்பினளவு பயனுண்டென்பதும் விதியேயாதலின், மிகுதியாகத் தராவிட்டாலும் உரியது கிடைத்தே தீரும் என்பதாம்.

**அசைவிலா ஊக்கம் இருக்குமிடத்தை**
**ஆக்கம் தானே தேடிவரும்**

**ஆக்கம் அதர்வினாய்ச்**
**செல்லும் அசைவிலா**
**ஊக்கம் உடையான் உழை**

சிறிதும் அசைவற்ற, கடைசிவரை உறுதிப்பாடுடைய ஊக்கமுடையவனிடம், செல்வம் முதலாய ஆக்கமனைத்தும், அவனது முகவரிகேட்டு வழிவினவிக்கொண்டு தானே சென்று அடையும்.

**ஊழுடன் நடப்பது ஒரு போராட்டமே!**
**முயற்சி கூடினால் ஊழும் தோற்றோடும்!**

**ஊழையும் உப்பக்கம்**
**காண்பர் உலைவின்றித்**
**தாழாது உஞற்று பவர்.**

எவரொருவர் தமது முயற்சி ஊழால் தடைப்பட்ட போதும் மனங்குலையாது, அதற்குத்தான் தளர்ந்து தாழ்ந்து போகாது. கடினப்பட்டு மேன்மேலும்

உழைக்கின்றாரோ, அவர் அவ் ஊழொடும் போராடி அதனைப் புறங்கண்டு வெற்றி பெறுவார்.

**குடிகாக்க நாடுகாக்க உறுதி பூணுங்கள்!**
**தெய்வமும் முன்வந்து ஏவல் கேட்கும்!**

குடிசெய்வல் என்னும்
ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந்துறும்

தன் குடியைத் 'தளராமல் காப்பேன்' எனச் சூளுரைத்து முயலும் ஒருவனுக்குத் தெய்வமும் உடையைத் தாறு பாய்ச்சி, இறுகக் கட்டிக் கொண்டு, ஏவிய வேலையைச் செய்ய முன்வந்து நிற்கும்.

தன்னம்பிக்கை கொண்டு தன் முயற்சியால் உழைத்துத் தான் முன்னேறி, தன் குடியையும் நாட்டையும் உலகையும் வாழ வைப்பவனது பெருமைக்கு ஈடு இணையில்லை. ஒருவனது ஊக்கம், துன்பங்கண்டு துவளாமை, இடையறவுபடாத முயற்சி எனும் அத்தனைக்கும் இத் தன்னம்பிக்கையே அடிப்படையாகும்.

## தன்னம்பிக்கை உடையவன் வையத் தலைவனாவான்

திருவள்ளுவர் தனிமனித முன்னேற்றமே பெரிதும் சமுதாய முன்னேற்றம் என்று கருதுகிறார். அதனால் பெரும்பாலான குறள்கள் தனிமனிதனை நோக்கியன எனக் கருத இடந்தருகின்றன. ஒவ்வொரு மனிதன் பக்கத்திலும் நின்று தாயாய், தந்தையாய், அண்ணனாய், ஆசானாய், அறநெறி காட்டுகிறார். அவனவன் நிலைக்கேற்பவும், சூழ்லுக்கேற்பவும் தட்டிக் கொடுத்து முயல்க முன்னேறுக என அவர் கூறும் நெறிமுறைகள் உலக மாந்தர் அனைவருக்கும் பொருந்தும்.

'கற்க' என்பார் அவர். கல்லாதவனைப் பார்த்துக் 'கற்றிலனாயினும் கேட்க' என்பார். கண்தெரியவில்லை, வாய் ஊமையாயிற்றே என்றால்

'பொறி இன்மை யார்க்கும் பழியன்று' என்பார். இரவாமை கோடியுறும் என்பார். அதை மீறி இரப்பவனிடம் 'இரக்க, இரத்தக்கார்க் காணின்' என்பார்!

நண்பர்களாகப் பழகுவாரிடம்' முகத்தால் சிரித்துப் பழகுவது நட்பாகி விடாது; மனத்தால் மகிழ்ந்து மனங்கலந்து பழகுவதே நட்பாகும் (அகநக நட்பது நட்பு -786) என்பார். அதே திருவள்ளுவர் பகைவன் ஒருவன் நண்பனாக மாறிப் பழக வேண்டிய சூழல் வந்துவிட்டால், முகத்தால் நட்புக் கொள்வது போல் காட்டி, அகத்தால் நட்புக் கொள்வதை அறவே ஒதுக்கிவிடவேண்டும் (பகை நட்பாங் காலம் வருங்கால் முகம் நட்டு, அகநட்பு ஒரீஇ விடல் 830) என்று தெளிவுபடுத்துவார்.

ஈயாத மனமுடையவனைப் பார்த்து, அவனைத் தூண்டுவதற்காக,

**சாதலின் இன்னாத தில்லை இனிததூஉம்**
**ஈதல் இயையாக் கடை (ஈகை 230)**

என்று கடிந்து கூறுவார் போல, அவனது மானவுணர்வைத் தூண்டிப் பிறர்க்கு உதவி வாழும் நெறியில் அவனை நிறுத்துவார்.

ஈயும் மனமும் ஈவதற்கேற்ற வளமுமுடையவனைப் பார்த்து, அவன் தன்னையும் காத்து, உலகையும் காக்க வேண்டுமென்பார்.

**ஆற்றின் அளவறிந்து ஈக! அது பொருள்**
**போற்றி வழங்கும் நெறி** (வலியறிதல் 477)

என்பார்.

தன்னிடமிருக்கும் செல்வத்தின் அளவறிந்து கொடுக்க வேண்டும். தான் நன்றாக இருந்தால்தான் மேலும் மேலும் கொடுக்கலாம்.

திருவள்ளுவரைப் பற்றி, இங்ஙனம் பலவாறு நன்கு அறிந்து கொள்ள வேண்டும். அவரோடு மிக நெருங்கிப் பழக வேண்டும். அதாவது அவருடைய குறள் மொழிகளை அடிக்கடி படிக்கப் பயிலவே நற்பழக்கம் உண்டாகும்.

## ‘தன்’னில் மையமிட்டுத் தொடங்குவதே முன்னேற்றம்

‘தான்’ என்ற புள்ளியில் தொடங்கி, நீட்டப்படுவதே சமுதாயம். ‘தன்’னை விட்டுவிட்டு, ஒரு மன்பதை என்பதொன்றில்லை.

ஒருவன் தானும் வாழ்ந்து பிறரையும் வாழவைக்க வேண்டும். ஒருவன் தன் குடும்பத்தைப் பற்றிக் கவலைப்படமாட்டான்; தன்னையே கருதமாட்டான். அதனால் மற்றவர்க்குச் சுமையாக வாழ்கிறான் என்றால் யார் அவனைப் பாராட்டுவார்கள்?

துறந்தார் முதலாக அனைவர்க்கும் ‘இல்வாழ்வான் என்பான் துணை’ எனத் தானும் வாழ்ந்து, பிறரையும் வாழவைக்கும் திறத்தைப் போற்றும் வள்ளுவ மனப்போக்குப் பல இடங்களில் காணப்படுவதாகும்.

தன்னலம் என்பது பிறர் நலத்தில் கைவைக்கும் போது பிறப்பது.

‘தான்’ என்ற நினைப்பு சிற்றுயிர்க்கும் உளது. அந்த நினைவே, அதனை உலகில் ஓர் உறுப்பாக்கி, எல்லா நலன்களுக்கும் இட்டுச் செல்கிறது.

**எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது**
**தான்அமர்ந்து வரூஉம் மேவற்றாகும்** (1169)

என்பார் தொல்காப்பியர். தனக்கான இன்பவுணர்வுகள் மிக இயல்பானவை. ஒருவன் பல்லாயிரம் மக்கள் கூடிய பேரவையில், தன் பெயர் சுட்டிப் பாராட்டப் பெறும் போது, அளவற்ற மகிழ்ச்சிப்படுகிறான். சிற்றெறும்பும் மழை வரும் காலத்திலே, முட்டை கொண்டு மேட்டு நிலம் நோக்கிச் சாரைசாரையாய்ப் போவது எதைக் காட்டுகிறது? தன்னைக் காத்துக் கொள்ள – தன் உணவைப் பாதுகாக்க – தன் இன்பத்துக்காக நகரும் காட்சிதான் அது!

எல்லா உயிர்களுக்கும் இன்பவுணர்வென்பது தானாக விரும்பித் தன்னுள் பொருந்தி வரும் இயல்பாகும்! அஃதோர் அனிச்சைச் செயல்.

**'தன்' நம்பிக்கை என்பது என்ன?**

யாரையும் எதிர்பாராது தன்னால் எதனையும் சாதிக்க முடியுமெனத் தன்னையே நம்பி ஒரு செயலைத் தொடங்குவது; பிறருதவி, பிறர்துணையெலாம் இரண்டாம் இடமே; அவற்றைப் பெறுதற்கும் பயன்படுத்துதற்கும் முன்னால் தன்னைத் தான் அனைத்துக்கும் ஆயத்தப்படுத்திக் கொள்வது - தகுதிப்படுத்திக் கொள்வது; பிற எவ்வித உதவியுமில்லாவிடத்தும் தன்னால் சாதிக்க முடியுமென நம்புவது; அவ்வாறே செயற்படுவது யாவும் தன்னம்பிக்கைப் பாற்படும்.

தன்னை நம்புவதென்பது, முதலில் உறுதிபூண்பது - தன்னிடம் தகுதிகள் உண்டென எண்ணுவது, மேன்மேலும் தன்னைத் தகுதிப்படுத்திக் கொள்வது, தானாக நின்று - தாங்கி - முயன்று வெற்றி பெறுவது.

**தன்னம்பிக்கை தரும் முன்னேற்றம்**

திருக்குறள் முழுவதும் இழையோடிக்கிடப்பது இத் 'தன்னம்பிக்கைக்' கோட்பாடேயாகும். ஊழ் என்ற தலைவிதியும் இதன்முன் தோற்றோடும் என்பார் அவர். தெய்வமும் இத் தன்முயற்சி உடையவன் எதிரே, ஏவல் கேட்கக் கைகட்டிக் காத்து நிற்கும் என்பார். செல்வம், பட்டம், பதவி முதலாய ஆக்கமெல்லாம் இவனிடம் வழி தேடிக் கொண்டு ஓடி வரும் என்றும் அவர் கூறுவார்!

'தான்' என்பது அனைத்து
முயற்சிகளுக்கும் ஒரு தொடக்கம்

ஒருவன் ஒரு காரியத்தைச் செய்து முடிக்க எண்ணினால், அது அவன் மனத்தில் கருக்கொண்டு, உருவாகி, வெளிப்பட்டு முயற்சிப்படுகிறது. 'தான்' நன்கு உழைத்துப் பாடுபட்டுப் பொருள் தேடி உலகிற்கும் உதவி வாழ்வதுதான் சிறந்த வாழ்வு.

அதை விடுத்துத் தன் பெயரே வரவேண்டும்; தன் புகழே பரவ வேண்டும்; தான் நினைப்பதையெல்லாம் அடைய வேண்டும்; உலகம் என்பது தனக்காகவே உளது – அதைச் சுரண்டித் தான் வாழ்வதே சுகபோக வாழ்வு எனத் தன்னையே கருதி – தன்னல வெறி கொண்டலைவது தன்னம்பிக்கையன்று.

தன்னை அழித்துக் கொள்வது; தன் முயற்சி அற்றுக் கிடப்பது; 'தான்' என எண்ணுவதே தன்னலமென எண்ணிமறுகுவது இவையும் – பொருந்துவன அல்ல.

உலகில் வாழ்பவன் ஒவ்வொருவனும் தன்னை வைத்தே உலகைப் பார்க்கிறான். தன்னைக் காத்து வளர்த்துக் கொண்டே உலக அறம் பேணுகின்றான்.

**தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான் என்றாங்கு**
**ஐம்புலத்தாறு ஓம்பல் தலை.**

ஒருவனது வருமானத்தை ஆறாகப் பகுத்தால், ஆறில் ஒன்று அரசுக்கு இறையாக – வரியாகப் போய்விடும். எஞ்சிய ஐந்தில் ஒரு கூறினை, 'நீ உனக்காக வைத்துக் கொள்' என்று தற்காப்புக்கு வழி கூறுகிறார் வள்ளுவப்பேராசான்.

"எல்லா அறங்களும் தான் உளனாய் நின்று செய்ய வேண்டுதலின் தன்னை ஓம்பலும் அறனாயிற்று" என்பது பரிமேலழகர் விளக்கம்.

உலகம் பல நிலைகளையுடையது. தானே வாழவேண்டுமென நினைத்து, உலகை விழுங்கித் தான் மட்டும், கொழுப்பது ஒரு கொடிய நிலை. தன்னை அழித்துக் கொண்டும் உலகிற்குக் கொடுப்பது மிகப் பெரிய பேரறநிலை. அவர்கள் தனக்கென வாழாப் பிறர்க்குரியாளர்கள். அது கொடைமடம் எனப்படும். தானும் நல்ல நெறியில் வாழ்ந்து, பிறரையும் வாழவைப்பதே இயல்பான – பெரும்பான்மையோர் நிலை. திருவள்ளுவர் இந்த இயல்பான வாழ்வு நெறிகளையே மிகுதியாகவும் அடிப்படையாகவும் கொண்டு கூறுகிறார். அதனாலேதான் அது வாழ்வு நூல் எனப்படுகிறது.

**தன்னைத்தான் காதலித்தல்**

வள்ளுவக் கலைச் சொற்களில் ஒன்று 'தன்னைத்தான் காதலித்தல்' என்பது.

ஒருவன் செய்யும் தீவினை இறுதியில் தன்னையே வந்து பாதிக்கும். ஆதலால் மற்றவர்க்குத்தான் செய்கிறோம் என்றெண்ணித் தீயவற்றைப் பிறர்க்குச் செய்யாதே; நீ உன் மீது காதல் கொள்வது - உன்னையே நீ விரும்புவது உண்மையானால் பிறர்க்குச் சிறுதுன்பத்தையும் செய்ய நினைக்காதே என்பது இவ்வள்ளுவம்.

> **தன்னைத்தான் காதலன் ஆயின் எனைத்தொன்றும்**
> **துன்னற்க தீவினைப் பால்**

இதில் நாம் நினைவில் வைக்க வேண்டிய தொடர் தன்னைத்தான் காதலித்தல் பற்றியது. இயல்பாக நாம் நம்மை விரும்புகிறோம் என்பது உண்மைதான். ஆனால் காதலிக்கிறோமா?

காதலன் கடும்வெயிலில் நடந்தால், வீட்டிலிருக்கும் காதலியின் நெஞ்சம் சுடுகிறது. காதலி மழையில் நனைந்துவிட்டால் காதலன் நெஞ்சம் குளிரால் நடுங்குகிறது. ஒருவர் மீது துரும்பு பட்டாலும் மற்றவர்க்குப் பொறுப்பதில்லை.

எறிந்த பந்தைப் போல் தீவினை திரும்பி வரும் தன்மையுடையது. ஆதலால் உன்னை நீ காதலிப்பதுண்மையானால் என்று விழிப்புணர்த்தும் தொடர் அமைகிறது.

**தன்னைத்தான் காத்துக் கொள்ளுதல்**

சினத்திற்குச் சேர்ந்தாரைக் கொல்லி என்று புதுப்பெயர் சூட்டினார் திருவள்ளுவர். சினம் யார் மீது பாய்ந்ததோ அவனைத் தாக்குவதை விட, யாரிடம் தோன்றியதோ அவனையே முதலிற்பாதிக்கும்.

தன்னைத் தான் காக்க எண்ணுதல், கண்ணை இமை காப்பது போன்ற ஓர் அனிச்சைச் செயல்தான்! ஆயினும் காக்கும் வழியறிந்து காப்பதில்லை. குடி, புகை, போதை போலும் பழக்கத்திற்கு அடிமைப்பட்டவன் தன்னைத்தான்காக்காமல், எதிர்திசையில் செல்கின்றான்.

**தன்னைத்தான் காக்கின் சினங்காக்க; காவாக்கால்**
**தன்னையே கொல்லும் சினம்**

சினமும் ஒரு பழக்கமாகி விடுகிறது. கடுங்கோபம், கூச்சல், நரம்பு வெடிப்பது போன்ற உணர்ச்சியின் உச்சம் யாவும் பழகியவனை விட்டுப் போகா.

'ஐயோ, என்னைக் கொல்லாதீர்கள்' என்று கடுந்துன்பத்தில் கத்துவதில்லையா? சினம் – சீற்றம் – கடுங்கோபம் – வெகுளுதல் எல்லாம் அவ்வாறான கொல்வது போன்ற சித்திரவதை செய்யும் கடுந்துன்பங்களைக் கொண்டு வந்து சேர்க்கும் என விழிப்புணர்த்துகிறார் நம் மறை முதல்வர்.

இதில் தன்னைத் தான் காத்தல்' பற்றிய தொடரே இங்கு நினைவு கூர்தற்குரியது. 'காக்க' என்றால், காப்பதற்கான செயல்களையும் பழக்கத்தையும் மேற்கொள்க என்பது பொருள்.

**தன்னைத்தான் கொண்டொழுகுதல்**

ஒருமை மகளிரேபோலப் பெருமையும்
தன்னைத்தான் கொண்டொழுகின் உண்டு

திருவள்ளுவர் காலத்தில் 'பரத்தைமை' ஒரு பிரிவாக – தனியாக – குலமாகப் பிரிவுபட்டுக் கிடந்தது. இன்று கலப்புற்றுக் கிடப்பதால் அதுவே இலைமறை காயாகிப் போனது.

பழைய நிலையில் ஒருமை மகளிர், வரைவில் மகளிர் என இரண்டாகப் பிரிக்கவேண்டியதாயிற்று. 'ஒருமை மகளிர்' என்பது இயல்பான அடைமொழி. உறுதியுள்ள கவர்வுபடாத ஊசலாடாத – நிறையுள்ள மனம்; மகளிர்க்குரிய இயல்பான மனம். 'சிறைகாக்கும் காப்பு எவன் செய்யும்

மகளிர் நிறைகாக்கும் காப்பே தலை' (57) என்பதென்ன? மகளிர் தம்மைத்தாமே காத்துக் கொண்டு ஒழுகுதலே தலையாய பெருமை என்பதாம்.

மனிதர்களும் பிறர் அதட்டினால் அடங்கி ஒழுகுகிறார்கள். தாமே தம்மை அடக்கி ஆள்வதில்லை.

'தன்னைத்தான் கொண்டொழுகுக' என்ற தொடர் அழகான, எழுதிவைக்கத் தக்க குறிக்கோள் வாசகம்.

ஒரு தெருவில் யாரும் இல்லை; சில தங்க நகைகள், நம் கண்ணிற்பட்டன. யாரும் அறியா நிலையிலும் அதை எடுத்து உரியவரைத் தேடிக் கொடுத்தோமென்றால், அதுதான் தன்னைத்தான் கொண்டொழுகுதல். வேறு ஒருவர் பார்த்து விட்டால் நாணயமாக நடந்து கொண்டால் அது சட்டத்திற்குப் பயந்து ஒழுகுதல்; இவை எதுவுமில்லையெனினும், தானாக அறவழி உணர்ந்து, தன்னைத்தான் கட்டுப்படுத்தி நடப்பது 'தன்னைத்தான் கொண்டொழுகுதல்' ஆகும்.

ஓர் இளம் பெண் வழி தெரியாமல் மழையில் நனைந்து, வழியிடையே நின்றாள். மழை பொழியும் மங்கிய மாலைப்பொழுது. காரை ஓட்டிக்கொண்டு அவ்வழியாக வந்த இளைஞன் தனித்து நிற்கும் அப்பெண்ணைக் கண்டான். அந்த நேரம், அங்கு அவளுக்கு யாராலும் ஆபத்து நேரலாம். அச்சூழலில், அவளைத் தன் காரில் ஏற்றிச் சென்று அவள் வீட்டில் பக்குவமாக இறக்கிவிட்டுத் தனக்காகக் காத்திருக்கும் மனைவியை நோக்கிச் சென்றான். இங்கு யாருடைய கட்டுப்பாடுமின்றி, அவன் தானாகவே தற்கட்டுப்பாட்டுடன் நடந்து கொண்ட இதுதான், தன்னைத்தான் கொண்டொழுகும் தற்கட்டுப்பாடு ஆகும். இவ்வாறு நடந்து கொள்வதே பெருமை என்பது வள்ளுவம்.

ஒருமை மகளிரும் மனம் திறம்புவதில்லை. ஒருமை மாந்தரும் தம்மைத்தாம் காத்துக் கொண்டு கட்டுப்படுத்திக் கொண்டு - அடக்கிக் கொண்டு வாழ்வதால் மனம் திறம்புவதே இல்லை.

பிறிதொரு வகையாக எண்ணினால் நாம் பிறருக்காக – அரசுக்காக – சட்டத்திற்காக – அவமானத்திற்காக அஞ்சி நடக்கிறோம். இங்ஙனம் பிறர்க்கு அடங்குவதை விட, நமக்கு நாமே அடங்கி நடப்பதன்றோ பெருமை? நமக்கு நாமே எசமானர்கள் ஆவது – நம்மை நாமே ஆள்வது எப்போது? மிக நுட்பமாகச் சிந்தித்தால் தன்னைத்தான் கொண்டு ஒழுகுதல் என்பது – தனக்குத்தானே தலைவனென – வழிகாட்டி என ஆள்வோன் எனக்கொண்டு நடத்தல் ஆகும். பிறரைத் தலைவனென – வழிகாட்டி என – ஆள்வோன் என ஏற்று அடங்கி நடப்பது பெருமையன்று; நமக்கு நாமே எசமானர்களாவதன்றோ பெருமை என்பதுதான் வள்ளுவம்.

**தற்செய்தல் - தன்னை வளர்த்துக் கொள்ளுதல்**

'தற்செய்து' என்ற வள்ளுவக் கலைச் சொல் தொடர் ஒன்று காணப்படுகிறது. 'தன்னைச் செய்தல்' என்றால், தன்னை எவ்வாறு செய்ய முடியும்? தன்னை ஒரு சூழலை எதிர் கொள்ள ஆயத்தப்படுத்திக் கொள்ளுதலே தற்செய்தலாகும். பகையோ, போட்டியோ பெருகிவிட்டால், நாம் அப்பகையைவிட மேலாக நம்மை உயர்த்திக் கொண்டுவிட வேண்டும். அப்போது பகைமையின் செருக்கு – ஆணவம் தானாக அடிபட்டுப் போகும்.

**வகையறிந்து தற்செய்து தற்காப்ப மாயும்**
**பகைவர்கண் பட்ட செருக்கு**

'தற்செய்து தற்காத்தல்' என்பது என்ன? பகையை வென்று, நம்மைக் காத்துக் கொள்ள இரண்டு வழிகள் உள்ளன.

ஒன்று : அப்பகையுடன் போட்டியிட்டு, போரிட்டு நாளும் எதிர்த்து நின்று, வெற்றி பெறுதல்.

இரண்டு : அப்பகையைவிட நம் தகுதியைப் பெருக்கிக் கொண்டு, பொறுமையாயிருந்து, நம்மை நாமே காத்துக் கொள்ளுதல்.

தன்னம்பிக்கையுடையவன் பெரிதும் இரண்டாவது நெறியையே, பின்பற்றுவான். தன்னை மிகவும் வளர்த்து, தன் தகுதியைப் பெருக்கி மேன்மேல் உயர்வான். இதைக்காணக்காண, அப்பொறாமைக்காரப் பகைவன் தன் செருக்கு சுக்கு நூறாகி உடைந்து, தன்னுள் அழுதரற்றித் தோல்வியுறுவான். இவ்வெற்றியே தன்னம்பிக்கை தரும் பெரு வெற்றியாகும்.

'வகையறிந்து தற்செய்து, தற்காப்ப' என்ற தொடரை ஆழச் சிந்திக்க வேண்டும். பகைவனை வெல்லுமாறு – அதற்கு ஏற்றவாறு திட்டமிட்டுத் தன்னை வளர்த்துக் கொண்டால்தான், அவனது செருக்க அழியும். எனவே நேரே பகைத்து நின்று சண்டை இடுவதைவிட இது மிகுந்த முயற்சிக்கும் உழைப்புக்கும் உரியதென்பதும், அவ்வெற்றியைவிட இது இருமடங்கு வெற்றி என்பதும் புலனாகின்றன.

**தன் முயற்சி தரும் தனி இன்பம்**

ஒருவர் கொண்டு வந்து உதவிய பணம் மகிழ்ச்சிதரும். ஒருவர் துணையால் நாம் பெற்ற இலாபமும் இன்பந்தரும். வரதட்சணை மூலம் மனைவி கொண்டு வரும் சொத்தும் சுகமும் நகைநட்டும் மகிழ்ச்சிதரக்கூடும் சிலருக்கு. ஆயினும் யாரொருவர் உதவியும் துணையும் இல்லாமலே, நாமே முயன்று நம் உழைப்பால் நமக்குக் கிடைக்கும் ஊதியம், முன்னையவற்றைவிட அதிக இன்பம் தருமென்பது உறுதி.

இருபத்து மூன்று வயது வரை பெற்றோர் உதவியுடன் கற்று உயர்ந்த ஓர் இளைஞன், தன் படிப்பிற்கேற்ற வேலை கிடைத்து, முதல் மாதச் சம்பளம் பெறும் போது, அது தன் பணம் என உணரும் போது பெறும் இன்பம் தன்னிகரற்றதாகும்.

காதல் இருவர் கருத்தொருமித்துப் பெறும் இன்பத்தை விளக்க ஓர் உவமை சொன்னார் தெய்வப்புலவர். உவமை என்பது உயர்ந்ததன் மேற்று என்பர். உயர்ந்ததையே உவமை கூறுவர். அது என்ன தெரியுமா?

**தம் இல் இருந்து**
**தமது பாத்து**
**உண்டற்றால்**
**அம்மா அரிவை முயக்கு (1107)**

'தான் கட்டிய தன் சொந்த வீட்டில் இருந்து, தானே தேடிய பொருளைத் தன் சுற்றமும் நட்பும் சூழப் பகுத்துண்டால் பெறும் இன்பம் எத்தகையதோ, அத்தகையதே யான் என் காதலியைத் தழுவிக் கொள்ளும் இன்பம், என்று தலைவன் கூறுகின்றான். இதன் சிறப்பு அவனவன், அனுபவிக்கும் போதுதான் முழுதும் விளங்கும்; பிறர் சொல்லி விளங்காது!

தெண்ணீர் அடுபுற்கை யாயினும் தாள்தந்தது
உண்ணலின் ஊங்கினியது இல்

தன் முயற்சியால் பெற்றது, தெளிந்த நீரில் சமைக்கப்பட்ட புல்லரிசிச் சோறேயாயினும் (கஞ்சித் தண்ணீரேயாயினும்) அதை உண்பதின்மிக்க இன்பம் வேறொன்றும் இல்லை. பிறரால் தரப்படும் அறுசுவை உணவை விடத் தன் முயற்சியால் கிடைத்த இச்சோறு மிகுந்த இன்பம் பயக்கும் என்பது கருத்து.

இவ்வாறு மனிதனின் மானவுணர்வைத் தூண்டி, தன் முயற்சியின் பெருமையை மனத்தில் பதியவைக்கின்றார் நம் தமிழ் மறைத்தலைவர்.

## உழைப்புக்கேற்ற ஊதியம் உண்டு

ஊழ் - விதி தன் பக்கம் இல்லையா? கவலைப்பட வேண்டாம். தெய்வம் வந்து உதவவில்லையா? அதற்காக இருந்து அழ வேண்டாம். எத்தனை தடைகள் வந்தாலும் தன்னம்பிக்கையை - தன் முயற்சியைக் கைவிடாதே! முயற்சி - இடைவிடா முயற்சி என்பதும் உனது செயலேயாகும். செய்யும் வினைதான், பயனைத் தரும் போது விதி எனப்படுகிறது. முயற்சியால், நீ உன் உடம்பை வருத்தி உழைத்தால், அந்த உழைப்புக்குப் பொருந்திய கூலியையாவது தெய்வம் - ஊழ் தந்தே தீரவேண்டும். தெய்வ

அருளால் கிடைக்கும் கூடுதல் ஊதியம் வாய்க்காவிட்டாலும், உழைப்புக்குத் தகுந்த ஊதியம் உண்டு என்பதும் தெய்வம் விதித்த விதியேயாகும். தான் வகுத்த விதியைத் தெய்வமும் மறுத்தல் இயலாது.

**தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்**
**மெய்வருத்தக் கூலி தரும்**

சட்டப்படியான - தெய்வத்துடனான, ஓர் உரிமை முழக்கம் இக்குறளில் கேட்கின்றது. மெய் வருந்த உழைத்த உழைப்புக்குப் பயன் - உழைப்பு எவ்வளவு அவ்வளவுக்குரிய பயன் மறுக்கப்பட இயலாது. செய்த வினையின் பயனை - நல்லனவாயினும் தீயனவாயினும் - ஒருவன் அடைந்தே தீருவான் என்ற விதியைத் தெய்வமும் மீறலாகாது தானே?

**வெற்றி வீடு தேடி வரும்**

நம் மனம்தான் நம் வாழ்வை உருவாக்கும் தொழிற்சாலை. தோல்வியடைந்துவிட்டோம், திறமையற்று இருக்கிறோம் என்றெல்லாம் சோர்வடையத் தேவை இல்லை. மனிதப் படைப்பு சமன்பாட்டுச் சீர்நிலையுடையது. இழப்புக்கு ஏற்ற ஈடு இறைவனால் தரப்பட்டுள்ளது. கண் தெரியாதவனுக்கு, ஏனைய நான்கு புலன்களிலும் கண்ணுக்குரிய திறனையும் சேர்த்து, கூடுதல் வலிமையுடையன வாய்ப் படைக்கப்பட்டு ஒரு சமன்பாட்டை இறைவன் உண்டாக்கிவிடுகிறான். நாய்க்குத் தரப்பட்டுள்ள மோப்பவுணர்வும், பருந்துக்குத் தரப்பட்டுள்ள பார்வையுணர்வும் நம்மைவிட மிகக் கூடுதலானவை. நாம்தான் பெரியவன் எனத் தம்பட்டம் அடித்துக் கொள்ள முடியவில்லை.

ஒரு குறிப்பிட்ட அகவை வரை மந்தமாயிருந்தவன், திடீரென்று பிறரினும் மேம்படுகின்றான். ஒரு துறையில் பூச்சியமாயிருந்தவன் பிறிதொரு துறையில் ஈடும் எடுப்புமின்றி விளங்குகிறான். படிப்பில் மிகச் சுமாராக இருந்த ஒருவன், வணிகத்தில் பெரும் கோடீசுவரனாகிறான். அவனோடு படித்த போது, முதல் வகுப்பில் முதல் மாணவனாய் அனைத்து ஆண்டுகளிலும் தவறாது தேறி வந்தவன், இப்போது முன்சொன்ன

முதலாளியின் கடையில் மிகத் திறமை வாய்ந்த மேலாளராகப் பணி செய்கின்றான்.

எனக்குக் கணக்கு வரவில்லையே, படிப்பு வரவில்லையே என்று யாரும் கவலைப்படவேண்டியதில்லை. அந்தத் திறனையும் சேர்த்து வேறு ஏதோ ஒரு துறையில் இறைவன் உங்களுக்கு கூடுதல் திறமையைப் படைத்துள்ளார் என்பதே அதற்குப் பொருள். அதைத்தான் நீங்கள் கண்டுபிடிக்க வேண்டும். வகையும் வழியும் அறியாது சோர்ந்து படுத்திருப்பதால் பயனில்லை. நீங்கள் ஏதோ ஒன்றற்காகப் படைக்கப்பட்டுள்ளீர்கள். அதைத்தான் சிலர் சீக்கிரம் கண்டு கொள்கிறார்கள். சிலர் காலங்கடந்து கண்டு கொள்கிறார்கள். சிலர் அதைக் கண்டு கொள்ள முயலாமலே சோம்பிக் கிடக்கிறார்கள்.

மனத்தால், எதையும் செய்து முடிக்க முடியும் எனத் தீர்க்கமாக எண்ணுவதையே ஊக்கம் என்றனர். திரும்பத் திரும்ப எதுவும் முடியுமென எண்ணுவதே ஊக்கம் ஆகும். ஊக்கம் உடைமை உடைமை என்பது வள்ளுவம். ஊக்கமுடைமையே நமது பெருஞ்செல்வம் – அது இருந்தால் ஏனைய செல்வமெல்லாம் தானே வரும்.

**ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா**
**ஊக்கம் உடையா னுழை.**

அசைவிலா ஊக்கம் எது? தடைகள் வரினும் தளராது. இடையீடு நேரினும் இடையறவுபடாது, கடைசி வரை உந்துதலாய் நிற்பதே அசைவிலா ஊக்கம். நமது ஊக்கமெல்லாம் சிற்சில சிறிய தடைகளைக் கண்டே அசைந்துவிடும். உறுதியான ஊக்கம் என்பது, கற்பாறை போல ஆயிரம் அலைமோதினும் அசையாது நிற்பது. அது மட்டுமா?

திரும்பத் திரும்ப எண்ணுவதால் மனவலிமையை வளர்த்துக் கொள்வது.

தடைகளைக் கடக்கும் வழிவகைகளைத் தேடியவண்ணம் இருப்பது.

நினைத்ததை அடைய நம்மை இடைவிடாமல் தகுதிப் படுத்திய வண்ணம் இருப்பது.

குறித்ததை அடைய முயன்றபடி உழைத்தபடி பாடுபட்டபடி இருப்பது.

**முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை**
**இன்மை புகுத்தி விடும்** (616)

**எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்**
**திண்ணிய ராகப் பெறின்** (666)

தொடர்புடைய இக்குறள்களையும் எண்ணிப் பாருங்கள்!

இத்தகையவரிடம் ஆக்கம், அவர் முகவரியைக் கேட்டு, வழிவினவிக் கொண்டு, தேடிச் செல்லும். செல்வம், பட்டம், பதவி எல்லாம் அடங்க ஆக்கம் என்றார்.

இங்கு கூறப்பட்ட குறள்கள் எல்லாம் மந்திரச் சொற்களாய் நின்று நம் வாழ்க்கை முன்னேற்றத்திற்கு உதவுபவை. இவற்றை நாம் திரும்பத் திரும்பச் சொல்லி, உச்சரித்து, ஒலித்து மனத்திற்கு உரமேற்றிக் கொள்ள வேண்டும்.

**ஊழுடன் போராட்டம்**

ஊழ்வினையுடன் நம் முயற்சிக்கு என்றும் ஒரு போராட்டமுண்டு. நாம் முன் செய்த வினையின் பயனே ஊழ் எனப்படுகிறது. ஆனால் இப்போது நாம் செய்யும் வினை புதிய நம் ஊழை உருவாக்குகிறது. அவ்வாறெனில் இப்போராட்டம் நம் பழைய ஊழுக்கும் புதியதாய்ப் படைக்கப்படும் ஊழுக்கும் இடையே நிகழ்வதென்றுதான் கொள்ள வேண்டும். இப்போரில் முன்னைய ஊழ் தலை எடுக்கும் என்பது, அதன் வலிமை பற்றியேயாம். புதிய முயற்சி அதைவிட வலிமையுடையதானால், முன்னைய ஊழ் தாழும் – தோற்றோடும்!

**ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்**
**தாழாது உஞற்று பவர்**

தாழாது உஞற்றுதல் – அந்த ஊழுக்குத் தான் தாழாது, தனக்கு அந்த ஊழ் தாழும்படியாக அவ்வளவு கடும் முயற்சி செய்தல். அப்போது ஊழ் தோற்றோடும்.

ஊழை அழிப்பதென்பது இல்லை. அது ஒரு தொடர்கதை. அதைப் புறமுதுகு காட்டவைப்பதே முயற்சியின் வெற்றியாகும். சிலர் கிணற்றுக் கயிற்றையும்,வாளியையும் இதற்கு உவமை சொல்வார்கள். வாளி மேலே வரவரக் கயிறு கீழே போகும். கயிறு மேலே வரவர வாளி கீழே செல்லும். ஊழின் கதையும் இதுதான். முயற்சி மேலோங்கினால் ஊழ் கீழே போகும் – புறமுதுகுகாட்டி ஓடும்.

## தெய்வமும் முன்வந்து உதவும்

நாம் தொடங்கும் செயல்களுக்குத் தெய்வம் உதவும் என்ற நம்பிக்கையே வெற்றி தரும்.

நல்ல நாள் பார்த்துத் தொடங்குவது, வழிபாட்டுடன் தொடங்குவது, ஒவ்வொருநாளும் வெற்றிதரும் – இலாபம் கிடைக்கும் தொழில் சிறக்கும் என எண்ணி எண்ணிக் காலை மாலை வழிபடுவன எல்லாம் நம் மனவலிமையைப் பெருக்கும் சாதனங்களே. நம் தாழ்வுமனம், தயக்கமனம், அச்சமனம் போலும் மன உணர்வு நிலைகளை இவை மாற்றும்.

ஆனால் வழிபாட்டோடு நின்றால் போதுமா? போதாது! மேற்கொண்டு வெற்றி பெறுதற்கான முயற்சிகளையும், உழைப்பையும் இடையீடின்றிச் செயற்படுத்த வேண்டும். மனவலிமை என்பது பாட்டரிக்கு வலுவை மின்னாற்றலைச் சேகரிப்பது. அதை வைத்துக் கொண்டு வண்டியை ஓட்ட வேண்டியது, எந்திரத்தை இயக்க வேண்டியது நம் முயற்சி – தன் முயற்சி. சிலர் வழிபாடே, நல்லன எல்லாம் தரும் என நம்பி, ஓய்ந்து இருந்து விட்டுப் பிறகு தெய்வத்தைப் பழிக்கின்றனர். பாட்டரி, சார்ஜ் (மின்னாற்றல்) பெறாத வழியும் வண்டி ஓடாது; மின்னாற்றல் பெற்றதே வண்டி ஓடியதாக ஆகவும் ஆகாது. மின்னாற்றல் பெற்றதும் இயக்கும் செயலாகிய நம் முயற்சியும் முழுமையாக வேண்டும்.

**தெய்வம் காட்டும், ஊட்டுமா?**

தெய்வம் நாம் தேடிப்போனால்தான் உதவுமென்பதில்லை. நாம் நம்மைத் தகுதிப்படுத்திக் கொண்டே இருந்தால் தெய்வம் நாம் இருக்கும் இடம தேடி உருக்கமுடன் வந்து உதவும்!

**குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்**
**மடிதற்றுத் தான்முந் துறும்.**

குடி என்பது குடும்பப் பரம்பரை – தொடர்ச்சி. நம் செயற்பாடுகளால் நம் குடி சிறப்படைகிறது – புகழ் பெறுகிறது – செல்வம் அடைகிறது. அல்லது நம் மாறான செயல்களால் நம் குடிப்புகழ் பாழ்படுகிறது. குடிசெய்தல் என்றால் என்ன? ஒன்றே முக்காலடியில், சுருங்கச் சொல்லவேண்டுமென்பதால், இத்தகைய பொருள் பொதி தொடர்கள் வள்ளுவப் பெருமானால் ஆளப்படுகின்றன. குடியை மேன்மையும் பெருமையும் சீரும் செல்வமும் உடையதாகச் செய்வேன் எனச் சூளுரைத்துப் பாடுபடுவதையே குடி செய்வல் என்னும் தொடர் குறிக்கிறது.

இங்ஙனம் தன்வேலையுண்டு, தானுண்டு என வேலை பார்த்துக் கொண்டிருப்பவனிடம் தெய்வம் முன்னே நந்து உடையை இறுகக் கட்டிக் கொண்டு, என்ன வேலை செய்ய என்று கேட்குமாம். அத்துணை அளவு தெய்வமும் முன் வந்து உதவுமென்பதே குறிப்பு. கண்ணன் என் சேவகன் என்று பாரதியார் பாடவில்லையா?

உலகில் உயிர்கள் அறிவுடனும் திறனுடனும் தான் படைக்கப்படுகின்றன. கல்வி என்பதன் பகுதி கல் – கல்லுதல் – அதாவது தோண்டுதல். கல்வி மூலம் நம் உள்ளிருக்கும் அறிவுதான் தோண்டி வெளிப்படுத்தப்படுகிறது. அறிவு என்பது வெளியிலிருந்து பெறப்படும் பொருளன்று; உள்ளிருக்கும் ஒன்றை மலரச் செய்வதாகும் என்ற கல்வி உளவியல் கருத்தையே திருவள்ளுவரும் அன்றே கூறியுள்ளார். கற்றனைத்தூறும் அறிவு என்பதை நோக்குக. உள்ளிருக்கும் ஊற்றுக்கண் கல்வியால் திறக்கப்பட்டு, அறிவு ஊறிப் பெருகும் என்பது கருத்து. அதுபோல்

பல்வேறு திறமைகளுடன் உயிர் பிறப்பிக்கப்பட்டுள்ளது. அவை வெளித் தெரியாது உள்ளடங்கிக் கிடக்கின்றன. அவ்உயிர்ப் பண்புகள் ஒருவனது இடையறா முயற்சியால் – தவ முயற்சியால் வெளிப்படுத்தப்பட்டு, அவனுக்கு உரியவையாய் விளங்கித் தோன்றுகின்றன. ஒருவன் இசைத் திறனுடன் படைக்கப்பட்டுள்ளான். இடையறா முயற்சியால் அவனது அவ்உயிர் பண்பு விளங்கித் தோன்ற, அவன் மிகப் பெரிய இசைமேதை ஆகின்றான். அதனால் உலகம் அவனைப் பாராட்டுகிறது. இங்ஙனம் ஒவ்வொர் உயிரும் ஒவ்வொரு தனித்திறனுடன் படைக்கப்பட்டுள்ளது. அப்பண்பு விளங்கித் தோன்றுவதற்குத் தன்னம்பிக்கை வேண்டும்; தன் முயற்சி வேண்டும்.

**வாழ்க்கை வெற்றிக்கு வள்ளுவத்தைப் பயன்படுத்துவோம் !**

யாதும் ஊரே என்று தொடங்கும் கணியன் பூங்குன்றனின் புறநானூற்றுப் பாடல் உலகப்புகழ் பெற்றது. ஆனால் அப்பாடலின் இரண்டாவது அடியைக் கூட யாரும் சிந்திப்பதில்லை.

யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா
நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன...

உலகச் சிந்தனைகளின் மிகவுயர்ந்த சிந்தனைகளைச் சங்கப் பாடல்களில் காணலாம். இப்பாடலின் ஒவ்வோரடியும் ஒன்றினொன்று மேற்பட்ட சிறப்புடையது.

மற்றவர்கள் நமக்குத் தீங்கு செய்ததாகவோ, அல்லது நன்மை செய்ததாகவோ தோன்றுவன புறத்தோற்றமே. யார் முயன்றாலும் நாம் அசையாதிருந்தால், நமக்குத் தீங்கு செய்ய இயலாது! அவ்வாறே, பிறர் பலர் முயன்றும் நம்மைத் தூக்கி மேலே நிறுத்தி விட இயலாது. நாமாக நம்மை உயர்த்திக் கொண்டாலன்றிப் பிறர் சார்பால் உயர்ந்தோம் என்பன எல்லாம் முழு உண்மையல்ல. நாம் தகுதியாக இல்லாவிட்டால், பிறர் தூக்கி வைத்தாலும் பொத்தென்று விழுந்து விடுவோம்.

இதற்காகப் பிறர் உதவி, துணை, பற்றுக்கோடு தேவையில்லை என்பதன்று. அவை புறக்காரணங்களே. நாமே நம்மை முன்னேற்ற, உயர்த்த, சிறப்புடைய ஆயத்தமாக்கிக் கொள்ளாவிட்டால், புறக்காரணங்கள் எல்லாம் வீணாகிவிடும். முதற்காரணம் நாமே. இதனையே அழகாக ஓரடியில், தீதும் நன்றும் பிறர்தர வாரா என்றார் பூங்குன்றனார். வருந்துதலும் அது தணிந்து மகிழ்தலும் – துன்பமும் இன்பமும் கூட நாமே நமக்கு விளைவித்துக் கொள்வனவே! எனவே மற்றவர்களைக் குறைசொல்லிக் கொண்டிருக்க வேண்டாம். நீயே உன்னை உயர்த்திக் கொள்ள, உனக்கு நன்மை செய்து கொள்ள, மகிழ்ச்சி கொள்ள விழைந்தாலல்லாமல் பிறவெல்லாம் பயனற்று ஒழியும் என்று பசுமரத்து ஆணிபோல் இவ்அடி நம் மனத்தில் பதிவிக்கின்றது.

நாலடியாரில் இதன் திரண்ட கருத்து ஒரு பாடலாக உருப்பெற்றுள்ளது.

நன்னிலைக் கண் தன்னை நிறுப்பானும் தன்னை
நிலைகலக்கிக் கீழிடுவானும் – நிலையினும்
மேன்மேல் உயர்த்து நிறுப்பானும் தன்னைத்
தலையாகச் செய்வானும் தான் (248)

மேனிலைக்குத் தன்னை உயர்த்துவதும் கீழ் நிலைக்குத் தன்னைத் தள்ளுவதும் தன் செயல்களால் ஆவனவேயன்றிப் பிறரால் நிகழ்வன அல்ல என்பது தன்னம்பிக்கை வாசகம்.

தன்னைத் தலைமைப் பண்புடையவனாக ஆக்கிப் பலருக்கும் தலைமை தாங்கும் நிலையையும் ஒருவன் தன் திறமையிலேயே பெற வேண்டும், இங்ஙனம் உலகொடு பொருந்தி வாழும் தன் முயற்சி வாழ்வைச் சுட்டும், இடமனைத்திலும் தான் என்ற சொல்லையே ஆளுதல் கருதத்தக்கது.

நான் என்பதில் முனைப்புத் தட்டுப்படுத்தலால் அதை மிகுதியும் பயன்படுத்திலர்.

**சான்றோர் கருத்து**

நீ வெற்றி பெறப் போவதாகவே அடிக்கடி நினை! தோல்வியுறப் போவதாக ஒரு போதும் எண்ணாதே! எவ்வளவு மோசமாகத் தோல்வி வரப்போவது போல் தோன்றினாலும் – தடைகளே எதிர்ப்பட்டாலும் இன்றும் இனியும் எவ்விதத்தும் வெற்றியே வாய்க்குமென நம்புக! இடையே தோன்றுவன யாவும் முடிவல்ல – இறுதி வெற்றி நமதே எனக் கடைசி வரை நினைக!

உன் திறமைகள் பற்றி ஒரு குறையாக எப்போதேனும் தோன்றினால் உடனே அவ் எண்ணத்தை அறவே அகற்றிவிடுக!

உன் தடைகளை நீயே பெரிதாக்கிவிடாதே. அவை சிறியவை – கடக்க எளிதானவை என்ற உண்மையை மட்டுமே நினை.

கடவுளே நம் பக்கம் இருக்கும் போது யார் நம்மை என்ன செய்ய முடியும்? என்பதைப் பத்து முறை திரும்பத் திரும்ப எண்ணி, மனத்திற்குள் பலமுறை ஓதி ஓதி மனஉரம் பெறுக.

உன் திறமைகளை நன்கு உணர்க! அவற்றை வளர்க்க முயல்க! உன் சுயமரியாதை, மான உணர்வை வளர்த்துக் கடவுள் தந்த திறமையுண்டு என நம்பிக் காரியத்தில் இறங்குக!

கடவுள் அருள் உன் மீது பொழிவதாக எண்ணுக! கடவுள் உன்பக்கமிருப்பதாக நம்பிக்கை கொள்க! கடவுள் அருள் என்ற பேராற்றல் உனக்குத் தரப்பட்டிருப்பதை நன்கு நினைவு கூர்க!

பத்திமைப்பாடல்களும் திரும்பத்திரும்பப் படிக்கத் தன்னம்பிக்கை தருவனவே.

இவ்வாறான உடன்பாட்டுச் சிந்தனைகளால் ஒருவன் வெற்றி வழி நோக்கி செல்வது உறுதி. இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே தோன்றிய ஒரு தன் முன்னேற்ற ஆசான் ஆக, வள்ளுவர் விளங்குகின்றார்.

எவ்வளவு முயன்றும் தொடர்ந்து தோல்விகளையே சந்திக்க நேர்கிறது. எதைத் தொடங்கினாலும், முதலில் தடைதான் முன்வந்து நிற்கிறது. தடையோட்டம் போலத் தடையும் துன்பமும் சங்கடமும் தொடர்ந்து வரும் போது, இறையருட் பாடல்கள் மன ஆறுதல் தரும். இறைமைச் சிந்தனை மனக் கவலையைப் போக்கும்.

தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க்கு அல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது

நக்கீரர் தாமுரைத்த நல்முருகாற்றுப் படையைத்
தற்கோல நாள்தோறும் சாற்றினால் – முற்கோல
மாமுருகன் வந்து மனக்கவலை தீர்த்தருளித்
தானினைத்த எல்லாம் தரும்.

என்பன போன்ற பாடல்களை அடிக்கடி நினைத்துப் பார்க்க வேண்டும்; முயன்றும், உழைத்தும் பயன்காணா நேரங்களில் இடையறாது பாடுபட்டும் போதிய ஊதியம் காணாது இழப்பு ஏற்பட்ட சமயங்களில் கீழ்க்கண்ட குறள்களைத் திரும்பத் திரும்ப ஓதுதல் வேண்டும்; எண்ணிப் பார்க்க வேண்டும்.

**தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்**
**மெய்வருத்தக் கூலி தரும்.**

**குடி செய்வல என்னும் ஒருவற்குத் தெய்வம்**
**மடி தற்றுத் தான்முந்துறும்**

இக்கட்டான காலகட்டத்தில், காலை மாலை விளக்கேற்றி வழிபாடாற்றி, இக்குறள்களைத் திரும்பத் திரும்பச் சொல்லிப் பார்த்தும், எழுதிப் பார்த்தும் மனச் சோர்வை அகற்றிவிட்டு, வேலையில் ஈடுபடுக! வாழ்க்கையில் வெற்றி பெறும் வழிகள் இவை.

## 4. துன்பத்தைத் துன்புறுத்துதல்

### துன்பத்தை வெல்லும் குறள்கள்

துன்பம் இருவகைப்படும். எதிர்பாராது நேரும் துன்பங்கள் ஒரு வகை; நம் முயற்சியால் நாமே இழுத்துப் போட்டுக் கொள்ளும் துன்பங்கள் பிறிதொருவகை. இரண்டையுமே நாம் தாண்டி மேற்செல்லுதல் வேண்டும்; வென்றாக வேண்டும். அதற்குத் திருவள்ளுவர் மூன்று வரைவிதி வாய்பாடு கூறுகிறார். இன்பம் விழையாது வினை (செயல்) விழைதல், துன்பத்தையும் இன்பமாகக் கோடல், துன்பத்தைத் துன்புறுத்துதல்- இவ்வரைவிதிகளை மேற்கொண்டு நடப்பவர்கள் வாழ்வில் வெற்றி பெறுவர்.

1. இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்
   துன்பம் துடைத்தூன்றும் தூண்.

2. இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான்
   துன்பம் உறுதல் இலன்

3. இன்பத்துள் இன்பம் விழையாதான் துன்பத்துள்
   துன்ப முறுதல் இலன்

4. வெள்ளத் தனைய இடும்பை அறிவுடையான்
   உள்ளத்தின் உள்ளக் கெடும்.

5. இன்னாமை இன்பம் எனக்கொளின் ஆகுந்தன்
   ஒன்னார் விழையும் சிறப்பு.

6. சிதைவிடத்து ஒல்கார் உரவோர், புதையம்பில்
பட்டுப்பா டூன்றும் களிறு.

7. இடும்பைக்கு இடும்பை படுப்பர் இடும்பைக்கு
இடும்பை படாஅ தவர்

8. மடுத்தவாய் எல்லாம் பகடன்னான் உற்ற
இடுக்கண் இடர்ப்பாடு உடைத்து.

9. அடுக்கி வரினும் அழிவிலான் உற்ற
இடுக்கண் இடுக்கட் படும்.

10. இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்தூர்வது அஃதொப்பது இல்

இக்குறள்களை மந்திரம் ஓதுவது போலப் பலகால் ஓதின் துன்பம் விலகும்; மனம் ஆறுதலடையும்; புதிய முயற்சியில் ஊக்கம் பிறக்கும்.

நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப

என்பது தொல்காப்பியம்

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும் என்பது வள்ளுவம்

திருவள்ளுவர் நிறைமொழி மாந்தரில் தலையாயவர். பயனும் ஆற்றலும் நிறைந்த அவர்தம் மொழிகளே மறைமொழிகள். அவற்றைத் திரும்பத் திரும்ப நம் வாயால் ஒலித்து, மனத்தால் நினைக்க நினைக்க நாம் அதன் வயமாவோம். குறள் மொழிகளை பயபக்தியோடு – பணிவன்போடு ஓதுங்கள்! உரை வழி பொருள் விளக்கம் கற்போம். கற்றதும் பொருளை விளங்கிக் கொண்டு மீண்டும் குறளை ஓதுவோம்! மீண்டும் மீண்டும் நாம் திருக்குறளையே ஓதி, அதனை நோக்கிச் செல்லச் செல்லத் திருவள்ளுவர் நமக்கு மிக அருகில் வந்து விடுவார்.

## துன்பத்தை வெல்லும் வழி

இன்பம் விழைதல், வினை (செயலை, முயற்சியை) விழைதல் என இரண்டு உள. சிலர் இன்பத்தையே விழைவர் - வினையை, செயலை, முயற்சியை, உழைப்பைப் புறக்கணிப்பர். அவர்கள் போலாது பக்குவப்பட்ட மனமுடைய வேறு சிலர் வினையை விரும்பித் தாம் செயற்படுவதிலேயே தோய்ந்து மூழ்கிக்கிடப்பர். இன்பம் பற்றிக் கவலைப்படார்.

### இன்பம் விழைதல், வினை விழைதல் - இரண்டு துருவங்கள்

**இன்பம் விழையான், வினைவிழைவான் தன்கேளிர்**
**துன்பம் துடைத்தூன்றும் தூண்** (ஆள்வினையுடைமை615)

இன்புறுதலை விரும்பாமல், வினை செய்தலையே (செயற் படுதலையே) விரும்புபவன், தன் சுற்றத்தார்க்கும் நண்பர்க்கும் அவரது துன்பத்தைப் போக்கிச் சுமையைத் தாங்குகின்ற தூண் போன்றவன் ஆவான்.

இன்பத்தில் ஆசைவைக்காது ஒரு காரியத்தில் ஈடுபடுபவன் அதனால் முயற்சித் துன்பம் வருவது இயல்பே என உணர்வான்.

**இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான்**
**துன்பம் உறுதல் இலன்**
(இடுக்கண் அழியாமை 628)

இன்பமுறுதலை விரும்பானாய், தன் காரியம் முடித்தலிலேயே ஆர்வமுடையவனாக இருப்பவன், அங்ஙனம் செயற்படுங்கால் துன்பங்கள் வருதல் இயல்பே என உணர்வான். அதனால் காரியம் முடித்தலில் கருத்துடைய அவன், இத்தடைகளைக் கண்டு துன்பமுறமாட்டான்.

இன்பத்திலும் துன்பத்திலும் தாமரை இலைத் தண்ணீர் போல ஒட்டியும் ஒட்டாதுமிருப்பவனே வெற்றி பெறுவான்.

**இன்பத்துள் இன்பம் விழையாதான் துன்பத்துள்**
**துன்ப முறுதல் இலன்** (இடுக்கண் அழியாமை 629)

இன்பத்துள்ளிருந்து அதை அனுபவியா நின்றே மனத்தால் அதை விரும்பாதான் (அதனோடு ஒட்டாதான்) தனக்கு வரும் துன்பத்துள்ளும் அதை அனுபவியாநின்றே மனத்தால் வருந்த மாட்டான்.

மனத்தின் நினைப்பு வெளிப்பாடே இன்ப துன்பம். அறிவுடை ஒருவன் நினைத்தால் துன்பம் அப்போதே போயொழியும்.

**வெள்ளத் தனைய இடும்பை அறிவுடையான்**
**உள்ளத்தின் உள்ளக் கெடும்.** (இடுக்கண் அழியாமை 622)

வெள்ளம் போல் பெருகிவரும் இடும்பைகளெல்லாம் அறிவுடை ஒருவன், அவற்றைக் கடத்தல் எளிதே என்று தன் உள்ளத்தால் உரத்தோடு நினைத்த அளவில் அவை கெடும்.

அஃதோர் இரசவாதம் – அறிவுடை ஒருவன் துன்பத்தை இன்பமென ஏற்க இயலும்.

**இன்னாமை இன்பம் எனக்கொளின் ஆகுந்தன்**
**ஒன்னார் விழையும் சிறப்பு** (இடுக்கண் அழியாமை 630)

ஒரு காரியமாற்றுங்கால் முயற்சியால் துன்பம் வரும். அதனைத் தன் காரியமுடித்தல் கருதி வருதலின், இன்பமே எனக் கொள்ளும் மனப்பக்குவம் ஒருவனுக்கு வாய்த்தால், காலப்போக்கில் அவன் பகைவரும் விரும்பும்படியான சிறப்பை அடைவான்.

ஊக்கமுடையவன் மனம் தோல்விகண்டாலும் சுருங்கவே சுருங்காது.

**சிதைவிடத்து ஒல்கார் உரவோர், புதையம்பில்**
**பட்டுப்பா டூன்றும் களிறு** (ஊக்கமுடைமை 597)

ஆற்றல்மிக்க ஆண் யானை, தன் முகத்தில் புதைந்த அம்பினால் துளைக்கப்பட்டும் தளராது நின்று தன் ஆற்றலை நிலை நிறுத்தும். அதுபோல் ஊக்கமுடையவர்கள் தம் முயற்சிகட்குச் சிதைவு வந்தவிடத்தும் அதற்காகத் தளராது தம் பெருமையை நிலைநிறுத்துவர்.

இன்பம் துன்பம் என்பன மனக் கற்பனைகளே. முயற்சிக்கு வரும் தடைகளை, துன்பங்களை எல்லாம், அவை முடிவில் பயன்தருபவை என்பது கருதி, இன்பமாகவே எண்ணும் மனப்பக்குவமேற்பட்டுவிட்டால் துன்பம் துன்பமாகத் தோற்றாது.

**துன்பத்தைத் துன்புறுத்துக**

**இடும்பைக்கு இடும்பை படுப்பர் இடும்பைக்கு**
**இடும்பை படாஅ தவர்** (இடுக்கண் அழியாமை 623)

துன்பத்தைக் கண்டு சிறிதும் துன்பமே படாது கடைசி வரை உறுதியோடிருப்பவர்கள், அத்துன்பத்திற்குத் துன்பத்தை உண்டாக்கு பவர்கள் ஆவர்.

சுமையைத் தாங்கி இழுக்கவல்ல காளை போன்றவனை அடைந்த துன்பம் துன்பப்படும்.

**மடுத்தவாய் எல்லாம் பகடன்னான் உற்ற**
**இடுக்கண் இடர்ப்பாடு உடைத்து**
(இடுக்கண் அழியாமை 624)

தடை ஏற்பட்ட இடத்திலெல்லாம், பாரவண்டியை கரடு முரடான பாதையில் இழுத்துச் செல்லும் எருது போன்றவனை அடைந்த துன்பம், அவனைத் துன்புறுத்த மாட்டாமையால் தான் துன்பப்படும்.

கடுந்துன்பங்களை எதிர்கொள்ள வரவேற்க நாம் தயாராகி விட்டால், அவை நம்மைக் கண்டு அஞ்சும்; பின்வாங்கும், ஓடும்.

துன்பம் எப்போதும் அடுக்கிவரும்; வந்தாலும் அதனால் சிறிதும் துன்பப்படாதவனை அடைந்தால் தான் துன்பப்படும்.

**அடுக்கி வரினும் அழிவிலான் உற்ற**
**இடுக்கண் இடுக்கட் படும்.**

(இடுக்கண் அழியாமை 625)

ஒன்றன்மேல் ஒன்றாய்த் துன்பங்கள் அடுக்கிவரினும் அது கண்டு நெஞ்சம் அழியாதான் அடைந்த துன்பம் தான் துன்பப்பட்டு அழிந்துபோகும்.

துன்பத்தைக் கண்டு சிரித்து எதிர்கொள்க! சிரித்து துணிச்சலுடன் எதிர்கொண்டால் அது அத்துன்பத்தை விரட்டியடிக்கும் பெருமிதத்தை உனக்குத்தரும்!

**இடுக்கண் வருங்கால் நகுக அதனை**
**அடுத்தூர்வது அஃதொப்பது இல்**

(இடுக்கண் அழியாமை 621)

கடுந்துன்பம் வருங்கால் மகிழ்வுடன் சிரித்து எதிற்கொள்க. சிரித்து அத்துன்பத்தைத் தோற்றோடச் செய்ய வல்லது, அம்மகிழ்ச்சி போன்றது பிறிதில்லை. (அடுத்து ஊர்வது – வென்று விரட்டுவது)

துன்பத்தை விரட்டியடிக்க வல்ல வரைவிதி வாய்பாடுகள் போலும் திருக்குறள்களை நன்கு விளங்கும்படி பலமுறை படித்திடுக!

இன்று உலகில் மானிட வெற்றி அல்லது தன்னம்பிக்கையும் தன்முன்னேற்றமும் பற்றி நூற்றுக்கணக்கான நூல்கள் தோன்றியுள்ளன. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இம்மானிட முன்னேற்றம் பற்றிய பார்வையில், முழுமை பெற எழுதப்பட்ட முதல் நூல் திருக்குளேயாகும்.

குறள் நூலை இப்பார்வையில் அணுகுவதே திருவள்ளுவர்க்கு உடன்பாடான நெறியாகும்.

## குறள்வழி வாழ்வு

**துன்பத்தை வெல்வோம்!**

உயிர்கள் அனைத்தும் இன்ப உணர்வுடையன. பட்டம், பதவி, புகழ், செல்வம், காதல், கல்வி என யாதாயினும் அவற்றின் வழி தனக்கு வரும் 'இன்ப உணர்வு' நோக்கியே மாந்தன் செயல்படுகின்றான். எறும்பு முதலான சிற்றுயிர்களுக்கும் தான் வாழ்வது, தப்பித்து ஓடி மறைந்து உயிர்பிழைப்பது பற்றிய உணர்வுகள் அனிச்சையாய் உடனுறைகின்றன. பிராய்டு, யூங்கு முதலான உலகப் பாலியல் உளவியலறிஞர்கட்கு இணையாகத் தொல்காப்பியர் ஓருண்மையைச் சொல்கிறார். அதுதான் மாந்தனுட்பட, எல்லா உயிர்கட்கும் 'தன்'னைப் பற்றி வரும் இன்பவுணர்வாகும். இத் தன்னுணர்வு ஒவ்வொருயிரிலும் உடனுறைகிறது.

எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது
தான் அமர்ந்து வருஉம் மேவற்றாகும்.

'தான்' - என நினைந்து விரும்பித் தன்னுட் பொருந்தி வரும் உணர்வே அவ்வவற்றின் 'இன்ப' உணர்வென்ற அவர் கருத்து மிக ஆழமான ஒன்றாகும். காதலுணர்வை மட்டுமன்றி கடமை உணர்வையும் குறிக்கும் குறள் இது.

துன்பம் என்பதென்ன? இன்பவுணர்வுக்கு மறுதலையானது. எல்லா நிலையிலும் இன்ப துன்பமென்பன மேவிவருவன. இன்பமென நினைப்பதே துன்பமாதலும் துன்பமென நினைப்பது இன்பமாதலுமுண்டு. ஒருவர் இன்பமென நினைப்பதை மற்றொருவர் துன்பம் என எண்ணுவதுண்டு, ஒரு போது துன்பமாகப்பட்டது, பிறிதொரு சமயம் இன்பமாகிப் போவதுண்டு. இவற்றிடை அதிக வேறுபாடில்லை என்பது போலவும், எளிதில் மாறக் கூடியன என்பது போலவும் சுட்டிச் சொல்வது போல,

இவை தலை எழுத்தை மாற்றினால் மாறிவிடும் சொற்களாய் இன்பம் துன்பம் எனத் தமிழில் ஆளப்படுதல் தமிழ்ச் சொற்களின் நுட்பத்தைக் காட்டுகிறது.

### இன்பந்தரும் துன்பங்கள்

ஒரு தாய் தன் குழந்தைகளை வளர்க்கப்படும் துன்பங்கள், அவள் ஆழ்மனத்தில் இன்பவூற்றாகவே உள்ளன: ஒருவன் படிப்பில் முன்னேறப்படும் துன்பங்கள் அவன் விரும்பி மேற்கொள்வன. ஒரு நண்பர் தம் தொழிலில் 'இலாபம்' என்ற உருசி கண்டுவிட்டால், இரவும் பகலும் கடையே கதியாய்ப்படும் துன்பங்கள் மிகக் கடுமையானவை. ஆனால் இவை எல்லாம் துன்பம் போல் தோற்றும் இன்பங்களே. இல்லையென்றால் இவை விரும்பி ஏற்கப்படா. தொல்காப்பியர் சொன்னது போல், இன்பம் என்பது தான் விரும்பிவருவது. அவ்வகையில் துன்பமாய்த் தோற்றுமிவைகளையும் இன்பந்தரும் ஒருவகை முயற்சித் துன்பங்கள் என்று கூறலாம்.

### இன்பம் போல் தோன்றும் துன்பங்கள்

அளவுகடந்து இனிப்பு உண்ணுதல், புகைபிடித்தல், போதை மருந்துக்கு அடிமையாதல் என இன்பம் போல் தோற்றும் துன்பங்கள் பலவுள. அவை உண்மையில் இன்பங்களல்ல. கடை கடனில் மூழ்கிவிட்டது, களவு போய்விட்டது, விபத்து நடந்து விட்டது என ஏற்படும் எதிர்பாராத விதிவழித் துன்பங்கள் மிகப்பலவாகும். இவற்றை நாம் கடந்தாக வேண்டும். இது போல் வரும் ஆயிரம் தடைகளைக் கடக்க வேண்டும். இங்கும் நாம் துன்பங்களை வெல்லவே முயல வேண்டும். அதற்கான மனப்பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

இன்ப துன்ப மென்பன ஒருவகையில் நம் மனநிலையிலேற்படும் உணர்வு மாற்றங்களே; கற்பனைகளே!

என் நண்பர் ஒருவர் மழை பெய்தால் 'ஐயோ மழை! நசுநசு என்றானது!' என்று வருந்திக் கொண்டே வருவார். வெயில் அடித்தாலும், 'ஐயோ ஒரே வெயில்! என்ன செய்வது?' என்று பொருமிக் கொண்டே

வருவார். எப்பொழுது சந்தித்தாலும் தம் குடும்பம் பற்றி, தம்மைப் பற்றி, உலகைப் பற்றி நான்கு துன்பமாவது சொல்லி விளக்கிவிட்டுத்தான் போவார். சில ஆண்டுகள் பழகப்பழக, அவரைச் சேய்மையில் வரும் போது பார்த்ததுமே 'அதோ துன்பம் வருகிறது!' என என் மனம் சொல்லித்தப்பிக்க வழிதேடும்.

துன்பம் என்பது இவ்வாறு பல சமயம் ஒரு மன உணர்வு நிலை வெளிப்பாடுதான் அதைப் பழகிவிட்டால் போகாது. மேதை ஜி.டி.நாயுடு அவர்கள் ஒரு வேடிக்கை செய்து பார்த்ததாக ஒரு செய்தி படித்த நினைவுளது. சின்னஞ்சிறு குழந்தையைக் குண்டூசியால் தொடத்தொட அதைச் சிரிக்கவைத்து, அக்குண்டூசியால் குத்திக் குத்தியும் சிரிக்கும்படி பழக்கி, சிறிது அழுத்திக் குத்தும் போது அது அத்துன்பத்தைச் சிரித்தே வெளிப் படுத்துவதைப் பலரறியச் செய்து காட்டினார். அதாவது பழக்கத்தாலேற்படும் மன உணர்வுநிலைகள், வெளிப்பாடுகள் இவை எனலாம்.

ஆயினும் நாம் ஒரு பதவிக்கு முயன்றோம்; தக்கசமயத்தில் அஃது ஒருவரால் தடைசெய்யப்பட்டுவிட்டது. ஒரு கடையில் பங்கு சேர்ந்தோம். கூட்டாளி நன்றாக ஏமாற்றிவிட்டார். ஒரு தொழில் தொடங்கிப் பல இலட்சம் இழப்பேற்பட்டு விட்டது. நம்பிக்கையோடு உழைத்துப் படித்து முயன்று எழுதிய தேர்வு தோற்றுவிட்டது. இவை யாவும் மன உணர்வுநிலை மாற்றங்களே, கற்பனைகளே என்று கூறிவிட முடியுமா? இயலாது. இங்ஙனம் நிழலாயும் நிசமாயும் வரும் துன்பங்கள் பலவாகும்.

இத்துன்பங்களை வெல்வது எவ்வாறு? ஆயிரம் தடை வந்தாலும். அத்தனையையும் தாங்கி, 'இறுதி வெற்றி நமதே' என ஆக்கிக் கொள்வது எவ்வாறு?

துன்பத்தை வெல்லத் திருக்குறள் காட்டும் நெறிமுறைகள் யாவை?

திருவள்ளுவர் மூன்று 'வரைவிதி வாய்பாடுகள்' தந்து, துன்பத்தை வெல்ல வழி காட்டுகிறார். அவற்றுள் முதலாவது வாய்பாடு ஒருவித உலகியலும் உளவியலும் சார்ந்தது.

## இன்பம் விழைதலும் வினை விழைதலும்

உலகில் நாம் தெளிவாக இரு சாராரைக் காணலாம். சிலர் வேலையே கதியென்று வேலை செய்து கொண்டே இருப்பார்கள். அவர்களுக்கு வேலை இல்லையென்றால் மூச்சு தடைப்பட்டது போல் ஆகிவிடும் மற்றும் சிலரோ சுகபோகியாக இருப்பதையே விழைவார்கள். வெயிலில் நடக்க மாட்டார்கள்; மழையில் நனைய மாட்டார்கள். வேலையில் ஈடுபடுபவர்கட்கோ வெயில் மழை வேறுபாடு தெரியாது. ஒரு குடும்பத்தில் பிறந்தவர்கள் நான்கு பேரென்றால் அவர்களில் ஒருவன் எந்த நேரமும் படித்து முன்னேறிப்பதவியில் அமர்ந்து பணம் தேடிக் குடும்பத்தைத் தாங்குவதில் இன்பம் காண்பான். வேறு ஒருவன் உறங்குவதும் உண்பதுமாய்ப் பொழுதைப் போக்குவான். மற்ற இருவர் சிறு பிள்ளைகளாய் இருப்பர். ஆகக் குடும்பத்தைத் தாங்குகின்ற பொறுப்பு அந்த ஒருவன் தலையில் விழும்.

திருவள்ளுவர் இவர்களுள் 'இன்பம் விழையானாய் வினை (செயல், முயற்சி, உழைப்பு) விழைபவனைப் பற்றிச் சிறப்பாகக் குறிப்பிட்டு, அவன் தன் உற்றார் உறவினர்தம் துன்பங்களையும் போக்கி, அவர்களைத் தாங்கிக் காப்பாற்றும் தூண்போன்றவன் ஆவான் எனக் கூறுகின்றார். இதில் வினை விழைபவனுக்கு, இன்ப விழைவு இல்லாததால் எதுவும் துன்பமாகத் தோற்றாது என்பதும் அவன் தன் கேளிரது துன்பத்தையும் துடைத்துக் காக்கும் ஆற்றலுடையவனாவான் என்பதும் புலனாகின்றன.

துன்பத்தை வெல்ல வேண்டுமேல், நீ செயல்நோக்கம் உடையவனாய், அதிலேயே ஈடுபடு என்பதே வள்ளுவர் காட்டும் வழியாகும்.

வினை விழைவான் தன் துன்பத்தைக் கருதாமை மட்டுமன்றித் தன் உற்றார் உறவினர்தம் துன்பத்தையும் துடைத்து அறவே போக்கி, அவர்களைக் காப்பாற்றும் பேராற்றலும் பெறுவான் என்பதும் அவர் கருத்தாகும்.

**இன்பம் விழையான்**
**வினைவிழைவான், தன்கேளிர்**
**துன்பம் துடைத்தூன்றும் தூண்**

தூண் தான் உறுதியாயிருந்து பாரத்தைத் தாங்குவது போல வினை செய்தலையே விழைவானும் தான் உறுதியாயிருந்து, தன் கேளிரையும் தாங்குவான்.

பரிமேலழகர் உரைவிளக்கம் கருதத்தக்கது; "சுற்றத்தார் நட்டாரது வறுமையும் தீர்த்து அவர்க்கு ஏமம் (பாதுகாப்பு) செய்யும் ஆற்றலை உடையனாம் எனவே, தன்னைக் கூற வேண்டாவாயிற்று". அதாவது தன்னைத் தான் காத்துக் கொள்வான் என்பது கூறாமலே பெறப்பட்டது. "காரியத்தை விழையாது காரணத்தை விழைவான் எல்லாப் பயனும் எய்தும் என்றதனால் காரணத்தை விழையாது காரியத்தை விழைவான் யாதும் எய்தான் என்பது பெற்றாம்".

காரணம் சரியாயிருந்தால் காரியம் நன்கு விளையும். அதனாலே 'நீ காரணத்திலேயே கருத்தைச் செலுத்துக' என்பதாம். காரணம்-வினை செயல், முயற்சி, உழைப்பு. காரியம்-பயன், சுகம், இன்பம். செயலிலேயே மூழ்கிக் கிடப்பவன் எல்லாப் பயனும் எய்துவான்; சுகபோகம் பற்றிய நினைப்பிலே மூழ்கி விடுபவன் செயலை மறந்து, சோம்பேறியாகி, ஒரு பயனும் அடையாது அழியநேரும்.

முன்னைய காலக் கட்டிடக்கலை, சிற்பம், கோபுரம் போன்றவை இன்பம் விழையாது வினைவிழைவாரால் கட்டப்பட்டவை. அவர்களின் உழைப்பை, ஆள்வோர் உறிஞ்சியதாகப் பல்வேறு கருத்து இருப்பினும் அவை முழு உண்மை ஆகா. அன்று தான்பெறும் ஊதியத்திலே மட்டும் நாட்டம் வைத்தார் எவருமிலர். எல்லோரும் வினைவிழைவாராய்ப் பிறரைவிட, ஈடும் எடுப்புமின்றிச் செயற்பட வேண்டுமென்று ஆர்வம் கொண்டிருந்தனர். அதனால் அக்கலைகள் பல அழியா வரம் பெற்றன.

**துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி**
**இன்பம் பயக்கும் வினை**

என்ற குறளும் இங்கு நினைவுகூரத்தக்கது. முடிவில் இன்பம் பயக்கும் வினைகள் - முதலிலும் இடையிலும் துன்பங்களையே மிகுதியாகத் தரும். எனவே துணிவை மேற்கொண்டு இடையறவுபடாமல் இறுதிவரை முயலவேண்டும் என்பதை இக்குறள் காட்டுகிறது.

நாம் துன்பத்தை விரட்ட வேண்டுமேல், இடைவிடாமல் ஏதாவது வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டே இருக்க வேண்டுமென்ற மேனாட்டார் கருத்து இங்கு ஒப்பிடற்பாலது. நாம் துன்பப்பட நேரம் இருக்கக் கூடாது. அடுத்த வேலை, அடுத்த முயற்சி என்று போகும் போது, துன்பங்களில் மனம் ஈடுபடவோ நினைக்கவோ, நேரம் கிடைப்பதரிது. இதனைத்தான் திருவள்ளுவர் தமது பாணியில், 'இன்பம் விழையான், வினை விழைவான்' என்றார்.

பேரறிஞர் பெர்னாட்ஷா, துன்பத்தில் உழல்கிறோம் என்று சொல்வதன் இரகசியம் என்னவென்றால், நாம் இன்பத்தில் மகிழ்கிறோமா, இல்லையா என்பது பற்றிக் கவலைப்பட நேரம் கிடைப்பதுதான் என்று கூறிய கருத்தும் இவண் நினைதற்பாலது. எனவே நாம் தொடர்ந்து ஏதாவது பணிகளில் ஈடுபட்டு கொண்டேயிருந்தால், துன்பப்பட நேரமே இராது. எப்போதும் சுறுசுறுப்பாய் இருப்பதே துன்பம் துடைக்கும் மருந்து எனலாம்.

**இன்பம் விழையான்**
**இடும்பை இயல்பென்பான்**
**துன்பம் உறுதல் இலன்**

முயற்சி என்று தொடங்கினால் அதனாலாம் சங்கடங்கள், எதிர்பாராத இன்னல்கள், முட்டுக்கட்டைகள், தடைகள், உடல்நலக்குறைவுகள் என ஏதாவது வருதல் இயல்பேயாம். மேனாட்டார் சொல்கிறபடி, முதலிலேயே இம்முயற்சிக்கு என்னென்ன துன்பங்கள் கூடுதலாக வரும்? ஆகக் கூடுதல் துன்பம் எதுதான் வரும்? இவ்வாறு எண்ணி, ஒரு பட்டியல் போட்டுக் கொண்டு

ஆகக் கூடுதலான துன்பத்தையும் எதிர்கொள்ளுமளவு மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு, ஒருவன் முயற்சியில் இறங்கினால், அவனை எத்துன்பமும் பாதிக்காது.

திருப்பாற் கடலைக் கடைந்த பொழுது முதலில் நஞ்சு வெளிப்பட்டது. கடலைக் கடைந்த தேவர்களும் அசுரர்களும் சிவபெருமானைச் சரணடையவே, அவர் நஞ்சையுண்டு அவர்களைக் காப்பாற்றினார். பிறகுதான் அமிழ்தம் வெளிப்பட்டது. புராணங்கள் சிலபோது அடிப்படையுண்மையைக் கூறவரும் குறியீடுகளாகும். அங்கு அவ்வுண்மைகள் தான் முக்கியமே தவிரப் புராணக்கதை முக்கியமன்று. இந்தக் கதையின் படி எவ்விதப் பெருமுயற்சிக்கும் கடைவைப்பது, தொழில் தொடங்குவது உட்பட – முதலில் துன்பங்களே எதிர்ப்படும். நஞ்சையுண்டு, கண்டத்தில் அடக்கிக் கொண்டு, தன்னையும் உலகையும் காத்த முழுமுதல்வன் போலச் செயற்பட்டால் பிறகு அமிழ்தம் கிடைப்பதுறுதி. சிலர் அதுவரை காத்திராமல் துன்பம் போல் தோற்றியதுமே, மனந்தளர்ந்து, முயற்சியைக் கைவிட்டுத் தொடங்கியதில் தோல்வியுற்று விதியை நொந்து கொண்டுகிடப்பர். இடும்பை இயல்பென்னான்– முயற்சியிடையே துன்பங்கள் வருதல் இயல்பே என உணர்பவன். 'தினமலர்' ஆசிரியர் எளிய நிலையில் தொடங்கிப் பெரும் நாளிதழ் ஆசிரியர் – முதலாளி ஆனவர். அவர் அந் நாளேட்டைத் தொடங்கும் போது, மாதம் ரூபாய் ஆயிரம் இழப்பு வரும் எனத் தெரிந்ததாம். ஆண்டுக்குப் பனிரண்டாயிரம் – ஐந்தாண்டுக்கு அறுபதாயிரம் இழப்பு வரும்; அந்த அளவு தாக்குப்பிடித்தால் பிறகு இலாபம் வரும் என, மிகச் சிந்தித்து ஒரு கணக்குப் போட்டுக் கொண்டு அதற்குரிய தொகையையும் ஈடுகட்டச் சரிக்கட்டிக் கொண்டு, ஐந்தாண்டுகள் மிகக் கூடுதலாக வரக்கூடிய இழப்பு இதுவே எனத்திட்டமிட்டு அதை எதிர்கொள்ள மனத்தளவிலும் ஆயத்தமாகி நாளேட்டைத் தொடங்கினாராம். அதன்பயன் மிகப்பெரிய அளவில் அவர் வெற்றி பெற்றார்.

இதைத்தான் மானிட முன்னேற்ற நூலாரும் வரைகின்றனர். ஒரு தொழிலை – முயற்சியைத் தொடங்கும் போது என்னஎன்ன தடைவரும்; எவ்வளவு இழப்பு வரும்; எத்தனை காலம் வரும்; அவற்றை எவ்வெவ்வாறு

தாக்குப் பிடிக்கவேண்டியிருக்கும் என நன்கு ஆராய்ந்து ஆகக் கூடுதலான துன்பத்தையும் தாக்குப்பிடிக்கக்கூடிய அளவுக்கு உன்னை முதலிலேயே ஆயத்தப்படுத்திக் கொண்டு பிறகு தொடங்குவாயானால், பிறகு அத்தடைகளும் துன்பங்களும் உன்னை நிறுத்திவிடமாட்டா, உறுதியாக, வெற்றியைக் குறித்த காலத்திற்கு முன்பே அடைய அது வழிவகுக்கும்.

நம் திருவள்ளுவர் இதை மிக அழகாக,

**முடிவும் இடையூறும்**
**முற்றியாங்கு எய்தும்**
**படுபயனும் பார்த்துச் செயல்** (676)

என்று வினைசெயல் வகையில் கூறுகிறார்.

இதனோடு 'துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி, இன்பம் பயக்கும் வினை' என்ற அவர் கருத்தைச் சேர்த்துச் சிந்தித்துச் செயற்படுதல் வெற்றி தரும்.

உடம்பைப் பாதிப்பது மனக்கலக்கமேயாம். ஒருவன் உடல் நலங்கெட்டு அழிவதற்குத் துன்பமே அடிப்படைக் காரணமாகும். குடற்புண் ஏற்படுவதற்கு மனத்துயரமும் இறுக்கமும் வருந்துதலுமே காரணங்கள். எனவே துன்பமே வந்தாலும் அது பற்றிக் கருதாது, தன் மனத்தை அலையவிடாமலும் சஞ்சலப்படாமலும் இருக்கப் பழக வேண்டும். ஒருவன் தன் மனத்தைக் காற்றோட்டமும் ஒளிவீச்சுமுள்ள வீடுபோல வைத்துக் கொள்ள வேண்டும். இன்றேல் உடல் கெட்டு, உள்ளம் கெட்டு, உயிரும் திண்டாட நேரும். உடம்பார் அழியின் உயிரார் அழிவர்!

**இலக்கம் உடம்பு இடும்பைக்கு என்று கலக்கத்தைக்**
**கையாறாக் கொள்ளாதாம் மேல்** (இடுக்கண் அழியாமை 627)

இடும்பைகள் வருதல் இயல்பே, இடும்பை இல்லாத வாழ்வு என ஒன்றில்லை. துன்பம் வந்துவந்து போவதின் மூலமே இன்பம் என்பது முழுமையாக உணரப்படுகிறது. நிழலருமை வெய்யிலிலே!

துன்பத்தை இயல்பாக வருவதே என்று கருதுதலும், இன்பத்தை விழையாமலிருப்பதும் நாம் நம் மனத்தைச் சமனிலைப் படுத்தி, அசையாத குன்றமென ஆக்கவல்ல மனப்பயிற்சிகளாகும். இதற்கு இன்பதுன்பங்கள் இரண்டுமே மனத்தை நிரம்பவும் ஆட்கொண்டு, அடிமைப்படுத்திவிடாமல் காக்க வேண்டும். தாமரை இலைத் தண்ணீர் போல அவற்றுடன் பொருந்தியும் பொருந்தாதும் வாழும் ஒருவித மனப்பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இதனைத் திருவள்ளுவர் தமக்கே உரிய முறையில் சொல்லும் திறன் சிந்திக்கத்தக்கது.

**இன்பத்துள் இன்பம்**
**விழையாதான் துன்பத்துள்**
**துன்பம் உறுதல் இலன்**

இன்பத்தை அனுபவித்துக் கொண்டே, அவ்இன்பத்துள் மனத்தால் ஈடுபடாமல் இருப்பது எவ்வாறு? இன்ப நுகர்ச்சியும் வேண்டும்; அதில் அழுந்தாத மனப்பக்குவமும் வேண்டும். இது இயலுமா?

அத்தகைய மனப்பக்குவம் அமைந்தால், நம்மைச் சூழும் துன்பத்தில் நாம் ஆழும்போது கூட, அத்துன்பம் நம்மை அழுத்தாமல் நம் மனம் அதினின்றும் விலகிநிற்கும்.

இக்'கலை'யைக் கற்பது எவ்வாறு?

கம்பர் பெருமான் இராமனைவைத்து இம் மனப்பக்குவத்தை உலகிற்கு உணர்த்தினார். எதிர்பாராது ஒருநாள் தயரதன் இராமனை அழைத்து 'எனக்கு வயதாகிவிட்டது; ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொள்க' என்று அன்பாய்க் கேட்டுக் கொண்ட பொழுது, இராமன் தந்தை சொல்லை ஏற்க வேண்டுமென்ற கடமை கருதியே மவுனமாய் இருந்தான். மவுனம் சம்மதத்திற்கு அறிகுறி எனத் தயரதன் அதை எடுத்துக் கொண்டு மனம் மிக மகிழ்ந்தான். இராமனோ 'அப்படியா!' என்று அகம் மிக மகிழ்தல், ஆடிப்பாடுதல் எல்லாம் செய்தானில்லை; கரையிலா மகிழ்ச்சியில் கவிழ்ந்தானில்லை!

**தாதை அப்பரிசு உரைசெயத்**
**தாமரைக் கண்ணன்**
**காதல் உற்றிலன் இகழ்ந்திலன்**
**கடன் இது என்று உணர்ந்தும்**
**யாது கொற்றவன் ஏவியது**
**அதுசெயல் அன்றே**
**நீதி எற்குஎன நினைந்தும் அப்**
**பணிதலை நின்றான்**

**'காதல் உற்றிலன் இகழ்ந்திலன்'** – ஆசை வைக்கவுமில்லை; அலட்சியப்படுத்தவுமில்லை. 'தந்தை ஏவியதைச் செய்வது தனையன் கடமை' என உணர்ந்தான். 'அரச கட்டளைக்குப் பணிவதே நீதி' என நினைத்தான். அதனால் அவன் சம்மதத்தை அவனது முகமே காட்டியது. ஆம்! இராமன் வாய்திறந்து 'அப்படியா? சம்மதம்' என்று கூட ஆர்வத்தோடு சொல்ல வில்லை. முகம்தான் சம்மதக்குறி காட்டியது, அடக்கத்தோடு! 'குரிசில் சிந்தையை மனக்கொண்ட கொற்றவன்', மேற்கொண்டு ஆவன செய்கின்றானாம். இராமன் மனத்தால் உணர்ந்ததை மன்னன் தன் மனத்தாலறிந்தான் என்பதால், இராமன் 'இன்பத்துள் இன்பம் விழையாதிருந்தான்' என்ற உண்மை பெறப்படும். 'இன்பத்தை அனுபவியாநின்றே அதில் ஆழாதிருந்த' மனப்பக்குவநிலை இது. பிறகு, மறுநாளே கைகேயி இராமனை அழைத்து வரச் செய்து, பூழி வெங்கானம் ஏகிப் புண்ணியத்துறைகள் ஆடி, ஏழிரண்டு ஆண்டின் வா என்று, அரச கட்டளை ஈதெனச் சொன்ன பொழுதும் அவன் முகம் 'அன்றலர்ந்த செந்தாமரை' போலவே இருந்தது. இன்பத்துள்ளிருந்த போதும் இன்பத்தில் படியாதிருந்ததால், துன்பத்துள் மூழ்க நேர்ந்த போதும் துன்பத்தில் படிந்தானில்லை!

கம்பர் படைத்த காப்பியம் திருக்குறளுக்கு எடுத்துக்காட்டான மானுடக் குணச்சித்திர நூலென்பதை நிறுவ இஃதும் ஒரு சான்றாகும்.

திருவள்ளுவர் முதலிலும் முடிவிலும் இவ்வுலக வாழ்வு பற்றியே

கருதிக் கூறலால், அவரிடம் காணப்படும் தெளிவு சிறப்புடையதாகும். மனித குலத்தைப் பாடவந்த பாணன் எனப் பேரறிஞர் போப்பையர் குறிப்பிடுவது, மிகப் பொருத்தமுடைய புகழுரையாகும்.

## துன்பத்தையும் இன்பமாகக் கொள்ளுதல்

இன்ப துன்பமென்பன நம் மனநிலைகளே. நாமாக வருவித்துக் கொள்பவையே பல. எது துன்பமென வரையறுத்துவிட முடியாது. சிலர் எழுந்திருப்பது, உட்காருவது கூடத் துன்பமென முணுமுணுப்பர்.

ஒருவகையில் பார்த்தால் இன்ப துன்பமென்பன நாமாக நமக்கு விளைவித்துக் கொள்பவையே. நாம் நினைத்தால் துன்பத்தையே இன்பமாக மாற்றிவிட முடியும். இது மனத்தில் நிகழும் இரசவாதம். இரும்பைப் பொன்னாக்கும் முயற்சி இது. கல்லைப் பிசைந்து கனியாக்கும் ஆற்றலிது.

யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா
நோதலும் தணிதலும் அவற்றோரன்ன!

கணியன் பூங்குன்றன் நன்றாகக் கணித்துச் சொன்ன இச் சிந்தனைகளில் மூன்றாவது, துன்புறுதலும் அதை மாற்றிக் கொள்ளுதலும் கூட நமக்கு நாமே செய்துகொள்ளக் கூடியவையே என்பதுதான்! நம் மனம் அதன் நிலையில் நின்றே துறக்கவுலகை நரகமாக்கவும் நரகத்தைத் துறக்கவுலகமாக்கவும் முடியும் என்பது மேனாட்டார் கருத்து. துன்ப உணர்வுமிக்க மனமுடையார் சிலர், கோடி கோடியாகப் பணம் குவிந்து வாய்ப்பும் வசதியும் பெருகிய நிலையிலும் துன்ப உணர்வுகளையே வெளிப்படுத்துவர். இன்ப உணர்வுடையார் துன்பங்களையெல்லாம் விளையாட்டாக – சிரிப்பாக – எளிதாக எடுத்துக் கொண்டு, வாழ்க்கைப் பாதையில் நடந்தபடி இருப்பர்! "இன்பமென்பது வெளியிலிருந்து வருவதன்று; அது உள்ளிருந்து வெளிப்படுவது", என ஆப்பிரகாம் லிங்கன் குறிப்பிடுவார். 'எனக்குக் காலுக்குச் செருப்பில்லை எனக் கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன், காலே இல்லாத ஒருவனை யான் வழியில் சந்திக்கும்

வரை' என்பது ஆங்கிலப் பாடலொன்றின் கருத்து. நீதி நூல்கள், 'தம்மின் மெலியாரை நோக்கித் தமது உடைமை அம்மா பெரிதென்று அகம் மகிழ்க' என அறிவுரை கூறும்.

**வெள்ளத் தனைய**
**இடும்பை அறிவுடையான்**
**உள்ளத்தின் உள்ளக் கெடும்**

வெள்ளம் போலப் பெருகிவரினும் அறிவுடை ஒருவன் அவற்றை வெல்லுதல் எளிதே என மன உரத்தோடு நினைத்தால், நினைத்த அளவில் அத்துன்பங்கள் போய் ஒழியும்.

**இன்னாமை இன்பம்**
**எனக்கொளின் ஆகுந்தன்**
**ஒன்னார் விழையும் சிறப்பு**

நம் முயற்சியில் வருந்துன்பங்கள் மிகப் பலவாகும். அவற்றை இறுதியில் எய்தப் போகும் நன்மை கருதி ஏற்றோமென்றால், துன்பம் துன்பமெனத் தோற்றாது. மேலும் இன்னல்களைப் பொறுத்துக் கொள்வதுவேறு; அவற்றையே இன்பமென ஏற்றுக்கொள்வது வேறு. இவை ஒன்றினொன்று உயர்ந்த மனநிலைகள். இன்பம் விழையாது, செயல் முயற்சி முன்னேற்றம் கருதி இன்னலை ஏற்கச் சொன்னவர், அவ் இன்னலையே இன்பமென ஏற்கவும் முயல்க என மன உரத்திற்கு மேலும் உரமேற்றுகிறார்.

இறைவனிடம் நம்மை ஒப்படைத்து, பத்திமையில் மூழ்கி, வழிபடுவதாலும் அக்குறிப்பிட்ட மன உரம் நமக்கு வலுவடைய வாய்ப்புண்டு. அம் மன உரம் ஏறஏறத் துன்பம் தளர்வுறும் - விட்டுநீங்கும் - ஓடும். திருவள்ளுவர் மேலுலக நம்பிக்கை, மறுபிறப்பு, அவா அறுத்தல், துறவு, தவம், மெய்யுணர்தல், விதி போல்வனவற்றை, மனிதன் இவ்வுலகில் நன்றாக வாழ உதவவேண்டும் என்ற அளவிலேயே நூற்றுக்குத் தொண்ணூறு விழுக்காடு எடுத்தாள்கிறார் எனச்செருமன் நாட்டுப் பேரறிஞர்

ஆல்பர்ட்டு சுவைட்சர் குறிப்பிடுவன, தமிழராகிய நாமும் அறிய வேண்டிய வள்ளுவர்தம் உள்ளமாகும்.

**வேண்டுதல் வேண்டாமை இலான்அடி சேர்ந்தார்க்கு**
**யாண்டும் இடும்பை இல. (4)**

**தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்கு அல்லால்**
**மனக்கவலை மாற்றல் அரிது**

கடவுள் நம்பிக்கையின் முதற்பயன் - முதன்மைப் பயன் அது நம் மனக்கவலைக்கு மருந்தாகிறது என்பதுதான்! இன்ப துன்பங்களைச் சமமாகக் கருதுவோன் இன்னாமை இன்பம் எனக் கொள்ளுவான் என்று கண்டோம். இறைவன் வேண்டுதல் வேண்டாமை - விருப்பு வெறுப்பு - அற்றவன். அவனை அடையும் நாமும் அந்நிலை பெறுதலால், இடும்பைகளினின்றும் விடுபடப் பத்திமையும் பயன்படுமாறு புலனாகிறது. சொர்க்கவுலகம் புகுதல் வீடுபேறடைதல் முதலான முடிந்த நிலைகளைவிட, இம்முதற்பயனில் அழுத்தம் வைத்துக்கூறும் வள்ளுவர் உள்ளம் அறிந்தின்புறத்தக்கதாகும்.

பாரதியார் ஒவ்வொருநாளும் நாம் துன்பத்தை மறந்து இன்பமாக வாழவேண்டுமென்பதை - மன உற்சாகம், ஊக்கத்தோடு வாழ முயல வேண்டுமென்பதை ஒரு பாடலில் மிக அழகாக வலியுறுத்துகிறார்.

**சென்றதினி மீளாது, மூடரேநீர்**
**எப்போதும் சென்றதையே சிந்தைசெய்து**
**கொன்றழிக்கும் கவலையெனும் குழியில்வீழ்ந்து**
**குமையாதீர்! சென்றதனைக் குறித்தல் வேண்டா!**
**இன்றுபுதிதாய்ப் பிறந்தோமென்று நீவிர்**
**எண்ணமதைத் திண்ணமுற இசைத்துக் கொண்டு**
**தின்று விளையாடி இன்புற்று இருந்து வாழ்வீர்!**
**தீமையெலாம் அழிந்துபோம்! திரும்பிவாரா!**

நம் மனத்தை அன்றலர்ந்த புதுமலர் போல் நாளும் வைத்துக்கொள்ள வழிகாட்டுகிறது பாரதி பாடல். கவலை துறந்திங்கு வாழ்வது வீடு என்பதே பாரதியின் குரல். இவை நமக்கு அன்றாட வாழ்வில் உதவும் ஊக்கவுரைகளாகும்.

**துன்பத்தைத் துன்புறுத்துதல்**

துன்பத்தை வெல்லத் திருவள்ளுவர் தரும் மூன்று வரை விதி வாய்பாடுகளில் மிகப் புதுமையானது, மிகப் பயனுடையது 'துன்பத்தைத் துன்பப்படச் செய்க!' என்பதாகும்.

வீட்டில் தாய் அதிகாலையில் எழுந்துவிடுவாள். தன் பிள்ளைகளுள் ஒருவன், சூரிய ஒளி சாளர வழியாகப் புகுந்த பின்பும் உறங்கினால், 'அடே! எழுந்திருடா! ஊரிலுள்ள மூதேவி எல்லாம் உன்னை வந்து பிடிச்சுக்கப் போகுது!' என்று எழுப்புவாள். இதன் பொருளென்ன?

மூதேவி காலையில் தனக்கு ஏற்ற ஆள் எவன் என்று பார்க்க வீடுவீடாகத் தேடுமாம்! இவ்வாறு அது தேடும்போது மற்றவர்கள் எல்லோரும் சுறுசுறுப்பாக எழுந்துவிட்டதால், இன்னும் கண்விழிக்காது படுத்துக் கிடப்பவனைப் பார்த்து தனக்கு ஓர் ஆள் கிடைத்தான் என்று பற்றிக் கொள்ளுமாம்!

துன்பத்தையும் இவ்வாறு ஓர் உயிருள்ள ஒன்றாக உருவகப்படுத்திக் கொள்வோம். அத்துன்பமும் தனக்கேற்ற ஆளையே தேடுகிறது. காலில் சிறுமுள் குத்தியதற்கே மனம் சோர்ந்து, 'ஐயோ கடவுளே! உனக்குக் கண்ணில்லையா?' என்று வருந்துபவனைக் கண்டால் அது உடனே பற்றிக் கொள்ளுகிறது. தன்னைக் கண்டும் கண்டது போலவே காட்டிக் கொள்ளாதவனைக் கண்டால், அத்துன்பம் அவனை நெருங்கத் தயங்குமாம் - அஞ்சுமாம். 'ஐயோ, இவனை அடைந்து நாம் என்ன செய்யப்போகிறோம்? நம் வீறாப்பு இவனிடம் போய் மூக்கு உடைபடுவதைவிட, விலகிப் போவதே மேல்' என்று அத்துன்பம் விலகிப் போய் விடுமாம்.

வேறொரு விதமாகவும் பார்க்கலாம். துன்பம் எதற்காக நம்மைத் தேடி வருகிறது? நம்மைத் துன்புறுத்த வேண்டும் என்பதே அதன் விருப்பம். அது நினைத்ததுபோல் நாம் அதைக் கண்டதும் துன்பப்படத் தொடங்கிவிட்டால், அதற்கு வெற்றியாகி விடுகிறது! எவ்வளவு கடுமையாக அத்துன்பம் நம்மைத் தாக்கப் புறப்பட்டு வந்தாலும், நாம் கலங்காது – துன்பப்படாது உறுதியாக இருந்துவிட்டால், 'ஐயோ! நம் முயற்சி பாழாகிப் போய்விட்டதே! நாம் தோற்றுப்போனோமே! நாம் எவ்வளவு முயன்றும் இவனிடம் ஏதும் செய்ய முடியவில்லையே! நமக்குத் தோதான தொடை நடுங்கிகள் ஆயிரம் பேர் இருக்கவும் நாம் இவனிடமா போய் மாட்ட வேண்டும்?" எனப் பலவாறு எண்ணித் துன்பம் துன்பப்படுமாம்!

திருவள்ளுவர் அழகாகச் சொல்கிறார்

'தம்பி! துன்பம் உன்னைத் துன்பப்படுத்தத் தானே வருகிறது நீ சற்றும் மன உறுதிகுலையாது, துன்பப்படாமல் இருந்துபார்! அத்துன்பம் துன்பப்படும்!' என்பது அவரது அறிவுரை.

யானையின் இயல்புபற்றிச் சங்க இலக்கியம் கூறும் பல உண்மைகள் வனவிலங்குகள் பற்றிய ஆய்வாளர்கள் இன்று கண்டு சொல்லும் பல செய்திகளால் உறுதிப்படக் காண்கிறோம்.

குடும்பம் குடும்பமாகக் கூட்டம் கூட்டமாக வாழும் யானை மான உணர்வுமிக்கது; நினைவாற்றலுடையது. தன்னைத் தாக்கியவனைக் கருவம் வைத்துத் தாக்கிப் பழிக்குப் பழி வாங்கும் இயல்பினது.

அதனை வேட்டையாடச் செல்பவர்கள் சுட்டால், நேருக்கு நேர் எதிர்த்து நிற்கும். புலி பதுங்கியோடி, முதுகுப்புறமாகப் பாய்ந்து தாக்கும். இதனால் வேட்டையாடச்செல்வோர் யானை மீது செல்வதுண்டு. அது விலங்குகளைச் சுட ஏதுவாக, எதிர் முகமாக நிற்கும்.

யானையைத் தாக்கும் பொழுது, அம்பு அதன் மத்தகத்தில் புதையுண்டு, குருதி வடிந்தாலும், அது பெருமிதத்தோடு நேரே எதிர்த்து வரும்;

அஞ்சாது. புலி அவ்வாறன்றி, ஓடி ஒளியும். ஆயினும் சீற்றங்கொண்டு மறைந்துவந்து தாக்க முயலும்.

யானையின் இப்பெருமிதம் - அம்பு நெற்றியில் புதைபட்டுக் குருதி கொட்டினாலும், நேரே எதிர்த்து நின்று தன் பெருமிதத்தை நிலைநிறுத்தும். இது அதன் நெஞ்சுரத்தைக் காட்டுகிறது. அது போலச் சிதைவு - தோல்வி நிலை சிதைந்து துன்புறல் வந்த விடத்து, உரவோர் மனவுறுதி சுருங்க மாட்டார்கள்; மேலும் உறுதி கூடப்பெற்று மனவூக்கத்தோடு எழுவார்களேயன்றித் தளர மாட்டார்கள்!

**சிதைவிடத்து ஒல்கார்**
**உரவோர்; புதையம்பில்**
**பட்டுப் பாடூன்றும் களிறு**

பாடு ஊன்றும் - பெருமையை நிலைநிறுத்துமாம். அசையாது தளராது பின் வாங்காது எதிர்த்து நிற்பதை இது விளக்குகிறது. புதை அம்பு - அம்பு புதைந்து ஊடுருவிய நிலை, புதை என்பது அம்புக் கட்டையும் குறிக்கும். ஒரு கட்டு அம்பு பட்டுத் தாக்கினாலும் நெஞ்சுரம் காட்டிப் பெருமையை நிலைநாட்டி, நேரெதிர் நிற்கும் யானை போல என்றும் கொள்ளலாம்.

**இடும்பைக்கு இடும்பை**
**படுப்பர்; இடும்பைக்கு**
**இடும்பை படாஅ தவர்**

இடும்பை படாஅதவர் - அளபெடை இலக்கணம் கூறினால் மட்டும் போதாது. சிலர் இடும்பையை அரைவாசி, முக்கால்வாசி எதிர்த்துநிற்பர். முழுவதும் கடைசிவரை எதிர்த்து நில்லார். இவ்வாறு சிறு இடைவெளி விட்டாலும் இடும்பை வந்து தாக்கிவிடும் என்பதற்காக 'இடும்பை படாஅதவர்' என்று நீட்டினார் திருவள்ளுவர். கடைசிவரை உறுதியுடன் இருப்பவர் என்பது பொருள்.

எவ்வளவு சுருக்கமான, எளிதான வழி – வரையறைவிதி! உன்னை இடும்பைப் படுத்தவே இடும்பை வருகிறது. நீ சற்றும் இடும்பையே படாமல் இருந்துபார்! அந்த இடும்பை இடுக்கண்படும். (இடும்பை, இடுக்கண் – கடுந்துன்பம்)

பாரவண்டியை இழுக்கும் மாட்டைப் பார்த்துள்ளோம். மேடு, பள்ளம், கரடு முரடான பாதை, சேறும் சகதியும் நிரம்பியவழி என எல்லா வழியிலும் வண்டியைச் சுமையோடு இழுத்துப் போக வேண்டும். 'பகடு – காளைமாடு. பகடு மருங்கு ஒற்றியும் (இடுப்பை வளைத்தும்) மூக்கூன்றியும் (முகத்தை மூக்குடன் முன்னே நிலத்தில் ஊன்றுவதுபோல் நீட்டியும்), தாள் தவழ்ந்தும் (கால்களைத் தவழ்வது போல் வளைத்து நடந்தும்) அரிதின் உய்க்குமாறு போலத் (வண்டியை இழுப்பது போல) தன் மெய் வருத்தம் நோக்காது முயன்று உய்ப்பான் (முயற்சியை மேற்கொள்வான்) என்பார் பகடன்னான் என்றார்' என்பது பரிமேலழகர் காட்டும் ஒரு படப்பிடிப்பு. முயற்சிக்கு எருதை உருவகப்படுத்துவது ஒரு தமிழ் மரபு.

மடுத்தவாய் எல்லாம்
பகடன்னான் உற்ற
இடுக்கண் இடர்ப்பாடு உடைத்து

முயற்சியுடையவனைச் சேர்ந்தால், அங்ஙனம் சேர்ந்த இடுக்கணுக்கு இடர்ப்பாடு உண்டாகும். அதுதான் வருந்த நேருமே தவிர, அவன் வருந்தமாட்டான். இக்குறள்களைப் பல முறை ஓதிப் பார்த்தால், அம் மனவுரம் கைகூடும்.

மனிதன் ஊழை வெல்லவேண்டுமானானல், அதற்குத் தாழாமல், அதைவிடக் கூடுதலாக அதன் மேல் படையெடுப்பது போல் முயற்சியின் அளவைக் கூட்ட வேண்டும் என்பது வள்ளுவம். அது போல் துன்பம் பலவாறு துன்பப்படுத்த வரும் போது, தடைகளையெல்லாம் கடந்து வண்டியை இழுக்கும் எருதைப் போன்று, அத்துன்பங்களைக் கடந்து முன்னேறும் மனிதனைக் கண்டால் அத்துன்பம் இடர்ப்பட்டு வருந்த நேருமாம்.

துன்பம் துன்பப்படும்; துன்பம் இடர்ப்பாடு உடையதாகும். துன்பம் தோற்றோடும் என்ற இவ்வள்ளுவ வாசகங்களே நமக்கு நெஞ்சுரம் நல்கும் கேயங்களாகும்!

**துன்பம் ஒரு தொடர்வண்டி**

துன்பம் எப்போதும் தனியே வராது. தொடர்வண்டியில் அடுத்தடுத்து வண்டிகள் வந்து கொண்டே இருப்பது போல், ஒரு துன்பம் பல துன்பங்களைக் கூடவே கூட்டிக் கொண்டு வரும்.

சம்பளம் போடத் தாமதம் என்ற துன்பம் வந்தால் என்னாகும்? வாடகைக்காரர் விரட்டுவார்; பால்காரர் கோபிப்பார்; பலசரக்குக்காரர் கடிந்து பேசுவார்; மனைவி பிதற்றி அரற்றுவாள்; மக்கள் மனங்குலைந்து குன்றிப்போவர்; நம் மனம் அலை பாய்வதால், அலுவலக வேலை பாதித்து, மேலாளரிடம் திட்டுக் கேட்க நேரும்.

எந்தத் துன்பமும் பற்றி எண்ணிப் பாருங்கள். அது தனியே வராது; சில சில்லரைத் துன்பங்களைக் கூட்டிக் கொண்டுதான் வரும். அதனால் துன்பம் வருவதைக் குறிக்க வந்த திருவள்ளுவர் 'அடுக்கி வரினும்' என்றார். ஒன்று போவதற்குள் மற்றது வருவதால் அடுக்கி வருவதைப்பற்றிக் கூறினார்.

**அடுக்கி வரினும் அழிவிலான் உற்ற**
**இடுக்கண் இடுக்கட் படும்**

அழிவிலான் – அசைவின்றிப் 'பட்டுப் பாடூன்றும் களிறு போல' நிற்பவன். துன்பத்தை எதிர்கொண்டு, பெருமிதத்தோடு நிற்பவனைப் பார்த்ததும் அந்த இடுக்கண் இடுக்கனுக்கு ஆளாகுமாம்.

வெளிவர முடியாது தவிக்கும் துன்பம் கட்டமெனப்படும். அது கஷ்டமானது. இருபுறமும் இடிபடும் மத்தளம் போல் வருவது இடுக்கண். அது இருதலைக் கொள்ளியின் உள்ளெறும்பு போன்ற ஒரு நிலையாகும். கடும்பு போல இடும்பு – இடும்பை ஆகும். இடுக்கண் வீட்டில் குழந்தைகள் பசி என்று

அழும் போது, அது தீர்க்க வழி அறியாது தவிக்கும் தந்தைக்கு வருவது. கண் இடுங்குவது போல வரும் இத்துன்பம் இடுக்கண் எனப் பெயர் பெற்றதும் ஒரு சிறப்பேயாகும்.

திருவள்ளுவரின் மனித நேயம் கருதற்பாலது. மனிதனை வாழவைப்பதற்காகத் துன்பத்தை ஒரு குறியீட்டுப் படிமமாக ஆக்கி, மனிதரைப்போலும் உடலும் உயிரும் உடையதாக்கி, அத்துன்பத்தைத் துன்புறுத்த வேண்டுமென மனிதனுக்கு அறிவுரையும் கூறுகிறார். இதிலுள்ள உளவியலும் கருதற்பாலது. மாந்தனிடம் துன்பம் துன்பப்படும், உன்னால் துன்பத்தைத் துன்புறுத்த முடியும், துன்பத்திற்கு இடர்ப்பாடாகிவிடும், உன்னை எந்த அளவு துன்பப்பட வைக்க அது வருகிறதோ, அந்த அளவு அது துன்பப்படும் என்றெல்லாம் திரும்பத் திரும்பக் கூறுவன, மனிதனின் மன உரத்தை வளர்க்கவல்ல ஊக்கவுரைகளாகும்.

துன்பம் இருந்தால் வள்ளுவர் மீது வழக்குப்போடும். 'ஐயோ! என்னை வாழவிட மாட்டீர் போலிருக்கிறதே' என அழும். அந்த அளவு திருவள்ளுவர் அசைக்க முடியாத ஊழையும் முதுகுகாட்டி ஓடவைக்கலாம்; அடுக்கிவரும் கடுந்துன்பமாம் இடும்பை, இடுக்கண்களையும் அதே அளவு துன்பப்பட வைத்து விரட்டலாம் என்று அவைகளுக்கு எதிராகப் போர் தொடுக்கின்றார்!

**இடுக்கண் வருகிறதா! அதைப் பார்த்து எதிர்கொள்ள முகம் மலர்க!**

நகுதல் முகம் மலர்தல் கிண்டலாகச் சிரித்தல். பிறரை ஏளனமாக நகைத்து எள்ளுதல். 'நகுதக்கனரே நாடுமீக் கூறுநர்' என்ற புறநானூற்று அடிக்கு, 'தங்களை மேம்பட்டவர்களாகக் கருதிக் கொள்ளும் பகைவர்கள் சிரிக்கத் தக்கவர்கள்' என்பது கருத்து. துன்பம் வரும் போது, அது நம்மைத் துன்பப்படுத்தத்தானே வருகிறது என்பதை உணர்ந்து அதற்கு எதிராகத் துன்பப்படாமலிருந்து பார்க்குமாறு கூறிய தெய்வப்புலவர், அத்தகைய மன உறுதியுடையவரை அடைந்த துன்பம் தான் துன்பப்பட்டுத் தோற்கும் என்றார். இங்கு அதனிலும் மேலான ஒரு யோசனையைக் கூறுகிறார்.

'இடுக்கண் வருங்கால் நகுக' என்று கூறுகிறார். துன்பம் வரும் போது, அதனை வெற்றி கொள்ளத்தக்க ஆற்றலும் மன உறுதியும் உடையவனாய், அத்துன்பத்தைப் பார்த்து வெற்றிச் சிரிப்புச் சிரித்திடுக என்னுமிது உளவியல் தழுவிய நல்ல கருவியாகும். மன உறுதியினால் அத்துன்பத்தை எள்ளி நகையாடுவது போல் சிரிக்கலாம்; அல்லது அவ்வண்ணம் சிரித்தலால், அம்மனஉறுதி வாய்க்கப் பெறலாம்.

எங்ஙனமாயினும் அத்துன்பத்தை 'அடுத்து ஊர்வது' - வெற்றி கொண்டு விரட்டுவது, அங்ஙனம் நகுவதைப் போன்றது பிறிதில்லை.

இடுக்கண் வருங்கால்
நகுக, அதனை
அடுத்தூர்வது அஃதொப்பது இல்

வெற்றி கொள்ள முடியும், புறமுதுகுகாட்டி ஓட வைக்க இயலும், துன்பத்தைத் துன்பப்படுத்தக்கூடும் என்ற மனநிலைகளை, இந்த நகுதல் வளர்த்து, ஊக்கத்தை மிகுதிப்படுத்தும் என்பது உளவியலாகும். சாதாரணமாகப் பொறுக்கவியலாத துன்பம் வரும்போது, சிரிப்பு வரும். 'நகுக' என்பது பெரும் பொருளாழமுடையது. நகுதற்குரிய ஆற்றல், மன உரம் பெறுக, துன்பம் உன்னைத்துன்புறுத்தத் துள்ளுமாயினும் அதனெதிர் 'உன்னால் அது முடியாது' என்பது போல இகழ்ந்து சிரித்திடுக; பெருமிதமும் உரமும் ஊக்கமும் தோன்ற அதை நகையாடுக என இவ்வாறு மனிதனை, அந்தச் சூழலை எதிர்கொள்ள வல்லவனாக்கும் உத்தி இது. 'அடுத்தூர்தல்' ஒரு போர்க்களக் கலைச் சொல். 'பகைவனை மடக்கி இழுத்துப்போட்டு அடித்து, ஓடஓட விரட்டுதல்' ஆகும் அது.

வள்ளுவப் பெருமகன் மனிதன் துன்பங்களினின்றும் விடுபட்டுக் கவலைகளைத் துறந்து, உடல் நலத்தோடு வாழ வேண்டுமென்பதற்காகக் கூறுகிற, வாழ்வு நெறி உத்திகளில் சிலவற்றைக் கண்டோம். இவை இன்றைய மனித மேம்பாட்டுச் சிந்தனையாளர்களுடன் ஒருங்கு வைத்து

எண்ணத்தக்கனவாயுள்ளன.சிலவற்றில் அவற்றிலும் மேம்பட்ட வீச்சுடைய எண்ண ஓட்டங்களையும் காண்கின்றோம்.

உலகம் விரைந்து நடக்கிறது. ஆற்றில் ஓடுகிற வெள்ளம் போல, ஒரு கணம் முன்னே ஓடியதும் ஒரு கணம் இனி ஓடிவரப் போவதும் - ஒன்று காலங்கடந்தது மற்றது கற்பனையானது. இப்போது, இந்தக் கணமே நம்முன் இருக்கிறது. வாழ்க்கையிலும் நேற்று நடந்ததற்காக வருந்துவதும் இனிவரப் போவதற்காகக் கவலைப்படுவதும் தேவையற்றவை. அதனால் இந்தக் கணம் வாழாமல் தவறிப்போய்விடக்கூடும். நாம் வாழவேண்டுமேல் கவலைகளுக்கும் கற்பனைகளுக்கும் இடம் கொடாமல், அந்தந்தக் கணத்தை நிறைவுபெற வாழ்ந்து, நுகர்ந்து, செயற்பட்டு, இயங்கிக் கொண்டே இருக்க வேண்டும். அத்தகைய வாழ்க்கையில் கவலைப்படுவதற்கு இடம் இல்லை; நேரமும் இல்லை.

இன்று நாம் வாழும் இந்தக் கணப்பொழுதுதான் முக்கியம். பிறயாவும் இரண்டாம் பக்கமே சார்வன. வாழ்க்கையை முழுமைபெற வாழ நினைப்பவர்களைக் கவலைகள் அணுகா. அணுகுவனவும் தாம்தாம் சோர்வுற்று நீங்குமே தவிர அவர் சோர்வடையார்.

இத்தகைய நல்வாழ்வுக்கு இங்கு காட்டிய குறள்களும் இவற்றோடு தொடர்புடையனவும் மந்திர ஆற்றல் போல் மிகுதியும் பயன்படும்.

ஒரு குடும்பத்தில் மூத்தவனாய்ப் பிறந்தவன், தன் தந்தை இறந்த பிற்பாடு, தன் தாய், தம்பியர், தங்கையர் எனச் சார்ந்திருப்போரைத் தாங்க நேர்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். தளர்ந்த குடும்பத்தைத் தூக்கி நிறுத்துவது என்ற கடமையுணர்ச்சியில் அவன் மனம் அழுந்தப் பதிந்துவிடுமானால் பிறகு எந்தத் துன்பத்தையும் அம்மனம் எதிர்கொள்ள ஆயத்தமாகிவிடும். இது நாம் உலகியலில், அரிதாகவேனும் கண்ணாற் காண்பதே. அவன் செயல்முயற்சிகளிலேயே இன்பம் காண்பான்; சுகமாய்ப் பொழுது போக்கும் இன்பம் அவனுக்கு இன்பமாகப் படாது. வியர்க்க விறுவிறுக்க வேலை செய்வதிலே காணுமின்பத்தை அவன் காற்றாடியின் கீழே சாய்வு நாற்காலியில் கிடந்து காணமாட்டான்.

துன்பத்தை பெருமிதத்துடன் எதிர்கொண்டால் தோல்விப் பாதையில் ஒரு திருப்புமுனை ஏற்படும்; வாடிய தோட்டத்தில் ஒரு மறுமலர்ச்சி அலைவீசும். மலை போல வந்தது பனி போல விலகக் கண்டு நீங்களே வியப்படைவீர்கள்! 'ஒளிமயமான நிகழ்காலம் உள்ளத்தில் இருக்கிறது'- அதனால் ஒளிமயமான எதிர்காலம் உள்ளத்தில் தெரிகிறது! என உங்கள் இதழ்கள், பாவரசர் கண்ணதாசன் பாடலை அசை போடத் தொடங்கிவிடும். அதிலேயே மனம் ஈடுபட ஈடுபட, நீலத்திரைக் கடல்போலக் குறுக்கே கிடந்த இடையூறாம் கடல் மேலே, நம்பிக்கை என்ற ஒளிக்கீற்றுக்கள் வானைக் கிழித்துக் கொண்டு வெளிப்படும்.

உங்கள் வாழ்வு விடியும்; வாழ்க்கை நாளில் தோன்றிய இருள் நீங்கி எழுச்சி தரும்! எழுஞாயிறு எழுந்து புறப்பட்டு வரும்! 'பொழுது புலர்ந்தது யாம் செய்த தவத்தால்' என்று பாடிக் கொண்டே, மீட்டும் கடமைச் செயல் முயற்சிகளில் ஈடுபடத் தொடங்கிவிடுவீர்கள்!

# 5. தன்முயற்சித் தவம்

தவத்தை துறவுத்தவம், இல்லறத்தவம் என இரண்டாகப் பகுக்கின்றார் திருவள்ளுவர். இல்லறத் தவம் என்பது முயற்சித் தவம். துறவுத்தவம் பற்றி நேரில் கண்டதில்லை. புராணங்களில் வருவது அது. இல்லற முயற்சித்தவம் நேரில், நடைமுறையில் காண்பது. திருவள்ளுவர் அதனையே புதிய நோக்கில் விரித்துரைக்கிறார்.

1. உற்றநோய் நோன்றல் உயிர்க்கு உறுகண் செய்யாமை
அற்றே தவத்திற்கு உரு (261)

2. தவமும் தவமுடையார்க்கு ஆகும் அவம்அதனை
அஃதிலார் மேற் கொள்வது. (265)

3. துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார் கொல்
மற்றையவர்கள் தவம் (263)

4. ஒன்னார்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும்
எண்ணின் தவத்தால் வரும். (264)

5. வேண்டிய வேண்டியாங்கு எய்தலால் செய்தவம்
ஈண்டு முயலப் படும் (265)

6. தவம் செய்வார் தங்கருமம் செய்வார்மற் றல்லார்
அவம் செய்வார் ஆசையுட் பட்டு (266)

7. சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்
சுடச்சுட நோற்கிற்பவர்க்கு (267)

8. தன்னுயிர் தான்அறப் பெற்றானை ஏனைய
மன்னுயிர் எல்லாம் தொழும் (268)

9. கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைபட்டவர்க்கு (269)

10. இலர் பலராகிய காரணம் நோற்பார்
சிலர் பலர் நோலா தவர் (270)

1. தானம் தவம் இரண்டும் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின் (19)

2. மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு
தானம்செய் வாரின் தலை (295)

## தன்முயற்சித் தவம்

வாழ்க்கையில் முன்னேற வேண்டுமென்றால் தவம் செய்ய வேண்டும்.

அது என்ன தவம்?

தவம் பற்றிய தோற்றம் ஒன்று (Image) மக்கள் அனைவரின் மனத்திலும் பதிந்துளது. தாமரை ஆசனத்தில், காலை மடக்கி அமர்ந்து, அன்னம் தண்ணீரைக் கருதாமல் ஒரே நினைவாக, நினைத்ததை அடையும் வரை, தியானத்தில் (மன ஓர்மையுடன்) இருத்தல். புலன்களை அடக்கி, மனத்தை வெளியே மேயவிடாமல், உள்முகமாகத் திருப்பிக் கண்மூடி இருத்தல். வெளியே உடலை ஏதும் துன்புறுத்தினும் அல்லது சந்தனம் பூசினும் சலனப்படாத மனநிலை வேண்டும்.

ஒரே எண்ணம், ஒரே குறிக்கோள், அதற்காக அனைத்தையும் துறத்தல் – இவை எல்லாம் தவ முயற்சிகள் எனப்படும்.

புராணங்களில் வரும் தவம் இதுதான். தவம் போரில் வெற்றி பெற, எதிரியை அழிக்க, இறைவனிடம் புதிய புதிய வரங்கள் பெற, ஆயுதங்கள் பெற என்றிவ்வாறு செய்ததாக வரும். அருச்சுனன் போரில் வெல்ல, புதிய பெரிய ஆயுதம் பெற, போரிலிருந்து விலகி, தவம் செய்யப் போய் இறைவன்முன் தவமிருந்து, பாதுபதாஸ்த்திரம் என்ற முறியடிக்க முடியாத அம்பினைப் பெற்று வந்ததாகச் சொல்லப்படுகிறது.

இப்படி நூறுவகை. இவை கதையில் வருவன, கற்பனைகள். உலக நடைமுறையில், ஒரு குறிக்கோளுக்காக முழுவதும் தன்னை ஈடுபடுத்திக் கொள்வதைக் குறிக்க வந்த தொன்மங்கள்.

உலகில் இதன் எதிரொலியைப் பார்க்கலாம். 'இது தவமிருந்து பெற்ற பிள்ளை' என்பார்கள். பிள்ளை இல்லாதவன் அதன் நினைவாகவே இருந்து நோன்பிருந்து இறை வழிபாடுகளில் ஈடுபட்டுக் காத்திருந்து பெற்ற பிள்ளை என்பது கருத்து.

சிலர் எதிர்பாராது செல்வத்தைப் பெறுவார்கள். சிலருக்குப் பதவிகள் தேடிவரும். இவன் பூர்வ புண்ணியம் செய்தவன், முற்பிறப்பில் நல்வினைகளை மேற்கொண்டு வாழ்ந்தவன். அதன் பயனாக முயற்சியின்றியே நன்மைகளைப் பெற்றான் என்பர். வடநூல்கள் மட்டுமன்றி, தமிழர்களுக்கும் இந் நம்பிக்கை இருக்கிறது. முயன்று பாடுபட்டு உழன்று முன்னேறியவனையும் சிலர் இவ்வாறு சொல்வர்.

முயற்சியின்றி வருவன நிலைப்பதில்லை; முயன்று அடைபவனே நிலையான நன்மை பெறுவான்.

திருவள்ளுவர் இவ்உலகியற்கையை மறுக்காமல், புதிய சிந்தனையைத் தருகிறார். அவருடைய இயல்பு அது, மடைமாற்றுதல் என்பர். பழைய நம்பிக்கைகளையே புதிய முயற்சிக்கு அடித்தளம் ஆக்கி விடுகிறார்.

**அறிவிலான் நெஞ்சுவந்து ஈதல் பிறிதுயாதும்**
**இல்லை பெறுவான் தவம் (842)**

கருமி, செல்வத்தின் பயனை அறியாதவன் யாருக்கும் எதையும் கொடுக்க மாட்டான். எச்சிற் கையால் காக்கையை விரட்டமாட்டான். சோற்றுப் பருக்கைகள் சில தவறிப்போய், காக்கை முதலியவற்றுக்குப் பயன்படுமாம். அத்தகைய அறிவிலி, மனமுவந்து, ஒருவனுக்கு அவன் கேட்டதை ஈகின்றான் என்றால் அது ஆச்சரியமே. அதற்கான காரணம் எதுவும் இல்லை. பெறுகின்றவன் செய்த தவம் அது, புண்ணியம் அது, முன்பு செய்த நல்வினைப்பயன் அது.

கொடுப்பவனுக்கு மட்டுமன்று, பெறுபவனுக்கும் நல்ல நேரம் வேண்டுமாம். உலகில் பார்க்கலாம், சிலர் தொடர்ந்து நன்மைகளை அடைவார்கள், சிலருக்குத் தொடர்ந்து எதுவும் கிடைப்பதில்லை.

இதற்கு முன்செய்த புண்ணியம் மட்டுமன்றி, மிக நுட்பாய் ஆராய்ந்து உண்மையான காரணங்களையும் கண்டுகொள்ள வேண்டும். ஒரு காரியத்தைத் தொடங்கும் முன் அது பற்றி அனைத்தையும் சிந்தித்து முடிவு செய்ய வேண்டும். ஒரு பெருஞ்செல்வர் சொன்னார்! “செல்வம் சேர்ப்பது கடினமன்று. அது மிக எளிதானது. ஊற்று இருக்கும் இடம் தேடிக் கிணறு தோண்ட வேண்டும். பாறாங்கல் பக்கம் தோண்டத் தொடங்கி, ஐயோ! நானூறு அடி தோண்டியும் ஒரு சொட்டுத் தண்ணீர் கூடக் கிடைக்க வில்லையே! என வருந்துவது தவறு” என்றார் அவர்.

**ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று**
**போற்றினும் பொத்துப் படும் (468)**

வெற்றி தரும் சூழல் அறிந்து, இடமும் காலமும் அறிந்து, அந்நெறியில் முயலவேண்டும். அல்லாமல் தவறான சூழலில் மிகமிகக் கடினமாக உழைத்துப் பயன் காணாது வருந்துவதையே பலரிடம் காண்கின்றோம். பலர் துணைக்கு வந்து எல்லோரும் இரவு பகலாக உழைத்தாலும் பயன் விளையாது. காரியம் கெட்டுப் போவது கண்டு,

வருந்திப் புலம்புவதிற் பயனில்லை. பணம் தரும் வழியைக் கண்டுபிடிக்க வேண்டும்.

ஒரு தெருவோரக் கடை. பெண்களுக்கான பொருள்கள் விற்பனை. முருகன் கடைக்கு நாலுகடை தள்ளி அதே பொருள்கள் உள்ள கடை. எதிர்பாராமல் ஓரிருவர் அந்தக் கடைமுன் போக, பலரும் அங்கே போனார்கள். முருகனுக்குப் பெரும் ஏமாற்றம். ஒவ்வொரு நாளும் இதை வெற்றி கொள்வது எப்படி என்ற யோசனையில் ஆழ்ந்தான்.

வெயில் காலம் தொடங்கியது. தன் கடையில் குளிர்ந்த தண்ணீரை வைத்து வருவோர்க்குக் கொடுத்தான். பலர் வரத் தொடங்கினார்கள். பிறகு நீர் மோர் என்று குறைந்த விலைக்குக் கொடுத்தான். முதலில் சிலராக வந்தவர் பின்னே, பலரும் கூட்டமாக வரத் தொடங்கினர். அவர்கள் நீரும் மோரும் மட்டுமா பெற்றுச் சென்றார்கள். கடையில் உள்ள பிற பொருள்களை வாங்கத் தொடங்கினார்கள். கடை வளர்ந்தது. அவனும் வளர்ந்தான்.

இதைத்தான் திருவள்ளுவர் நயமாகக் கூறினார்.

**ஒல்லும் வாய் எல்லாம் வினைநன்றே ஒல்லாக்கால்**
**செல்லும்வாய் நோக்கிச் செயல் (673)**

“உன்னால் இயன்ற வரை நீ நினைக்கிற வழியில் நட. அது பயனளிக்க வில்லையென்றால், எந்த வழி பயன்தருமோ அதற்கு நீ மாறிக்கொள்! வெற்றி பெற அதுதான் வழி!”

திருக்குறளில் தவம் என்ற அதிகாரம் முற்றிலும் புதிய சிந்தனை. உலகியல் வழியில் அறம் சொல்பவர் திருவள்ளுவர். “அவன் செய்த தவம் இப்படிச் செல்வத்தை அள்ளிக் கொட்டுகிறது, என்று கூறுகிறார்கள். எப்படியும் நினைத்ததை அடைந்தே தீருவது என்று, இடைவிடாது முயல்கிறான்” என்றும் சொல்கிறார்கள்.

முன் செய்ததவமா? முயற்சித் தவமா? திருவள்ளுவர் முயற்சித் தவத்திற்கே முன்னுரிமை கொடுக்கிறார். முன்னது கற்பனை; பின்னது

நடைமுறை. மிக நுட்பமாய் ஆராய்ந்தால், முன்னதை எண்ண வைப்பதே, பின்னதுதான். பசி நோக்காது, கண் துஞ்சாது, கருமமே கண்ணாக இருப்பவர்கள் ஒரு நாளும் தோற்கமாட்டார்கள். பொறுமை வேண்டும் முயன்று கொண்டே இருக்க வேண்டும்; உழைத்தபடி இருக்க வேண்டும். முதலில் பயனில்லை போல் தோன்றினும், 'மெய் வருத்தக் கூலி தரும்'. அது இயற்கை நியதி. எதிர்பாராத நேரத்தில், அது பல மடங்காய்ப் பயன் தரும். அதனால்தான் 'பயனை நோக்காது, செயலில் ஈடுபடுங்கள்' என்று கூறுகின்றனர்.

என் நண்பர் 'சாதகம்' பார்ப்பதில் பழக்கமுடையவர். அவரிடம் ஒரு தொழிலைத் தொடங்குங்கள் என்றால், "இப்போது கிரகம் சரியில்லை; ஆறு மாதம் போக வேண்டும் என்பார். அவ்வாறு ஆறு மாதம் கழித்துக் கேட்டால், இப்போது சென்மச் சனி தொடங்குகிறது. எதைத் தொடங்கினாலும் தோல்வியில் முடியும். சென்மச்சனி கழிந்த பிற்பாடு பார்க்கலாம்" என்பார். இவ்வாறே சொல்லிச் சொல்லிக் காலம் கடந்தி, இறுதி வரை முயற்சியின்றி, குடும்பத்தை வறுமையில் வாட விட்டுக் காலமானார்.

மரம் வைத்தவன், பக்குவமான நேரம் வரும் வரை கனிக்காகக் காத்திருக்க வேண்டும். மரத்தைச் செழிப்புடன் வளர்த்தபடி இருந்தால், உரிய காலத்தில் கனி கிடைக்கும்.

சாதகத்தை நம்பி இருப்பது முயற்சியின்மைக்குக் கூறும் சமாதானம். திருவள்ளுவர் முன் செய்த தவத்தையும் முயற்சித் தவத்தையும் பற்றி ஒரு குறளில் கூறுகிறார்.

**தவமும் தவமுடையார்க்கு ஆகும், அவம் அதனை**
**அஃதிலார் மேற் கொள்வது** (262)

முயற்சித் தவமுடையவர்களே, அத்துறவுத்தவத்தையும் தம் கடமையாகக் கருதி, அதனையும் முழுமையாக ஈடுபட்டுச் செய்வார்கள். அல்லாமல் நடப்பன பலவும் போலித்தவமே. தன்முயற்சி இல்லாதார் தவமுயற்சி செய்வதாகக் கூறுதை வள்ளுவர் 'அவம்' – வீண் என்று கூறுகின்றார்.

திருவள்ளுவர் இவ்வுலக வாழ்வை மையமிட்டே அறம் கூறுபவர். 'மேலுலகம் இல்லெனினும் ஈதலே நன்று' என்பவர் அவர். நீங்கள் சொல்கிற தவமும் நான் சொல்கிற தவத்தினால் ஆவதேயாம். அஃதல்லாமல் வேடமிட்டுத்திரிவன எல்லாம் அவம். அவற்றால் பயனில்லை என்று உணர்த்துகிறார்.

தவம் என்ற அதிகாரத்தைத் தொடங்கும் போதே அவர் தாம் சொல்கிற 'தவம்' வேறுபட்டது, தனித்தன்மை உடையது என உணர்த்துகின்றார்.

**உற்றநோய் நோன்றல் உயிர்க்கு உறுகண் செய்யாமை**
**அற்றே தவத்திற்கு உரு (261)**

'தவத்திற்கு உரு' என்பது சிந்திக்கத்தக்கது. 'தவம்' என்றதும் புராணங்களும் ஆன்மிக வாதிகள் என்போரும் நம் கண்முன் நிறுத்துவது கண்மூடித் தியானித்துச் செய்யும் தவத்தோற்றம் ஆகும். திருவள்ளுவர் அவை அல்ல தாம் சொல்வது என உணர்த்தவே 'அற்றே' எனத் தேற்றேகாரம் கொடுத்துக் கூறுகிறார்.

முயற்சித் தவத்தில் பல துன்பங்கள் வரலாம்; தடைகள் ஏற்படலாம்; சோர்வு தட்டலாம். அவற்றைப் பொறுக்கும் அதுவே தவம். நோன்பு, நோன்மை, நோற்றல் முழுவதும் பொறுத்தல் எனப் பொருள் காண வேண்டும்.

பலர் பொறுமை இழப்பர், தடுமாறுவர். 'அரைக் கிணறு தாண்டினால்' உள்ளே விழ வேண்டியதுதான். இறுதிவரை பொறுமை காப்பவனே வெற்றி பெறுவான். நோய் – துன்பம். உற்ற நோய் – வந்த துன்பம், வருந்துன்பம் எனலாம்.

நோன்றல் – விரும்பித்தாங்கிக் கொள்ளுதல். தக்க காலம் வரும் வரை பொறுத்திருத்தல். கடை வைத்ததும் இலாபம் வந்துவிடாது. ஒரு தொழிலைத் தொடங்கியதும் செல்வம் வந்து குவிந்து விடாது. ஒரு கடையை

வைத்தால் அதைப் பழக்கப்படுத்த, பலரும் அறியச் செய்யச் சில மாதங்களாகும். முதலில் இழப்புக்களே எதிர்ப்படும். அது மாறி நல்ல பக்கம் திரும்ப, முயன்றபடி இருக்க வேண்டும். ஒரு முயற்சியில் ஏற்படும் தடை, இடர், துன்பம், பிறர் கூறும் ஏளனம் எல்லாவற்றையும் நஞ்சை உண்ட இறைவனைப் போல் ஏற்று, அடக்கிக் கொள்ள வேண்டும். பிறகு அமிழ்தம் போல் வெற்றி கிடைக்கும்.

உயிர்க்கு உறுகண் செய்யாமை - சிற்றெறும்பு போலும், எவ்வுயிர்க்கும் துன்பம் செய்யாமைதான் தவம். தனக்கு வருதுன்பத்தைப் பொறுத்துக் கொள்ளுதலும் பிறர்க்குத்துன்பம் செய்யாமையும் என இதை விளக்க வேண்டும்.

'உயிர்க்கு' என்பதில் மனிதர்களுட்பட அனைத்துயிர்களும் அடங்கும். 'உறுகண் - கடுந்துன்பங்கள். பிறர் எவரையும் அல்லது எதையும் வருத்தாதிருத்தல் என்பது ஒரு நோன்பாகும்.

வள்ளுவர் காலச்சூழலும் இங்கே நினைவுக்கு வருகிறது. வைதிக வேள்விகள் மலிந்து கிடந்த காலம் அது. வேள்வி என்று உயிரினங்கள் நெருப்பில் போடப்பட்டன. தவத்திற்கும் வேள்விக்கும் தொடர்புளதாக அறிகிறோம். துறவு, தவம் என்ற பெயரால் வேள்விகளை மேற்கொண்டு, உயிரினங்களைக் கொல்லாமல் காப்பது தவம் ஆகும். 'உயிர்க்கு உறுகண் செய்யாமை' என்ற தொடர் இவ்வாறு கொள்ளவும் இடம் தருகிறது.

மக்களின் தன் முன்னேற்றச் சிந்தனைக்கு, தடையாய் இருப்பன இங்குள்ள மூடநம்பிக்கைகள். 'எல்லாம் அவன் செயல்', 'அவனன்றி அணுவும் அசையாது', 'எதுவும் நம் கையில் இல்லை' என்பன போன்ற மனநிலைகள் வளர்க்கப்படுவதால் இறைவன் தங்களுக்குத் தந்தவற்றைக் கூடப் பயன்படுத்தாமல் சோம்பேறி ஆகிவிடுகிறார்கள்.

மேலை நாடுகளில் இந்தத் தடைகள் இல்லை.

'தவத்திற்கு உரு' - என்பது, நாள் நடைமுறையில் காணாத தவவேடத்தை மடை மாற்றி விடுகிறது. வேறு இரண்டு இடங்களில் அந்தக் கடுந்தவம் என்பதை மறுதலித்துக் கீழிறக்கி விடுகிறார்.

தானம் தவமிரண்டும் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின் (19)

'தானம்' என்ற சொல் புரோகிதப் பார்ப்பனருக்குக் கொடுப்பதைக் குறிக்கும். ஈகை, கொடை என்பனவே பொதுவானவை.

தவம் - பிறர் கூறும் கடுந்தவம். இவை இரண்டும் கூட மழை பொழிந்தால்தான் நடக்கும். காய், கனி, கிழங்குகளைத்தின்று, தவம் மேற்கொள்ளலாம் என்றாலும் அதற்கும் மழை வேண்டுமே. இன்றேல் எதுவும் கிடைக்காத போது, தவம் செய்வதும் இயலாததாகும்.

வடநூற் கருத்தாகிய தவம், துறவு பற்றிச் சொல்லி, 'அடடே! நாம் தவம் செய்வது நடக்கிற காரியமா?' என்று, வெறும் பேச்சுடன் நின்று விடுபவரே பலர். அவர்களுக்கு, அந்தத்தவம் பயன்படாது, அது கற்பனைக் கதைகளில் வருவதோடு சரி, மற்றபடி நடைமுறைக்கு உதவாது. தவம் என்பது கடும் முயற்சி, உழைப்பு, துன்பங்களைப் பொறுத்து குறிக்கோளையே எண்ணி முன்னேறுவது எனத் திருவள்ளுவர் மக்களை நல்வழிக்கித் திருப்புகிறார்.

மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு
தானம்செய் வாரின் தலை (295)

மனச்சான்றுக்கு மாறுபடாமல், வாய்மையையே பேசி ஒருவன் வாழ்வானாயின், அதுவே தவம், தானம் எனப் பேசித்திரிவாரைவிட மேலானதாகும். உண்மையான நடைமுறை வாழ்க்கையைப் பார். அதில் உண்மை, மெய்ம்மை இவற்றுக்கு அடிப்படையாய் வெளிப்படும் வாய்மையைக் கடைப்பிடிப்பது ஒரு நோன்பாகும். ஒருவன் வாய்மையைக்

கடைப்பிடித்து வாழ்வதென்பதிலுள்ள இடர்ப்பாடுகள், அவ்வாறு வாழ்வார்க்குத்தான் தெரியும். சிறிதும் மாறாது வாய்மையுடன் வாழ்வது ஒரு தவமே, நோன்பே.

இவ்வாறு மாந்தர் வெறும் கற்பனைகளில் உழன்று சோம்பேறிகளாய் ஆகிவிடாமல், அன்றாட நடைமுறைக்கு, கண்கண்ட வாழ்வுக்கு இழுத்து வந்து, கடுமையாய் உழை, முயன்றபடி நோன்புடன் வாழ முயல்வாயாக! இதுவே தவம். நீ அந்தத் துறவுத்தவத்தினால் என்ன என்ன அடையலாம் என எண்ணுகிறாயோ, அவை அனைத்தையும் இந்த உலக வாழ்வுத்தவத்தினால் அடையலாம் என வழி காட்டுகிறார் திருவள்ளுவர்.

இத்தன்முயற்சித் தவத்தினால், ஒருவன் விரும்பியவற்றை விரும்பியவாறே அடைய முடியும்.

**வேண்டிய வேண்டியாங்கு எய்தலால் செய்தவம்**
**ஈண்டு முயலப் படும்** (265)

செய்தவம் - உலகில் முயற்சியால் செய்யும் தவம். ஈண்டு - இல்லறம். இல்லற வாழ்வில், தவம் மேற்கொண்டு, இடைவிடாது உழைப்பவன் எல்லா நன்மைகளையும் விரும்பியபடி அடைய முடியும். துறவிலன்று, இல்லற வாழ்வில் செய்யும் தவம் இது.

துறவுத்தவம் பற்றிப் பேசுபவர்கள், 'அதனால், வேண்டியன எல்லாம் பெறலாம்' என்பர். அவ்வாறு நேரில் நடப்பதை உலகில் எங்கும் காணவில்லை. அதனால் உழைப்பினால் மட்டுமே, விரும்பியவற்றை அடையலாம் என்று மக்களை நற்சிந்தனைக்குத் திருப்புகிறார். 'ஈண்டு முயலப்படும்' -. கண்கண்ட வாழ்வில் இது நடைமுறையில் முயலப்படும் என்பது கருத்து.

**சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்**
**சுடச்சுட நோற்கிற் பவர்க்கு** (267)

மனித வாழ்வில் துன்பம் பெரிதும் தொடர்கதையாகும். துன்பத்தையும் இன்பமெனக் கருதித்தான் வாழ வேண்டியுளது. ‘அடுக்கிவரினும்’ என்றாற் போல அவை வரவர, பொறுத்துப் போதல் வேண்டும். தங்கத்தை மூசு போட்டுச் சுடச்சுட அது தூசும் மாசும் நீங்கி ஒளிவிட்டுத்திகழும். அது போல, வாழ்க்கையில் எதிர்ப்படும் துன்பங்கள் தன்னை வருத்தலாம். அதற்காகத்தளராது பொறுத்துப் போனால், பிறகு இன்பம் தொடரும். தவம் –நோன்பு. நோற்றல் – துன்பத்தைத் தாங்கிக் கொள்ளுதல்.

சிலருக்கு எல்லாம் துன்பமாய்த் தோன்றும். சோம்பேறிகள் எதனையும் தாங்காது, பிறரை எதிர்பார்த்து வாழ்ந்து, இறுதியில் தாங்கவொண்ணாத்துயரத்தில் உழல்வர்.

துன்பத்தை இன்பமாய் மாற்றிக் கொள்ளுதல் ஒரு இரசவாதம். அதை முடியும் என நம்பி முயலவேண்டும்.

பள்ளிப் படியில் துன்பம், குடும்பப் பொறுப்பில் துன்பம், தொழிலில் ஈடுபடுவதில் துன்பம் என்று தொடர்வதைப் பொறுமையுடன் கடந்து, இன்ப எல்லையை அடைய வேண்டும்.

**துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி**
**இன்பம் பயக்கும் வினை** (669)

கடுந்துன்பப்பட்டுத்தான் விஞ்ஞானிகள் பெரும் வெற்றி காணுகிறார்கள். முயற்சித்துன்பங்களை யாரும் வெறுப்பதில்லை. அதுவே அவர்களுக்குத் தவம்.

**இலர்பல ராகிப் காரணம் நோற்பார்**
**சிலர் பலர் நோலாதவர்** (270)

திருவள்ளுவர் தாம் விளக்கிய தவம் பற்றிய விளக்கத்தில் இதனை முத்தாய்ப்பாக வைக்கிறார்.

வள்ளுவர் சொல்கிற தவம் இவ்வுலகத்தவம், இல்லறத்தவம் என்பதை இது உறுதிப்படுத்துகிறது. உலகில் பலர் ஏன் வறுமையில் வாடுகிறார்கள். அவர்கள் தங்கள் முயற்சிகளைத் தவமாகச் செய்யவில்லை. முயற்சியின்மையே வறுமைக்குக் காரணம் என்று கூறுவதன் நுட்பம் உணரத்தக்கது. வேறு வழியில்லையேல் பெட்டிக்கடை வைத்தாவது ஒருவன் பிழைத்துக் கொள்வான்.

நோற்பார் – எம்முயற்சியையும் தவமாக மேற்கொள்பவர். நோன்பு – நோற்றல் என்பது பொறுத்துக் கொள்ளுதல் என்றே பொருள்படும்.

'பிலிம் இந்தியா' என்ற இதழில், ஆசிரியர் பாபுராவ் பட்டேலிடம் வினாவிடைப்பகுதியில் ஒருவர், ஒரு வேலையும் கிடைக்காதவன் என்ன ஆவான் என்று கேட்டிருந்தார். அதற்கு அவர் முதலாளி ஆவான் என்று விடை கூறினார். இது முயற்சித்தவம் ஒருவனிடம் இருக்குமேல் வாழ்வு வெற்றி பெற்றே தீரும் என்ற நம்பிக்கையைக் காட்டுகிறது.

திருவள்ளுவரைப் பொறுத்த வரை துறவுத் தவத்தில் பெறுகிற துன்பத்தைவிட, இல்லறத் தவத்தில் பெறுகிற துன்பங்களே மிகுதி. அது தான் வீடு பேறடையச் செய்வது உயர்வேயாயினும் அது தன்னை மட்டுமே மைய மிட்டது. இல்லறத்தவம் தனக்கென வாழாது பிறர்க்கென வாழும் உயர்வையும் அதற்கேற்பத் தன்னை வளர்த்துக் கொள்ளுதலையும் குறிக்கோளாகக் கொண்டது.

அதிட்டம் பற்றிய நம்பிக்கை முழுஉண்மை ஆகாது. அதில் சிறிது உண்மையிருந்தாலும். நல்வினைப்பயனால் கை கூடியது என எண்ணினாலும் அதனையே நினைத்து ஏங்குவது தவறு. அதிட்டமே இல்லை என்றாலும், அதை வரவழைக்கும் ஆற்றல் இடைவிடாத முயற்சித் துன்பத்திற்கு உண்டு.

அவன் எளிதில் பணக்காரனாகி விட்டான், இவன் எளிதில் வெற்றி பெற்றுவிட்டான் என்று சொல்லித் தன் முயற்சியைக் கைவிடல் தவறு. தனக்குரியதைத் தெய்வமும் தடுக்காது.

**தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்**
**மெய்வருத்தக் கூலி தரும்** (619)

வள்ளுவர் போல மனிதரை முன்னேற்ற ஊக்கப்படுத்தும் ஞானிகள் உலகில் அரிதினும் அரியர். மிகக்கீழ்நிலையில் இருப்பவனையும் தூக்கிவிடும் மந்திரக்குறள்களைத் தந்தவர் அவர்.

திருக்குறளைத் தமிழ்மறை என்றும் மந்திரங்கள் என்றும் கூறுவனவற்றை, இன்றும் தமிழர் யாரும் நம்பிப் படிக்கவில்லை.

திருக்குறளுக்கு உரைகாண்பது வேறு. அதை ஆராய்வதும் ஆய்வுரை எழுதுவதும் சொற்பொழிவதும் வேறு.

அவை மந்திரங்கள் என்று ஓதப்பட வேண்டும். திரும்பத் திரும்பப் படிப்பதே ஓதுவதாகும். அவற்றிலுள்ள சொற்கள் ஆற்றலுடையவை; பயனை விளைவிக்கக் கூடியவை.

திருவள்ளுவர்,

**நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து**
**மறைமொழி காட்டி விடும்** (28)

என்றார். பிறவாறு மந்திரங்களை ஓதி அழிப்பதும் ஆக்குவதும் செய்வன ஒருவித நம்பிக்கைப்பாற்பட்டன. அவை பெரிதும் மூடநம்பிக்கைகளே. அதனால் தான் மறைமொழி தானே மந்திரம் என்று தேற்றேகாரம் கொடுத்து அடித்துச் சொல்கிறார்.

நோற்பவர் செல்வராவார்; நோலாதவர் வறியராவார். அதாவது மிக அழுத்தமாய் முயன்று தேட வேண்டுமே தவிர, தொடங்கும் போதே அதிட்டத்தை நம்பித் தொடங்கக் கூடாது.

ஒருவர் செல்வரான கதையை விவரித்தார். ஒரே ஊர், ஒரே தொழில், அதில் பலரும் ஈடுபட்டனர். இவர் தொடர்புடையவர்களிடம் "உங்களிடம்

பொருள்களை வாங்கி விற்கிறோம். விற்ற பின்பே, கணக்குப் பார்த்து உங்களுக்குச் செலுத்த வேண்டியதைத் தருகிறோம். நீங்களும் வியாபாரம் நடந்தால் போதும் என்று பொறுமையாய்க் காத்திருந்து உரிய பணத்தைப் பெற்றுக் கொள்கிறீர்கள். இது எனக்கு ஆமை வேக வியாபாரமாய்ப் படுகிறது. நான் இதை விரிவுபடுத்துவும், விரைவுபடுத்தவும் விழைகிறேன். உங்களிடம் பொருள்களைப் பெற்றதும் உடனுக்குடன் உரிய பணத்தைத் தந்துவிடுகிறேன். எனக்குக் கூடுதலாகப் பொருள்களை அனுப்புங்கள்; அது போல் எனக்குத் தரும் கழிவு தொகைகளையும் கூடுதலாகத் தாருங்கள்" என்று கூறி, அதன்படி நடந்து, விரைவில் பெருஞ்செல்வராகி விட்டார். ஒரு சிறு தந்திரம் அவரைப் பெரும் செல்வராக்கி விட்டது.

தயிர் கடைவது துன்பம்; வெண்ணெய் காண்பது இன்பம்,
பயிரிடுவது துன்பம், அறுவடை காண்பது இன்பம்,
படிப்பது துன்பம்; பட்டம் பெறுவது இன்பம்.

ஒன்றைப் பெற முயல்வது துன்பம் பெற்று விட்டால் இன்பம். எனவேதான் முயற்சித் துன்பங்கள் என்பன துன்பங்கள் அல்ல; அவை இன்பக்கோட்டைக்கு அழைத்துச் செல்லும் வழித் தடங்கள்.

திருக்குறளில் ஊக்கமுடைமை, மடியின்மை, ஆள்வினை யுடைமை, இடுக்கண் அழியாமை என்னும் நான்கு அதிகாரங்களும் இத்தவம் பற்றிய அதிகாரத்தின் அடிப்படைகளே. குடிசெயல்வகை என்பது ஒரு தவமே.

துன்பப்படுவதையும் இன்பமென உணருமாறு அமையும் சூழல்களையே திருவள்ளுவர் எடுத்தியம்புகிறார்.

மாந்தனை வெற்றியை நோக்கிப் பயணம் செய்யுமாறு பக்குவப்படுத்துவதில், அவரைப் போன்ற மனித நேயரைக் காண்பது அரிது.

அதனால் சொல்லுகிறோம். திருக்குறள்கள் மந்திரங்கள். அவற்றைப் படிக்கப்படிக்க நமக்குச் செல்வம் சேரும், வாழ்க்கை செழிப்புறும்.

பொருள் விளங்காத மந்திரங்கள், பரிசுச் சீட்டுப்போலப் பயன்தரக் கூடும். எதிர்பாராது வெற்றி தரும் அவை நிலையானவை அல்ல. திருக்குறள் போன்ற, பொருள் விளங்கும் மந்திரங்களே நிலையான வெற்றி தரும் மந்திரமாகும். அதனால் அதைப் பலமுறை திரும்பத் திரும்ப ஓத வேண்டும். அவ்வாறு ஓதுபவரின் மனம் உரம் பெறும்; அவருக்கு அது வழிகாட்டும்; வெற்றியைத் தந்து மகிழ்ச்சியைப் பெருக்கும்.

இதுகாறும் நாம் தமிழ் மறையாம் திருக்குறளை இவ்வாறு அவை தமிழ் மந்திரங்களென ஓதினோமில்லை. பிள்ளைகள் குறளை ஒப்பித்தால் போதாது. அது ஒரு மனப்பயிற்சி; அவ்வளவே. அதைப் பலமுறை ஓதி ஓதி, மனஉரம் பெறும் வகை செய்ய வேண்டும். மந்திர ஆற்றல் அப்போதுதான் வெளிப்படும்.

தமிழ் மக்களிடையே புதுவதாக, முழக்கவாசகங்களை எங்கும் பரப்புதல் வேண்டும்.

திருக்குறள் படித்தால் செல்வம் சேரும்
திருக்குறள் படித்தால் துன்பம் விலகும்
திருக்குறள் ஓதினால் வாழ்க்கை செழிக்கும்
தேவாரம் படித்தால் திருமணம் நடக்கும்
திருமுறை படித்தால் பிள்ளைகள் பிறக்கும்
தமிழ்ப் பக்திப் பதிகங்களைப் படியுங்கள்
பயபக்தியுடன் ஓதுங்கள்
தோசங்கள் நீங்கும்! தீமைகள் விலகும்!
நல்லன எல்லாம் தகும், நமது திருமுறைகள்!

இவ்வாறு நாடு முழுவதும் எழுச்சி ஊட்டுங்கள்; நிச்சயம் நன்மைகள் விளையும். ஒருவர் நோய்வாய்ப் பட்டார். எல்லோரும் கையை விரித்து விட்டனர். முடிந்தது கதை என்றனர். அவரை, சடங்கு செய்து வழியனுப்பவும் தொடங்கினர். அந்நிலையில் வெளிநாடு போயிருந்த அவர் மகன் வந்தான். அவர் மேல் விழுந்து, அப்பா, அப்பா என்று அழுதான். தந்தையின் வலது கால் பெருவிறல் சிறிது அசைவது கண்டான்.

உடனே மருத்துவமனைக்குக் கொண்டு போய், முறையான சிகிச்சை அளிக்கச் செய்தான். தந்தையைக் காப்பாற்றி விட்டான். உலகம் வியந்தது.

**கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்**
**ஆற்றல் தலைப்பட்ட வர்க்கு (269)**

'ஐயையோ, இரத்தக் கொதிப்பு வந்து விட்டது, சர்க்கரை நோய் முற்றி விட்டது என்றெல்லாம் அழுது கொண்டிருப்பது தவறு. முறையாக மருத்துவம் செய்து, கட்டுப்பாடாக இருந்தால் நீண்ட நாள் வாழ முடியும். இந்நோய்கள் இல்லாதவரை விடக் கூடுதலாக மகிழ்ச்சியுடன் வாழ முடியும். அதுவே தன் முயற்சித்தவத்தின் வலிமையாகும்.

'நோற்றலின் ஆற்றல்' - பொறுத்துக் தாங்கிக் கொள்வதின் ஆற்றல். கூற்றையும் உதைத்து ஓட்டி விடலாம் என்ற நடைப்போக்கு, நிச்சயம் வெற்றி தரும் என்பதை உறுதிப்படுத்துகிறது.

அதுபோலவே, இத்தன்முயற்சித்தவமுடையார் தாம் வெற்றி பெற்று வாழ்வது போலத் தமக்கு உற்றார் உறவினரையும் வாழ்விக்க முடியும்; பகைவர்களை வென்று அழிக்க முடியும். இவையாவும் துறவுத்தவத்தால் கிடைக்கும் என்பது கற்பனை. முயற்சித்தவமுடையான் தான் மட்டுமன்றி உலகையும் வாழ்விப்பான் என்பது கருத்து.

**ஒன்னார்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும்**
**எண்ணின் தவத்தான் வரும் (284)**

துறவுத்தவமுடையார்க்குப் பகைவரும் நண்பரும் என யாரும் இருக்க முடியாது, இருக்கக் கூடாது. மிகவும் சிந்தித்தால், தன் முயற்சித் தவமுடையார் பகைவரை நாணித் தலைகுனியச் செய்வார். அவர்களை வென்று காட்டுவார். தம்முடன் மகிழ்ந்து கூடிவாழும் நண்பர்களை, ஊக்குவித்து மேன்மேலும் உயரச் செய்வார்.

**துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொல்**
**மற்றை யவர்கள் தவம்** (263)

முன்பு '**துறந்தார்க்கும் துவ்வாதவர்க்கும் இறந்தார்க்கும்**
**இல்வாழ்வான் என்பான் துணை**' என்றார் (42)

துறவுத்தவத்தின் ஒவ்வாமையை இதில் நகைச்சுவைபடக் கூறுகிறார். உலகில் மேலே கூறியது போல அனைத்தையும் அடையலாம் என்றால், எல்லோரும் அத்தவத்தைச் செய்யப் போகலாமே, ஏன் போகவில்லை.

ஒரு வேளை, துறந்தார் முதலான அனைவருக்கும் இல்லறத்தான் துணை வேண்டும். அதனால் அவர்கள் அத்துறவுத்தவத்தைக் கைவிட்டு மறந்தனர் போலும் என்று நகைச்சுவைபடக் கூறுகிறார்.

ஒருவர் 'ஓராசிரியர் பள்ளியில்' ஆசிரியராகச் சேர்ந்தார். அது மிகச் சிறிய கிராமம். அதனால் அவர் அங்கு போகாமல், ஒருவரை நியமித்துப் பள்ளிப் பிள்ளைகளை மேய்க்கச் செய்து, தாம் அரசிடம் சம்பளம் வாங்கிக் கொண்டு சுகவாழ்வு வாழ்ந்தார். இது எந்த வகையில் நியாயம். ?

ஓர் அஞ்சலகத்திற்கு அஞ்சல்தலை வாங்க ஒருவர் சென்றார். அங்கே பணி செய்தவர், மாத இதழ் வாங்கிக் கதை. படித்துக் கொண்டிருந்தார். வெளியே பலர் வரவே, வரிசையில் காத்து நின்றனர். அவர் அது பற்றிக் கவலைப்படவில்லை. மெதுவாகச் செயற்பட்டு, வாடிக்கையாளர்களை வெறுப்புடன் நோக்கிக் கடிந்து பேசினார்.

நம் நாட்டில் அரசாங்க வேலைக்குச் சேர்ந்தவர்கள் யாரும் தாம் ஏற்ற பதவிக்கும் வாங்கும் சம்பளத்திற்கும் ஏற்ப, வேலை செய்வதில்லை. எல்லோரும் அரசாங்க உத்தியோகத்தையே தேடுவதற்கு இதுதான் காரணம்.

மேலை நாடுகளில் 8 மணிக்கு வேலையில் ஈடுபட வேண்டும் என்றால் ஏழு ஐம்பத்து ஐந்திற்கு, தமக்குரிய மேசையில் வந்து அமர்ந்து விடுவார்கள். மாலை ஐந்து மணிவரை என்றால், முழுநேரமும் கருமமே கண்ணாக வேலை செய்வார்கள். உடனிருப்பவர்களிடம் தேவையின்றிப் பேசமாட்டார்கள். ஊர்க்கதை பேசுதல், அரசியல் பேசுதல் என நேரத்தை வீணாக்க மாட்டார்கள. ஐந்துமணி ஆனதும், முறைப்படி எல்லாவற்றையும் மூடி வைத்துவிட்டு, எழுந்து புறப்பட்டுவிடுவார்.

நம் நாட்டில் வேலை நேரம் முழுவதும் வெட்டிப் பேச்சுப் பேசிவிட்டு, நேரம் முடிந்தபிறகும் ஏதோ கடுமையாக வேலை செய்பவர் போல், புறப்படாமல் வேலை செய்வதாகப் பாசாங்கு செய்வார்கள். கூடுதல் நேரம் பணி செய்ததாகக் காட்டிக் கொண்டு, பல சலுகைகள் பெற முயல்வார்கள்.

ஒரு கடமையை ஏற்றுக் கொண்டவன், முழுமையாகத் தன்னை அதில் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். ஆசிரியப் பணி ஏற்றவன், பல சரக்குக் கடை வைக்கக் கூடாது. எழுத்தர் வேலை ஏற்றவன் சீட்டுப் பிடிக்கும் வேலைகளில் ஈடுபடக் கூடாது.

முழுமையாக அவனவன் தத்தம் வேலையைச் செய்தால் நாடு முன்னேறும். அதனால்தான் திருவள்ளுவர் தவத்திற்குப் புதிய விளக்கம் ஒன்று தந்துள்ளார். தவம் பற்றி வானளாவப் பேசுபவர்கள், இதை மனங்கொண்டு கடைப்பிடிப்பதில்லை.

'தவம் செய்வார் தம் கருமம் செய்வார்' – என்றார். தமது கடமையைச் செய்பவர்தான் தவம் செய்பவர் ஆவார். பணம் சேர்க்கும் ஆசை வயப்பட்டு, தமது கடமையை மறந்து, கைவிட்டுப் பலவாறு முயல்பவர்கள் வீண் வேலை செய்பவர்கள் என்றார்.

**தவம் செய்வார் தம்கருமம் செய்வார் மற்றல்லார்**
**அவம் செய்வார்ஆசையுட் பட்டு** (266)

இத்தகையவர்கள் தாமும் கெட்டு, பிறரையும் கெடுப்பவர்களாவார்கள்.

தவம் செய்வது என்பது தத்தமது கடமையைச் செய்வது, தத்தமது வேலைகளைச் செய்து கொள்வது என்ற விளக்கம் ஓர் அரிய கருத்தாகும்.

தவம்தவம் என்று கண்ணுக்கும் கருத்துக்கும் எட்டாத கற்பனைகளைக் கூறிக் கதைப்பவர்களை இது புறக்கணிக்கின்றது. தன் வேலையைத் தான் முழுமை பெற ஈடுபட்டுச் செய்வதுதான் தவம் என்னுமிது உலகில் பலரும் அவ்வாறு வாழ்வதில்லை என்பதை நினைவூட்டுகிறது.

ஒவ்வொரு அலுவலகத்தின் முன்னும் தவம் செய்வார் தங்கருமம் செய்வார் என எழுதி வைப்பதும் நல்லது.

உலகில் உயிர்கள் எல்லாம் தனித்தனி இயல்பு, பண்பு, வாழ்வு என வெவ்வேறு விதமாகப் படைக்கப்பட்டுள்ளன. அவையவை அவற்றின் இயல்புப்படி வாழ வேண்டும். மனிதர்கள் ஒவ்வொருவரும் தனித்திறமைகள். தனிப்பண்புகள், தனி வாழ்வியல் எனப் படைக்கப்பட்டுள்ளனர். ஒருவனிடம் மொழித்திறன், இலக்கியத்திறன் கூடுதலாக இருக்கும், மற்றொருவனிடம் விளையாட்டுத் திறமை மிகக் கூடுதலாக இருக்கும். ஓவியத்தில் இயல்பாக ஈடுபட்டு அதுவே நினைவாக இருப்பவனை, கணிதம் படிக்கத்தூண்டினால் அது பயன்தராது. ஒவ்வொருவனும் தன்னை அறிதல் வேண்டும் என்பர். தனக்கு எதில் ஈடுபாடு ஏற்படுகிறது என அவனே அறிய முயல வேண்டும்.

இவ்வாறு தனிப்பண்புகள், திறமைகளுடன் படைக்கப்பட்டவன். அத்திறமையை முழுமை பெற உருவாக்கிக் கொள்ள முயலவேண்டும். இவ்வாறு தனக்கென ஏற்பட்டு விட்ட துறையில் ஈடுபட்டு முன்னேறாமல், இடந்தவறி ஈடுபட்டால் தோல்வியிலேயே முடியும்.

ஒருவன் தன் துறையில் வெற்றி பெற்றால், உலகம் அவனைப் பாராட்டுகிறது. ஒருவர் இசையில் வளர்ச்சி பெற்று, புகழ் பெற்றால், அது

அவனுக்குப் பெருமை. அதற்காக உலகம் ஏன் அவனைப் பாராட்ட வேண்டும்? அவன் தன் திறமையால் உலகை மகிழ்விக்கின்றான்.

சிற்பக் கலை வல்லவனுக்கு அது அவன் தொழில். ஆயினும் அவன் உலகிற்குத் தன் திறமையை அளிப்பதால் உலகம் அவனைப் பாராட்டுகிறது.

கிரிக்கட்டு என்னும் மட்டைப்பந்து விளையாட்டில் ஒருவன் ஈடும் எடுப்புமின்றி, உயர்ந்து விளங்கினால் உலகம் அவனுக்குக் கோடிகோடியாகப் பணம் கொடுத்துப் பரிசு தந்து பாராட்டுகிறது ஏன்? அவனால் விளையாட்டுத்துறை மேம்படுகிறது. அவன் நாடு பெருமை பெறுகிறது.

**தன்னுயிர் தான்அறப் பெற்றானை ஏனைய**
**மன்னுயிர் எல்லாம் தொழும்.**

தன் உயிர் – தன்னுடன் பிறந்த தனது தனிப்பண்புகள். ஒருவன் ஓவியனாகலாம், ஒருவன் கணித மேதை ஆகலாம், ஒருவன் அறிவியல் அறிஞன் ஆகலாம். அவனவன் தன் தன் துறையில் தன்னை முழுமைபெற வளர்த்துக் கொண்டால், பிற நிலைபெற்ற உயிர்கள் அனைத்தும் தொழும். ஒருவனது உயர்வு மாந்தருக்கு மட்டுமன்றி, உயிர்கள் அனைத்திற்கும் பெருமை தரும். தன் முயற்சித் தவத்தின் உச்சநிலை இது.

மீனாட்சி
புத்தக நிலையம்